372

சக்தி மலர்

கே. எம். முன்ஷி

372

அகண்ட இந்தியா

இந்தியாவைத் துண்டாடுவது ஒவ்வொரு இ
துண்டாடுவதுபோல் ஆகும். ஏனெனிச்
'இந்தியன்' என்று யார் சொல்லிக்கொ
ஆனல், அந்தப் பாகிஸ்தான் பூச்சாண்
பலிக்காது. இந்தியா அகண்டமானது
யாதது; சிரஞ்சீவியானது. என்றும்
வாழும்; உலகுக்கு அதன் நாகரி

அகண்ட இந்தியா

கே. எம். முன்ஷி

705

320.158

ஆசிரியர்

ஸ்ரீ கே. எம். முன்ஷி, பி. ஏ., எல். எல். பி. பம்பாயில் சிறந்த வக்கீல். காங்கிரஸின் சத்தியாக்கிரக இயக்கங்களில் சேர்ந்து பலமுறை சிறை சென்றவர். காங்கிரஸ் மந்திரி சபையில் சட்ட மந்திரியாயிருந்து திறம்பட நிர்வாகம் புரிந்தவர். 'நான் மகாத்மாவைப் பின்பற்றுகிறேன்' என்ற அரிய புத்தகத்தை எழுதியவர். குஜராத்திய இலக்கியத்துக்குப் புத்துயிர் தந்தவர்களில் முக்கியமானவர். அவருடைய சிலகதைகள் ஸினிமாப் படங்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ முன்ஷி 'ஸோஷல் வெல்பேர்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். தீவிர தேச பக்தர். 'அகண்ட ஹிந்துஸ்தான்' இயக்கத்தின் தலைவர்.

அகண்ட இந்தியா

ஆசிரியர் :

கே. எம். முன்ஷி

320.158
656

மொழிபெயர்ப்பாளர் :

கொடுமுடி ராஜகோபாலன்

சக்தி காரியாலயம்

மதுரை :: காரைக்குடி

V44:511

முதற் பதிப்பு: ஜூன், 1942

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

பதிப்புரை

இந்தியா ஒரே தேசம்—எத்தனையோ ஜாதிகளும் சமயங்களும் வகுப்புக்களும் இருந்தாலும், அது ஒரே தேசந்தான். அதைத் துண்டாட இன்று நடக்கும் ஒரு விஷமமான முயற்சியை எதிர்த்து, இந்திய ஒற்றுமையைக் காப்பாற்ற, *'அகண்ட ஹிந்துஸ்தான்' என்ற ஓர் இயக்கம் தோன்றியுள்ளது. அதன் தலை சிறந்த தலைவர்களில் முக்கியமானவர் திரு. கே. எம். முன்ஷி. இவர் பம்பாயில் காங்கிரஸ் மந்திரியாயிருந்த காலத்தில், ஒரே நாளில் வகுப்புக் கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டியவர்; கர்மவீரன். சிலரைப்போல், வெறும் பேச்சாளியல்ல. தமது 'அகண்ட ஹிந்துஸ்தான்' இயக்கத்தை இந்த நூலில் விளக்குகிறார். இந்திய ஒற்றுமையில் உளங்கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

சக்தி காரியாலயத்தார்

---

* அகண்ட இந்தியா (அகண்ட ஹிந்துஸ்தானம்)—பின்னம் செய்யப்படாத இந்தியா.

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

மொழி பெயர்க்கும் முறையில், வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்க்காமல், தாராளமான வழியை நான் கையாண்டுள்ளேன்; மூல நூலின் கருத்தையும், உணர்ச்சியையும் என்னால் இயன்ற அளவு மொழி பெயர்ப்பிலும் காட்ட முயற்சித்திருக்கிறேன். பழைய சரித்திரம் சம்பந்தமான பிற்பகுதிகளை மட்டில் சுருக்கி யிருக்கிறேன். மற்றப்படி, மூலத்தினின்று சிறிதும் மாறுபடவில்லை.

மொழிபெயர்ப்பாளர்.

ஆசிரியர் முன்னுரை

இந்தப் புத்தகத்தில், 1938-ஆம் வருஷம் முதல் நான் நிகழ்த்திய பிரசங்கங்களும், எழுதிய கட்டுரைகளும் அடங்கியுள்ளன. அவைகள் பல விஷயங்களைப் பற்றியவைகளா யிருந்தாலும், இந்தியாவின் சரித்திரம், நாகரிகம், வாழ்க்கை முறை இவைகளில் பரவி நிற்கும் ஒற்றுமையை ஆராய்ந்து எடுத்துக் காட்ட, நான் செய்த முயற்சியின் பயனே.

இந்தப் பிரசுரம் இந்திய ஒற்றுமையை விரும்பும் யாவருக்கும் உபயோகமாய் இருக்கும் என்று நம்புகிறேன். இந்த ஒற்றுமையை, நாம் மனதார உணர வேண்டும்; நமது புனித லட்சியமாகக் கொள்ள வேண்டும்; அவசியமானல் போராடியும், அடைந்தே தீர வேண்டும்.

பம்பாய்,
ஜனவரி, 1942.

கே. எம். முன்ஷி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 SEP 1942
MADRAS

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	பிரிவினை வாதிகளைத் திருப்தி செய்தல்	...	1
2.	அகண்ட ஹிந்துஸ்தானம்	...	9
3.	ஈசாவின் மனோபாவம்	...	20
4.	மனப் பிராந்தி	...	39
5.	நாமும் உலக சமுதாயமும்	...	49
6.	மகா அபாயம்	...	55
7.	தேசீயம் மறுக்கப்பட்டால்?	...	72
8.	பிரஜா உணர்ச்சி	...	87
9.	ஒரு தேசிய முஸ்லிம்	...	94
10.	சிரஞ்சீவி ஹிந்துஸ்தான்	...	100
11.	இந்தியாவின் சரித்திரங்கள்	...	117
12.	சரித்திர காலப் பிரிவுகள்	...	124
13.	எதிர்ப்பு உதயம்	...	133
14.	எதிர்ப்பின் ஆதிகர்த்தா	...	139
15.	எதிர்ப்பு மனோபாவம்	...	142
16.	ஜீவனுள்ள எதிர்ப்பு	...	145
17.	நான் அறிந்த அஹிம்சை	...	151
18.	அகண்ட ஹிந்துஸ்தான முன்னணி	...	159

அகண்ட இந்தியா

1. பிரிவினை வாதிகளைத் திருப்தி செய்தல்

இந்திய ஐக்கியத்தை வற்புறுத்தி நான் செய்யும் பிரசாரத்தினால், ஒற்றுமையின் விரோதிகளே பலப்படுவார்கள் என்று குறைகூறி, சில நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதாவது, பிரிவினை வாதிகளைத் திருப்திப் படுத்திவிட்டால், இந்தியப் பிரிவினை அபாயம் நீங்கிவிடும் என்பது அவர்களுடைய கட்சி. இந்த வாதம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த நெவிலி சேம்பர்லேனுடன் ஒழிந்துவிட்டது என்று நினைத்தேன். இப்படித் திருப்தி செய்யும் கொள்கையே, பிரிவினை வாதிகளைப் பலப்படுத்துகிறது. அகண்ட ஹிந்துஸ்தானத்துக்காக வாதிப்பவர்கள், இதனால் ஏமாந்துவிடக் கூடாது. பிரிவினை வாதிகள், இவ்வாறு திருப்திசெய்யப்படுவதால்தான் பலம் அடைந்திருக்கிறார்கள். இந்தியர்கள் இதை உறுதியுடன் எதிர்க்காவிட்டால், விரைவில் நமது தேசம் சின்னபின்னமாகிவிடும்.

எந்த அரசியலையும் தடைசெய்யும் அதிகாரத்தைப் பிரிவினை வாதிகளுக்குச் சலுகையாக அமெரிதுரை அளித்திருப்பதுதான் நமக்குப் பெருத்த அபாய

மாக இருக்கிறது. அதுவே நமது சண்டையின் முதல் கட்டம். இந்தக் கட்டத்திலேயே நாம் தோற்று விட்டால், நாம் பூரணமாகத் தோற்றே விடுவோம்.

பிரிட்டிஷ் சர்க்கார், தங்களது இந்தக் கொள் கையை மாற்றிக்கொள்ளும்படி செய்ய வேண்டும். யுத்தம் நடந்தாலும் நடக்காவிட்டாலும், நம்து அர சியல் முன்னேற்றத்தைப் பிரிவினை வாதிகளின் தூண்டுதலால் தடை செய்வதில்லை என்று இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அமெரி துரை, 'முதலில் இந்தியா' என்ற தலைப் பின்கீழ் இந்திய ஐக்கியத்தைப்பற்றிப் பிரமாதமாகப் பேசினார். ஆனால், பிரிவினை வாதிகளின் பயமுறுத்தல் களால், அவர் பயந்து பின்வாங்கிவிட்டார். இந்தி யாவின் ஒற்றுமையை, பிரிட்டிஷ் சர்க்கார் ஆதரிக்கப் போகிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள, இந்தி யப் பிரிவினையை எதிர்க்கும் பெரும்பான்மையான இந்திய மக்கள் கடமைப்பட்டவர்கள். பிரிட்டிஷார் அப்படி ஆதரிக்கவில்லை என்றால், இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெற அவர்களுக்குப் பாத்தியதை யில்லை. அவர்களின் இஷ்டப்படி, இந்திய அரசாங்கத் தில் பெயரளவில் மாறுதல்கள் செய்யப்படலாம். அவர்களால் ஏற்படுத்தப்படும் அதிகாரமில்லாத 'கமிட்டி'களுக்கு, எந்தப் பெயரையும் சூட்டலாம். ஆயினும், இந்திய மக்கள் இவைகளை யெல்லாம் பொருட்படுத்தப் போவதில்லை.

இப்பொழுது யுத்தம், பிரிட்டனின் தற்காப்புக் காக மட்டுமன்றி, இந்தியாவின் பாதுகாப்புக்காகவும் நடக்கிறது என்று எல்லோரும் உணர்ந்து வருகிறார் கள். இந்தியப் பொதுஜன அபிப்பிராயம், இச்

சமயம், யுத்தத்துக்குச் சாதகமாகத் திரட்டப்பட வேண்டுமென பிரிட்டிஷார் விரும்பினால், அவர்கள், தாங்களும் இந்திய ஐக்கியத்தை விரும்புகிறார்கள் என்றும், தங்களுக்கு ஏற்படக்கூடிய தற்காலிக சௌகரியத்துக்காக இந்தியாவின் எதிர்கால அரசியல் முன்னேற்றத்தைக் கெடுத்துவிடமாட்டார்கள் என்றும் நிரூபிக்க வேண்டும்.

பிரிவினை வாதிகளைத் திருப்தி செய்வதில் நம்பிக்கையுள்ளவர்கள், வங்காள மாகாணக் காங்கிரஸ் 'கமிட்டி'க்கு, டாக்காக் கலக விசாரணைக் கமிட்டியார் சமர்ப்பித்த அறிக்கையைப் படிக்க வேண்டும். படிப்பவருக்கு அந்த அறிக்கை மிகவும் மனவேதனையைக் கொடுக்கும். கலகத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி, 'கமிட்டி' செய்த முடிவுகள் மீது நான் இப்பொழுது குணதோஷம் கூற விரும்பவில்லை. 'கமிட்டி'யின் யாதாஸ்தில், வங்காளத்தின் பிரதம மந்திரி முதலிய பொறுப்புள்ள முஸ்லிம்களின் சொற்பொழிவுகள் காணப்படுகின்றன. இந்தப் பிரசங்கங்களில் காணப்படும் மனோபாவத்தை ஒரு நாளும் திருப்தி செய்ய முடியாது.

பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கும் வங்காளப் பிரதம மந்திரியின் வாக்கிலிருந்து உதிர்ந்த சில 'உயர்ந்த பொன்மொழிகள்' பின்வருவன:

> "**முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் உழைத்தால் மீண்டும் அவர்கள் இந்த நாட்டை ஆளும் நற்காலம் வரும்.**"

* * *

"நான் அல்லாவைத் தவிர, வேறு எவருக்கும் பயந்தவனல்ல. இருபத்திரண்டு கோடி ஹிந்துக்களை நான் தைரியமாக எதிர்ப்பேன். எனக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டு. அதனுல், ஹிந்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாயிருந்தாலும், அவர்களை அடக்கிவிடுவேன். முஸ்லிம்களுக்கு மட்டுமே நல்ல எதிர்காலம் உண்டு. 'காபிர்'களின் எதிர்காலத்தைப்பற்றி, அவர்களுக்கே நிச்சயமில்லை."

* * *

"ஜனத்தொகைக் கணக்கில், வங்காள ஜனத்தொகையில் முஸ்லிம்கள் நூற்றுக்கு முப்பதாகவும் ஹிந்துக்கள் நூற்றுக்கு அறுபதுக்கு மேலாகவும் காட்டப்படுவார்கள் என்று நம்புகிறேன். வக்கீல்கள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள், பிராம்மணர்கள், பிராமணரல்லாதார்கள் முதலிய பலவித ஜாதிகள்-இவர்கள் எல்லோருமே, தங்களுடைய தொகைக் கணக்கை அதிகப்படுத்துவதற்காக, வேண்டுமென்றே ஒரேவிதமாய்ப் பொய்க் கூற்றுகளைப் பரப்பினுல் வேறு என்ன நடக்கும்?"

* * *

பைராப்பில் நடந்த மகாநாட்டில் மற்ெருரு வங்க மந்திரியான ஜனுப். ஷுரவாடி, முஸ்லிம்களை, "முஸ்லிம் லீக் கொடியின்கீழ் ஒன்றுபட்டு ஹிந்துக்களிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்குங்கள்" என்று வற்புறுத்தினுர். உள்நாட்டு மந்திரி, குவாஜா ஸர். நாஸிமுதின், ஒரு ஹிந்துவுக்குச் சொந்தமென்று சொல்லப்

படுகிற ஒரு ஸ்தலத்தில், அதன் சொந்தக்காரனின் அனுமதியின்றி, ஒரு '**பாகிஸ்தான் தோட்டத்தை**'த் திறந்துவைத்தார்!

வங்காள மந்திரி சபையின் பத்திரிகையான '**ஸ்டார் ஆப் இந்தியா**' பின்வருமாறு எழுதியது:

"வங்காளத்தில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், முஸ்லிம்கள் தங்கள் பொறுமையை இழக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இந்த அற்ப எலிகளுக்கு, 'சிங்கம் இறந்து விடவில்லை, தூங்கிக்கொண்டுதான் இருக்கிறது' என்று காட்டவேண்டிய காலம் முஸ்லிம்களுக்கு வந்துவிட்டது. ஹிந்துக்களின் தலைவர்கள் தலைகால் தெரியாமல் திரிகிறார்கள். உண்மையாகவே தாங்கள் விஷமமான வகுப்புவாதிகள் என்பதை, அவர்கள் காண்பித்து விட்டார்கள். அவர்கள் எல்லோருக்குமே சரியான பதில் அளிக்கப்படும். வங்காளம் யாருக்குச் சொந்தமானது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளப் போகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய அளவு பாடமும் போதிக்கப்படும்."

* * *

மந்திரிசபையின் மற்றுமொரு பத்திரிகையான '**ஆஸாத்**' 1941-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 10-ஆந் தேதி ஒரு பாட்டைப் பிரசுரித்தது. அதில், முஸ்லிம் லீக் கொடியின்கீழே கூடிய வீரர்களை, விக்கிரக ஆராதனை செய்யும் ஹிந்துக்கள் மீது படையெடுக்கும்படி சொல்லியிருந்தது. "வேண்டிய அளவு ரத்தத்தைச் சிந்தும்படியும்" இந்த வீரர்கள் தூண்டப்பட்டார்கள். "**எங்களுக்குப் பாகிஸ்தான் வேண்டும். பேச்சு**

வார்த்தை மூலம் இது கிட்டாவிட்டால், கத்திகளையும் ஈட்டிகளையும் உபயோகப்படுத்த, முஸ்லிம்கள் தயங்கமாட்டார்கள்" என்று அந்தப் பாட்டு சொல்லுகிறது.

மேலும் ஒரு செய்யுள் பின்வருமாறு கூறுகிறது:

"சீக்கிரம் வாருங்கள்! உங்களுக்கு விடுதலை வேண்டுமென்றால், ஹிந்துக்களின் வீடுகளையெல்லாம் கொளுத்துங்கள்! கொளுத்துங்கள்!! கொளுத்துங்கள்!!! இதனால் எல்லாக் கஷ்டங்களும் ஒழியட்டும்!"

தம்முடைய மந்திரிகளைக் கட்டுப்படுத்தும் விசஷே அதிகாரம் கொண்டவர் பிரிட்டிஷ் கவர்னர். மாகாணத்தின் சமாதானம் நிலை குலையாது காக்க வேண்டியது அவருடைய கடமை. ஆனால், அவர் தமக்குள்ள இந்த அதிகாரத்தை உபயோகப்படுத்தாமல், இந்தப் பிதற்றல்களுக் கெல்லாம் தாமும் உடந்தையாக மௌனமாய் உட்கார்ந்திருக்கிறார். அவரைக் குறைகூறிப் பயனில்லை. தம்முடைய நாட்டுக்கு உண்மையாக நடந்துகொள்வதே அவரது கடமை அல்லவா!

சமீபத்தில், ஸிந்து மாகாணத்தில் ஸுல்தான் கோட்டில் நடந்த முஸ்லிம் லீக் மகாநாட்டுக்கு ஸிந்து மாஜி மந்திரியான **ஜனாப். ஜி. எம். ஸையத்** தலைமை வகித்தார். அந்த மகாநாட்டில் ஓர் உர்துப் பாட்டு பாடப்பட்டது. அதன் கருத்து என்னவென்றால்,—

"பாகிஸ்தானில் இஸ்லாத்துக்கென, தனித் தாயகம் இருக்கட்டும்.

"பாகிஸ்தானில் முஸ்லிம்கள் அல்லாதாரின் முகங்களை நாம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை.

"பாகிஸ்தானில் விக்கிரக ஆராதனை என்ற முட்கள் இருக்கமாட்டா. அப்போதுதான் அந்த முஸ்லிம்களின் தாயகம் பிரகாசமாய் இருக்கும். ஹிந்துக்கள் அடிமைகளாக இருக்கவே, உரிமையுள்ளவர்கள்; அரசாங்க நிர்வாகத்தில் கலந்துகொள்ள, அவர்கள் தகுதி அற்றவர்கள். அவர்கள் ஆட்சிபுரிவதில் எங்குமே வெற்றி பெறவில்லை."

அதிகாரமும், செல்வாக்கும் வகிக்கும் மனிதர்கள் இம்மாதிரியான உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் கருத்துக்களைப் பரப்பினால், நாம் என்ன செய்வது? அவர்களிடம் தாழ்மையுடன் மன்றாடுவதா? பொறுப்புடன் நடந்துகொள்ளும்படி, தலைவணங்கி, அவர்களைக் கெஞ்சுவதா? பின்னர், அவர்களை எப்படித் திருப்தி செய்வது? நாம் நம்முடைய தேவாலயங்களில் கூடி, கடவுள் கருணைகொண்டு, அவர்களுக்கு நல்லெண்ணத்தையும் மரியாதையையும் அருளுமாறு பிரார்த்திப்போமா?

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக, காந்திஜீ உழைத்து வருகிறார். இதனால், இந்து சமூகத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டதாக, அவர்மீது சில ஹிந்துக்கள் கூட, குற்றம் சாட்டுகிறார்கள். காந்திஜீயின் எண்ணங்களும் திரித்துக் கூறப்படுகின்றன. நேசபாவத்துடன் அவர் செய்யும் முயற்சிகள் எல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன. பிரிவினை வாதிகளின் பத்திரிகைகளில் 'இஸ்

லாத்தின் விரோதி' என அவர் தாக்கப்படுகிறார். அவரது உயிருக்குக்கூட ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

பெருந்தன்மையுள்ள தேசபக்தரும், இஸ்லாம் மத நூல்களில் சிறந்த ஆராய்ச்சி யாளருமான **மௌலானா அபுல்கலாம் ஆஸாத்**, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்ட ஐக்கிய இந்தியாவைத்தான் காண விரும்புகிறார். அதற்காக அவர் கூட, இந்தப் பிரிவினை வாதிகளால் பெரிதும் இகழப் படுகிறார்.

அஹிம்சாதர்ம மூர்த்தியான காந்திஜீயும், இந்தியாவின் தலைசிறந்த முஸ்லிம் தலைவரான மௌலானா ஆஸாதும் சாதிக்க இயலாததை, பிரிவினைவாதிகளைத் திருப்தி செய்து விடுவதாலேயே சாதித்துவிட முடியுமா?

கோழைத்தனமாக இப்படித் திருப்திசெய்ய முயலுபவர்களின் தவறுகளால், அவர்களுடைய லட்சியமே நாசமாகிவிடும்.

பரஸ்பரம் மரியாதையாய் நடந்துகொள்வதனாலும் விட்டுக்கொடுப்பதாலுமே, அன்பு ஜனிக்கிறது. பயமுறுத்தல்களாலும், பயமுறுத்துவோரைத் திருப்தி செய்வதாலும், நேசபாவம் உண்டாகப் போவதில்லை.

இந்திய ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறவர்கள் அகண்ட ஹிந்துஸ்தானப் பிரசாரத்தை மன உறுதியுடன் நடத்திவந்தால், பிரிவினை வாதிகள்கூட அவர்களை மதிக்க ஆரம்பித்து விடுவார்கள். இரவைத் தொடர்ந்து பகல் வருவதுபோல, அன்பும் பரஸ்பர உறவும் தாமே வரும்!

2. அகண்ட ஹிந்துஸ்தானம்

ஒரு வீட்டில் பிசாசின் உபத்திரவம் இருந்தது. ஒவ்வோர் இரவும் "நான் இதோ வந்து விட்டேன், அதோ வந்து விட்டேன்" என்ற ஒரு பயங்கரமான குரலை அந்த வீட்டிலுள்ளவர்கள் கேட்டார்கள். அவர்கள் மிகவும் பயமடைந்தார்கள். மந்திரவாதிகளை அழைத்து, பூஜை செய்யச் சொன்னார்கள். எவ்வளவோ பிரார்த்தனைகளையும் செய்து கொண்டார்கள். பிசாசுகளை ஓட்டும் 'வைத்தியர்'களுக்கு ஏராளமாகப் பணத்தையும் கொடுத்தார்கள்.

ஆனால், ஒரு மாறுதலும் ஏற்படவில்லை; தினந்தோறும் நடுநிசியில் அதே குரல் வழக்கம்போலவே அவர்களைப் பயமுறுத்திக்கொண்டுதான் இருந்தது. வீட்டில் இருப்பவர்கள், பயத்தால் நடு நடுங்கியவர்களாய், போர்வைகளுக்குள் ஒளிந்து கொண்டார்கள்.

ஒரு நாள் நள்ளிரவில், அதே குரல் அலறிற்று. வீட்டில் ஒருவன் தன் பொறுமையை இழந்தான். தன்னுடைய போர்வையை விட்டெறிந்துவிட்டு, விளக்கை ஏற்றிக்கொண்டான். "வா, உன்னாலானதைச் செய்" என்று உரக்கக் கூவினான்.

உடனே பிசாசும் அந்த வீட்டைவிட்டு ஓட்டம் பிடித்தது. திரும்பி, அது தலைக்காட்டவே யில்லை.

இந்தியாவைக் கூறு போட்டாகவேண்டுமென்று சிலர் அடிக்கடி சொல்லுகிறார்கள். நாம் சம்மதிக்காவிட்டால், பயமுறுத்துகிறார்கள். அந்தப் பிசாசு

பிடித்த வீட்டில் பொறுமையிழந்த சொந்தக்காரனின் கதையைப்போல, இதற்கும் ஒரே பதில்தான் உண்டு. பாபு ராஜேந்திரப் பிரஸாத், சமீபத்தில் அந்தப் பதிலைக் கூறிவிட்டார் :

''இந்தியா ஒரே தேசமாயிருந்தது ; இப்பொழுதும் இருக்கிறது ; இனிமேலும் இருக்கத்தான் போகிறது.''

இந்தியா ஒரே தேசமாய்தான் இருக்கவேண்டும் என்பதற்கு, ஆறு முக்கியக் காரணங்கள் உண்டு.

முதலாவது, முஸ்லிம்களே பிரிவினையை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

இரண்டாவது, ஹிந்துக்கள் அதற்கு எக்காலத்திலும் சம்மதிக்கமாட்டார்கள்.

மூன்ருவது, தேசீய இந்தியா அதை விரும்பவில்லை.

நான்காவது, இந்திய சமஸ்தானங்கள் பெரும்பாலும் அதற்கு இணங்கமாட்டா.

ஐந்தாவது, பிரிட்டிஷார் அதற்கு உடந்தையாக இருக்கமாட்டார்கள்.

ஆருவது, உலக நிலைமையும் அதை அனுமதிக்காது.

பெரும்பாலான முஸ்லிம்கள் இந்தப் பிரிவினையை நாடமாட்டார்கள். அவர்கள், எங்கிருந்தாலும், பாரதமாதாவின் புதல்வர்களேயன்றி, இந்தியாவின் ஒரு பிரிவுக்கு மட்டும் புதல்வர்கள் அல்ல. முஸ்லிம்கள், ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள் இவர்களில் ஒருவராவது ஒரு தனி மாகாணத்தை மட்டும் தம் தாய்நாடாகக் கருதுவதில்லை. ஒவ்வொருவரையும் முழுத் தேசத்தோடும் இணைக்கும் அரசியலும் பொருளாதார பந்தங்களும் அவரையும்

இணைக்கின்றன. அவருடைய வாழ்க்கை, ஆதியில் மட்டுமன்றி, இன்றும், எதிர்காலத்திலும்கூட, முழுத் தேசத்தையுமே அஸ்திவாரமாகக் கொண்ட சமுதாய வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது.

அதனுல்தான், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள நான்கு மாகாணங்களில் எல்லைப்புற மாகாண மந்திரிசபை—தற்போது கலைக்கப்பட்டிருந்தாலும்—தேசீயப் போக்குள்ளது. ஸிந்து மந்திரி சபையும் அப்படியே. பிரிவினையில் பற்றில்லாத ஹிந்துக்களையும் முஸ்லிம்களையுங் கொண்ட கூட்டு மந்திரிசபைகளே வங்காளத்திலும் பஞ்சாப்பிலும் இருக்கின்றன. இந்த நான்கு மந்திரி சபைகளிலும் பிரிவினையை ஆதரிப்போரே இல்லை. பாகிஸ்தானுக மாறவேண்டிய இந்த நான்கு மாகாணங்களிலும், நாலரைக் கோடிக்கு மேலாக முஸ்லிம்கள் இருக்கிருர்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவில் ஹிந்துக்கள் பெரும்பான்மையாகவுள்ள மாகாணங்களிலோ எனில், இரண்டு கோடிக் கதிகமாகவே முஸ்லிம்கள் வசிக்கிருர்கள். இந்தியா, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான தாய்நாடு என்னும் உணர்ச்சி இந்த முஸ்லிம்களிடம் இருக்கிறது. தங்களுடைய வீட்டிலேயே தங்களை அந்நியர்களாக இவர்கள் பாவித்துக்கொள்ள மாட்டார்கள். ஒவ்வோர் இந்தியனும் சுகமாக வாழ்வதற்கான வசதிகளைக் கொடுத்து, சக்தியுடனும் கீர்த்தியுடனும் இருக்கும் வல்லரசாக, ஐக்கியமான இந்தியாதான் இருக்கமுடியும். இதை, ஹிந்துக்கள் மீதுள்ள வெறுப்பால் குறுகிய திருஷ்டி

யுடன் இருபபவர்களைத் தவிர, மற்றவர் காண்கிறார் கள்.

மொமின்களின் பிரசித்திவாய்ந்த தலைவர் ஜனுப் அப்துல் க்வயூம் அன்சாரி, ஒரு பேட்டியின்போது பின்வருமாறு கூறினார் :

"முஸ்லிம் லீக், ஐந்து கோடி முஸ்லிம்களைக் கொண்ட (அநாவது இந்திய முஸ்லிம்களில் ஏறக்குறையப் பாதி) மொமின்களின் அரசியல் அல்லது மற்ற நலன்களின் பிரதிநிதி என்பதை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. மொமின்களுக்கு, அகில இந்திய மொமின் மகாநாடு என்ற தனி ஸ்தாபன மிருக்கிறது. இந்திய முஸ்லிம்கள் அனைவருக்கும் தானே பிரதிநிதித்துவ சபை என்று முஸ்லிம் லீக் கொண்டாடும் பாத்தியதையை, இந்த மொமின் ஸ்தாபனம் பல காலமாக மறுத்து எதிர்த்து வந்திருக்கிறது. மொமின்களின் தாய் நாடாகிய இந்தியாவின் க்ஷேமத்துக்கு, லீக்கின் பாகிஸ்தான் திட்டம் கேடு விளைவிக்கும் என்று அவர்கள் (மொமின்கள்) கண்டிக்கிறார்கள்."

அகில வங்காளக் கிருஷிகப் பிரஜா சமிதியின் தலைவர் ஜனுப் ஸையத் ஹபிபூர் ரஹ்மான் சில நாட்களுக்கு முன்பு சொன்னதாவது :

"முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்ததும், இந்தியாவையே தங்களது தாய் நாடாக்கிக் கொண்டுவிட்டார்கள். புதியதொரு தேசிய வாழ்வையும் அவர்கள் நிர்மாணித்தார்கள். உர்து - ஹிந்தி என்பதான ஒரு பொது மொழியையும் அவர்கள் சிருஷ்டித்தார்கள்...........

..................ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இவர்களுடைய கூட்டுறவால் புதியதொரு நாகரிகம் பூத்தது. இரண்டு சமூகங்களுக்கும் பொதுவாயில்லாத அம்சங்கள் மிகவும் சொற்பம். முஸ்லிம்களில் பெரும்பாலோர் ஹிந்துக்களுடன் இரண்டறக் கலந்து விட்டார்கள் என்றாலும் மிகையாகாது.................சமூகங்களை யெல்லாம் விட உயர்ந்தது தேசம் என்று நாம் மதிக்கவேண்டும். எங்குமே தேசீய நலன்களும் உரிமைகளும், சமூக நலன்களும் உரிமைகளும் ஒத்தே யிருக்கின்றன. துரதிருஷ்டவசமாக, முஸ்லிம் லீக்கின் கொள்கையால், இந்தியாவில் மட்டும் அவ்வாறு இல்லை. இது மிக மிக வருந்தத்தக்க விஷயம்.''

சமீபத்தில், தென்னிந்தியப் பிரிவினை எதிர்ப்பு மகாநாட்டில் தலைமை வகித்த, மத்திய மாகாண மாஜி மந்திரி ஜனாப் முகமத் யூசப் ஷெரீப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்தியாவைப் பலப்படுத்தி, சமாதானத்தை நிலைநாட்டுவதை விட்டு, முஸ்லிம் நாடுகளாகவும் ஹிந்து நாடுகளாகவும் இதைக் கூறு போட்டால், நமது நாடு, ஆத்திரமான தூஷணைகளும் வகுப்புக் கலகங்களும் நிறைந்து, சதா கொந்தளிக்கும் அக்கினி மீதுள்ள ஒரு கொப்பரை போலாகிவிடும். அப்படிப்பட்ட தேசத்தின் சுதந்தரம் எவ்வளவு காலந்தான் நீடிக்க முடியும்? இந்தியாவைப் பிளவு படுத்துவதால், தேசம் முழுமைக்குமோ அல்லது ஒரு சமூகத்துக்கோ விமோசனம் ஏற்படப் போவதில்லை. தனித் தனிச் சமூகங்கள்

என்ற ரீதியில் இந்தியரின் மனேபாவம் இருக்கும் வரை, நம்மிடையே சந்தேகங்களே அதிகமாக வளரும்.''

இஸ்மைலி கோஜா சமூகத்தின் தலைவர்களில் ஒருவரான ஜனுப் முகமத் பாய் ரவுஜீ பின் வருமாறு கூறுகிருர் :

''பொறுப்புள்ள முஸ்லிம் தலைவர்கள், பாகிஸ்தான் சித்தாந்தம் தீவிரமாகப் பரப்பப்பட்டு வருவதை, உடனடியாக எதிர்க்காமல் விடுவது மிகவும் பரிதபிக்கத் தக்க விஷயம். 'நம்பிக்கை யிழந்தவர்களின் கூச்சல்தான் பாகிஸ்தான் சித்தாந்தம்' என்பதை, அறிவாளிகளான இந்திய முஸ்லிம்கள் உணர்ந்துவிட்டார்கள். இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால், முஸ்லிம் சமூகத்துக்கே கேடு விளையும். இந்த அர்த்தமற்ற கொள்கையை ஏற்றுக்கொள்வது என்பது நமது நாட்டின் அரசியல் வாழ்க்கையைத் தற்கொலை செய்துகொள்வதாகும்.''

மேலும், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தேச முழுதுமே பொருளாதாரத்தினல் பிணைக்கப்பட்ட சம்பந்தங்கள் இருக்கின்றன. இவை அழிக்கக்கூடாதவை. வேண்டுமென்றே இவை அழிக்கப்பட்டுவிட்டால், முஸ்லிம்களே அதிகமான கெடுதல்களுக்கு ஆளாவார்கள். முஸ்லிம்களின் வாழ்க்கை நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். வியாபாரத் துறையில், ஹிந்து லேவாதேவிக்காரர்கன், முஸ்லிம் வியாபாரிகளுக்குப் பணம் கொடுத்து உதவுகிருர்கள். அநேக தொழில்களில், அவைகளின் சில பாகங்கள் ஹிந்துத் தொழிலாளிகளாலும், சில பாகங்கள் முஸ்லிம்

தொழிலாளிகளாலும் செய்யப்படுகின்றன. முஸ்லிம்களும், ஹிந்துக்களும் வியாபாரத்தில் கூட்டாளிகளாக இருக்கிறார்கள். காந்திஜியின் நேரடியான தலைமையின் கீழ் நடைபெறும் அகில பாரத சர்க்கா சங்கத்தின் தொழிலாளிகளில் பெரும்பாலோர் முஸ்லிம்களே. பல இடங்களில் முஸ்லிம்கள் தொழிலாளிகளாகவும், ஹிந்துக்கள் முதலாளிகளாகவும் இருக்கிறார்கள். அநேகம் கிராமங்களில் ஹிந்துக்கள் விவசாயிகளாகவும், முஸ்லிம்கள் தானிய வர்த்தகர்களாகவும் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான கிராமங்களின் சமுதாயப் பொருளாதார அமைப்பு, ஹிந்து-முஸ்லிம் ஒத்துழைப்பு என்ற அஸ்திவாரத்தின் மீது நிற்கிறது. இந்த அற்புதமான உறுதியுள்ள ஒத்துழைப்பைப் பிரிப்பது என்பது பெருந்தீங்காகவே முடியும்.

சீக்கியர்களும் இந்தியாவைத் துண்டாட ஒரு பொழுதும் அனுமதிக்க மாட்டார்கள். இந்தியக் கிறிஸ்துவர்களோ என்றால், முழுக்க முழுக்கத் தேசிய வாதிகள். அகில இந்தியக் கிறிஸ்துவர்கள் சமஷ்டியின் தலைவர் **டாக்டர் வீ. கே. ஜான்,** சமீபத்தில் திருச்சியில் பின் வருமாறு பேசினார்:

> **“ இந்தியக் கிறிஸ்துவ சமூகம், பாகிஸ்தான் திட்டம் அல்லது இந்தியாவைப் பல துண்டுகள் ஆக்கும் வேறு எந்தத் திட்டத்தையும், எதிர்க்கிறது.”**

இந்தியாவைக் கூறு போடுவது பொதுஜன அபிலாஷைகளுக்கே அடியோடு விரோதமாகும். தேசிய வாதிகள் அனுபவித்த சொல்லொணுக் கஷ்டங்களும்,

அவர்கள் நிர்மாணித்த உயரிய தத்துவங்களும் முறைகளும், அவர்கள் ஆற்றிய அரிய சேவைகளும் சேர்ந்தே நமது தேசீய வாழ்வை உருவகப்படுத்தியுள்ளன. அந்தத் தேசீய வாழ்வு, உடைத்தெறியவோ அல்லது பலவீனப்படுத்தவோ முடியாத அவ்வளவு பலமுள்ளதாகும்.

இந்தியத் தேசீயத்தின் வடிவமாகத் திகழும் காந்திஜி கண்டிப்பாகச் சொல்லுகிருர்:

*"ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நான் சொல்லவேண்டிய செய்தி ஒன்றுண்டு. எட்டுக் கோடிக்கு அதிகமாயுள்ள முஸ்லிம்கள் எதிர்த்தால், இந்தியா சுதந்தரத்தைப் பெறமுடியாது. ஆனல், வயது வந்த ஒவ்வொரு முஸ்லிமும் தனது ஓட்டுரிமை மூலம் நிரூபித்தாலொழிய, எல்லா முஸ்லிம்களுமே இந்திய விடுதலையின் எதிரிகள் என்று நான் நம்பத் தயாரா யில்லே. ஹிந்துக்களிட மிருந்து பிரிந்து தனியே தாங்கள் அரசியல் விமோசனத்தை அடைய விரும்புவதாக, அவர்கள் கூறக்கூடும். ஒவ்வொரு மூலேயிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏனையோரும் சேர்ந்து வாழும் ஓர் எளிய தேசமே நமது இந்தியா. இந்தத் தேசத்தைத் துண்டாடுவது என்பது அராஜகத்தைவிட மோசமானது. இந்தப் பிரிவினையை அனுமதிக்கவே கூடாது. நான் ஹிந்து என்பதற்காக இப்படிச் சொல்லவில்லே. இந்த மேடையில், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள் முத

---

* 1940, செப்டம்பர், 22-ஆந் தேதி 'ஹரிஜன்' இதழில் வந்த கட்டுரை.

லிய எல்லோருடையவும் பிரதிநிதி என்ற முறையிலேயே இதைச் சொல்லுகிறேன். நான் அவர்களுக்குச் சொல்லுவதாவது; 'இந்தியாவைத் துண்டு போடுமுன் என்னைத் துண்டித்து விடுங்கள். இரு நூறு வருஷங்களாக இந்தியாவை ஆண்ட மொகலாயர்கள் செய்யத் துணியாததை நீங்கள் செய்யக்கூடாது.' முஸ்லிம்களுக்குச் சொல்வது, சீக்கியர்களுக்கும் பொருத்தமானதுதான். முப்பது லட்சமுள்ள சீக்கியர்கள், இந்தியாவின் சுயராஜ்யத்தை எதிர்ப்பார்களேயானால், நாம் அவர்களை அஹிம்சை முறையில் சமாளிப்போம். மற்றும் சில தடைகளை, அந்நிய ஆதிக்கம் நம்மீது சுமத்தியிருக்கிறது. நாம் பொறுமையுடன் சமூக சமாதானத்துக்காக உழைக்க வேண்டும். 'இஸ்லாம்' என்றாலே சமாதானம் என்றுதான் பொருள். அந்தச் சமாதானம், முஸ்லிம்களுக்கு மட்டும் அல்ல; உலக முழுவதற்குமே உரியதாகும்."

மறுபடியும் அவர் சொன்னார்:

* "பிரிவினையை வாஸ்தவமாகவே இந்திய முஸ்லிம்கள் வற்புறுத்தினால், அஹிம்சாவாதியாகிய நான் அதைப் பலாத்காரமாக எதிர்க்க முடியாது. ஆனால், இந்தப் பிரிவினைக்கு நான் சம்மதித்தவன் ஆகிவிட மாட்டேன். பிரிவினையைத் தடுப்பதற்கு எல்லா விதமான அஹிம்சா சாதனங்களையும் கையாளுவேன். ஏனென்றால், பல்லாண்டுகளாக, கணக்கற்ற ஹிந்துக்களும்-முஸ்லிம்

* 1940, ஏப்ரல் 13-ஆந் தேதி 'ஹரிஜன்' இதழில் வந்த கட்டுரை.

களும் ஒரே குடும்பமாய் வாழ்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை யெல்லாம், இந்தப் பிரிவினைத் திட்டம் சீர்குலைத்துவிடப் பார்க்கிறது. பிரிவினை என்பது ஓர் அசத்தியம். ஹிந்து மதமும் 'இஸ்லா'மும் விரோதமான இரண்டு நாகரிகங்களையும் தத்துவங்களையும் பிரதிபலிக்கின்றன என்னும் கூற்றை நான் முழு மூச்சுடன் எதிர்க்கிறேன். இந்தக் கூற்று சரியானது என்று நான் ஒப்புக்கொள்வது என்பது, கடவுளையே நான் மறுப்பது போல் ஆகும். திருக்கொரானின் கடவுளும், கீதையின் கடவுளும் ஒருவர்தான். நாம் அனைவரும், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அதே கடவுளின் குழந்தைகளே யாவோம். இதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். முன்பு ஹிந்துக்களாயிருந்த பல கோடி இந்தியர்கள், 'இஸ்லா'த்தைத் தழுவியவுடன் அந்நியர் ஆகிவிடுகிறார்கள் என்ற எண்ணத்தை நான் அடியோடு எதிர்த்தாக வேண்டும்.''

அகண்ட ஹிந்துஸ்தானம் என்பது புத்தியுள்ள எவனும் இகழமுடியாததோர் உண்மை.

இந்திய ஐக்கியப் பிரச்னையில், ஒரு விதமான தர்க்கமும் இருக்கக்கூடாது. பிரிவினையை அடிப்படையாகக்கொண்டு, ஒருவிதமான ஒப்பந்தமும் செய்துகொள்ளக்கூடாது. பலவந்தமும், கஷ்டமும், அடிமைத்தனமும்—இவைகள் எவ்வளவு கொடுமையாய் இருந்தபோதிலும், இம்மாதிரியான பிரிவினை ஏற்பாட்டுக்கு நாம் சம்மதிக்கவே கூடாது.

அமர்நாத்திலிருந்து ராமேசுவரம் வரை, துவாரகையிலிருந்து காளிகட்டம்வரை, நமது பூமி ஒன்றே.

மூவாயிரம் வருஷங்களாக இந்தியர் செய்த தியாகத்தால், அது புனிதம் அடைந்திருக்கிறது. நம்முடைய தேவர்களும், மூதாதையர்களும் வணங்கிய ஆலயமே அது. இந்தியப் புதல்வர்களின் அழியாச் செல்வமான இந்த ஒன்றுபட்ட இந்தியா ஊழிக்காலம்வரை ஒன்ருகவே இருக்கும். அதன் ஐக்கியமே அவர்களுடைய மதம். அதுவே அவர்களுக்கு மோட்ச சாதனம்.

ஒன்று சேர்க்கப்பட்டதைப் பிளக்க எத்தனிப்பவர்கள் கோடிக் கணக்கான இந்தியர்களின் பிரேதங்கள் மீது நடக்கவேண்டி வரும்.

அதன் பின்னரும்கூட, இந்தியா ஒரே தேசமாய்த் தான் இருக்கப் போகிறது.

3. ஈசாவின் மனோபாவம்

சித்தியவார்ப் பிரதேசத்தில் வழங்கும் கீதங்களில் ஈசா என்னும் முஸ்லிம் வீரனின் பெயர் பிரகாசிக்கிறது. ஜாட் ஜாதியில் முஸ்லிம் மதத்தைத் தழுவிய ஒருவரின் அழகிய மகளை, ஒருசமயம் சிந்து நாட்டு ஸம்ரா, இச்சித்தான். அவனுக்கும், அவனை எதிர்த்த முஸ்லிம்களுக்கும் நடந்த யுத்தத்தில், முஸ்லிம்களில் ஆயிரம் பேர் மாண்டார்கள். எஞ்சியிருந்தவர்கள் ரஜபுத்ர வகுப்பைச் சேர்ந்த பாரமரார்களின் உதவியை நாடினார்கள். ஒரு முஸ்லிம் மங்கையின் நற்பெயரைக் காப்பதற்காக, நூற்றுக்கணக்கான ஜாட் முஸ்லிம்களும், ஹிந்துப் பாரமரார்களும் ஒருங்கே உயிரிழந்தார்கள்.

மாண்டாவாக் குன்றத்தின்மீது, ஈசா என்ற முஸ்லிம் வீரனும், அவனுடைய நண்பனாகிய ஒரு ஹிந்து வீரனும் மரணக் காயங்களுடன் கிடந்தார்கள். தன்னுடைய உயிர் போய்க்கொண்டிருக்கும் தருணத்தில், அந்த முஸ்லிம் வீரன், தனது உதிரப் பிரவாகம் தன்னுடைய ஹிந்து நண்பனின் உதிரத்துடன் கலப்பதைக் கண்டான். தனது ஹிந்து நண்பனின் மதாசார உணர்ச்சியை அவன் பெரிதும் மதித்தான். சாகுந் தருவாயில் இருந்த தனது ஹிந்து நண்பனின் உதிரம், தனது உதிரத்தின் தீண்டுதலால், அசுத்தமடையக் கூடாதென்று, அவன் விரும்பினான். மரணவஸ்தையிலுங்கூட, நடுங்கும் கரங்களுடன், மண்ணில் ஒரு சிறு அணை கட்டி, தன் உதிரம் தன்னுடைய

ஹிந்து நண்பனின் உதிரத்துடன் கலவாமல் தடை செய்தான்.

இந்தக் கடைசி நட்புச் செயலை அந்த ஹிந்து வீரன் கண்ணுற்ருன். ஆனுல், அதன் உள்ளே அடங்கிக்கிடந்த பிரிவினையை அவனுல் தாள முடியவில்லை. மரண மூச்சுடன், "ஈசா! இந்த அணையை அகற்றிவிடு. சாகும்பொழுதும் நாம் பிரிந்திருக்க வேண்டாம்" என்ருன் அந்த ஹிந்துப் பாரமரான்.

இந்த ஈசாவின் மனோபாவத்துக்கு நேர்மாருனது தான் பாகிஸ்தான் கொள்கை.

அதன் அரசியல் தன்மை எப்படி இருப்பினும், சென்ற எழுநூறு வருஷங்களாக ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஐக்கிய பாவத்தால் வளர்ந்த நாகரிகத்தையும், ஒன்றுபட்ட வாழ்க்கை முறையையும் பெருத்த அபாயத்துக்கு உள்ளாக்குவதையே தனது லட்சியமாகக் கொண்டிருக்கிறது இந்தப் பாகிஸ்தான் திட்டம்.

தனிமையையே நாடும் வகுப்புத் துவேஷ உணர்ச்சியின் எல்லைக் கோட்டைதான் இந்தப் பாகிஸ்தான் திட்டம்.

தேசீய ஐக்கியத்தை எடுத்துக் காட்டும் எல்லாப் பொதுவான ஒழுங்கு முறைகளையும், முஸ்லிம் பிரிவினைவாதி வெறுக்கிருர். நான் வந்தே மாதரம் கீதம் பாடினுல், என் நண்பரான முஸ்லிம் பிரிவினைவாதி ஆத்திரம் அடைகிருர். நான் ஒரு பள்ளிக்கூடத்தை 'வித்யாமந்திர்' என்ற அதன் ஸம்ஸ்கிருதப் பெயரால் அழைத்தால், அதைக் கேட்க அவருக்கு நாராசம் போல் இருக்கிறது. தேசீயக்கொடியை நான் வணங்கினுல், அதுவும் அவர் கண்ணை உறுத்துகிறது. இரு

வருக்கும் புரியக்கூடிய பொதுமொழியாகிய ஹிந்துஸ் தானியைப் பரப்ப நான் முயற்சித்தால், எனக்குப் புரிந்துகொள்வதற்குக் கடினமான உர்து மொழி யைத்தான் பேசவேண்டுமென்று, அவர் விரும்புகிருர். வட பாகம் தவிர, மற்ற இடங்களில் வழங்கும் உர்து, ஒருவிதமான 'நொண்டி' ஹிந்துஸ்தானியே தவிர வேறில்லையென்பதை, அவர் கவனிப்பதில்லை.

இது மட்டுமா!......தாம் ஒரு தனி மதத்தைச் சேர்ந்த சிறுபான்மையினர் என்பதல்ல அவரது கட்சி; **போட்டியிடும் தனித் தேசத்தவர் (Rival Nation)** என்ற உரிமையைத்தான் அவர் கொண்டாடுகிருர். தனித் தேசத்தவராதலால், தாம் ஆளுவதற்கென, தனி நாடு கேட்கிருர். தம் மதத்தினர் சேர்ந்து அனுபவிக்கக்கூடிய முறையில் பாகிஸ்தான் தாயகம் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதற்குத்தான், இந்தியப் பிரிவினையை அவர் வற்புறுத்துகிருர்.

சுதந்தர நாடுகளில் சிறுபான்மை மதத்தினர்கள் தங்கள் தங்கள் மதாசாரங்களை அனுஷ்டிப்பதற்குப் பாதுகாப்புக்கள் இருந்து வருகின்றன. அதேமாதிரி பாதுகாப்புக்களை, சிறுபான்மையோரான இந்திய முஸ்லிம்களும் கோருவதுடன் நின்றுவிட வேண்டும். இத்துடன் நின்ருல், இலௌகீக உரிமைகளையே அடிப்படையாகக்கொண்ட தேசீய உணர்ச்சி, பிற பெரும்பான்மை வகுப்போரிடம் இருப்பதுபோலவே அந்த முஸ்லிம்களிடமும் இருக்கும். இவர்களோடு அவர்கள் ஒத்துழைத்தும் வருவார்கள்.

தனிமையான தேசம், அரசியல் இவைகள் கொண்ட தனி மக்கள் என்ற மனோபாவத்தை இந்த முஸ்லிம்கள் வற்புறுத்தினுல், எப்படியாவது நம்மிட

மிருந்து பிரிந்துபோய்த் தங்களுக்கென ஒரு தனித் தாயகத்தை ஏற்படுத்திக்கொள்ள இவர்கள் பிடிவாதம் செய்தால், சமஷ்டி மத்திய சர்க்காரில்கூடப் பெரும்பான்மையான ஹிந்துக்களுடன் ஒத்துழைக்க இயலாதென இவர்கள் மறுத்தால், பாகிஸ்தானில் மட்டும் பெரும்பான்மையோரான முஸ்லிம்களின் ஆட்சிக்குச் சிறுபான்மையோரான ஹிந்துக்கள் கீழ்ப் படிய இணங்குவார்கள் என்று இந்தப் பிரிவினைவாதிகள் எதிர்பார்க்க முடியுமா?

பஞ்சாப்பில் காங்கரா, ஹிஸ்ஸார், முதலிய அநேகம் ஜில்லாக்களில், ஹிந்துக்களும் சீக்கியர்களும் ஜனத்தொகையில் ஐம்பத்தொன்று முதல் தொண்ணூற்றொரு சத விகிதம் வரை இருக்கிறார்கள். வங்காளத்தில் வடமேற்கேயுள்ள மூர்ஷிதாபாத், மால்டா, தீனாபூர் முதலிய ஜில்லாக்களிலிருந்து, தென்கிழக்கில் பாகர்கஞ்ச், நவகாளி, சிட்டகாங் ஜில்லாக்கள் வரை ஹிந்துக்கள் ஐம்பது சத விகிதத்துக்கு மேற்பட்ட பெருந்தொகையாய் இருக்கிறார்கள். இந்த மாகாணங்களில் இந்தப் பாகங்கள் பிரிக்கப்பட்டு, ஹிந்து ராஜ்யத்துடன் சேர்க்கப்பட வேண்டும். அதனால் தற்போதுள்ள வங்காள, பஞ்சாப் மாகாணங்கள் ஹிந்து, முஸ்லிம் ராஜ்யங்களாகத் தனித்தனியே பிரிக்கப்பட வேண்டியிருக்கும்.

எனினும், ஹிந்துக்கள் பெருவாரியாகவுள்ள ஜில்லாக்களில் பெருவாரியாக முஸ்லிம்கள் வாழும் தாலூக்காக்களும், முஸ்லிம்கள் பெருவாரியாகவுள்ள ஜில்லாக்களில் பெருவாரியாக ஹிந்துக்கள் வசிக்கும் தாலூக்காக்களும் உள்ளன. ஐக்கியத்தை அடிப் படையாகக் கொண்ட ஜீவனுள்ள ஸ்தாபனம் போன்

றது ஒரு ஜில்லா. அதற்குக் 'கலெக்டர் ஆபீஸ்,' ஸ்தல ஸ்தாபனம், கல்விச் சாலை முதலிய அங்கங்கள் உண்டு. இங்கிலையில், சிறுபான்மையோருக்காக ஏற்படும் ஒரு தனி ராஜ்யத்தில் பல * 'சூடேட்டன்' பிரதேசங்களைச் சிருஷ்டிப்பதில் எவ்விதமான நியாயமும் இல்லை. ஆகையால், இந்தியாவை முஸ்லிம் இந்தியா, ஹிந்து இந்தியா என்று பிரிக்கப்படும் ஏற்பாட்டில் ஒரு தாலூக்காவையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருக்கும். அது சில கஷ்டங்களைக் கொடுக்கும்; ஹிந்து ஜில்லாக்களில் முஸ்லிம் தாலூக்காக்கள் இருக்கலாம்; அல்லது ஹிந்துத் தாலூக்காவில் ஒரு முஸ்லிம் கிராமம் இருக்கலாம்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க, இரண்டே வழிகள்தான் உண்டு. ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனியே ஹிந்துக்களும் முஸ்லிம்களுங்கொண்ட தனிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்படலாம். அல்லது, ரத்னகிரியில் உள்ள முஸ்லிம்களும், கோத்ராவிலுள்ள போராக்களும் (முஸ்லிம் மதத்தின் ஒரு வகுப்பார்) பஞ்சாப்பில் முஸ்லிம் ஜில்லாக்களில் குடியேற்றப்பட வேண்டும். பஞ்சாப்பின் ஹிந்துக்களும் சீக்கியர்களும், மஹாராஷ்டிரத்திலும் கூர்ஜரத்திலும் குடிபுக வேண்டும். பம்பாயிலுள்ள கோஜா முஸ்லிம்களும், கச்சி மீமன் முஸ்லிம்களும் எல்லைப்புற மாகாண ஹிந்துக்களுடன் இடம் மாறவேண்டும்.

இந்த ஏற்பாட்டினல், சுதேச சமஸ்தானங்களி

---

* 'சூடேட்டன்' இந்தச் சண்டைக்கு முன்னிருந்த செக்கோஸ்லோவாகியா ராஜ்யத்தில் ஜர்மன் மக்கள் பெருவாரியாக இருந்த ஒரு பிரதேசம்.

லும் சற்றுக் கடினமான பிரச்னைகள் தோன்றலாம். அதன் ஜனத்தொகை அல்லது அதிபதியைப் பொறுத்துத்தான் ஒரு சமஸ்தானம் ஹிந்து அல்லது முஸ்லிம் சமஸ்தானம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஜனத்தொகையைக் கொண்டு நோக்கும்போது, காஷ்மீரம் ஒரு முஸ்லிம் சமஸ்தானமாயும், ஹைதராபாத் ஒரு ஹிந்து சமஸ்தானமாயும் இருக்கின்றன. ஆனுல், அவற்றின் அதிபதிகளைக்கொண்டு பார்ப்போமானுல், காஷ்மீரம் ஹிந்து சமஸ்தானமாகவும் ஹைதராபாத் முஸ்லிம் சமஸ்தானமாகவும் கருதப்படவேண்டி இருக்கிறது. இந்தச் சிக்கலைத் தீர்க்கும் உபாயமும் ஒரே ஒன்றுதான்: அந்தச் சமஸ்தானங்களின் மக்கள் அல்லது அதிபதிகளை மேலே கண்டபடி இடம் மாற்றிக் குடியேற்றுவதுதான். அப்படியானுல், காஷ்மீரத்துப் பிராம்மணர்கள் தெற்கே தெலுங்கருடன் வெயிலில் காய நேரும்; மலையாளத்து மாப்பிள்ளைகளோ (முஸ்லிம்கள்) ஜீலம் நதிமீது படகுகளில் மிதக்க நேரும்!

தனியான தாயகத்தை விரும்பிச் செய்யப்படும் இவ்விதமான குடியேற்ற ஏற்பாட்டில், ஒரு மத விழாவில் காணப்படும் எல்லையில்லாத குதூகலத்தைக் காணலாம். இப்படித் தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் வடதிசையிலிருந்து கிளம்பும் காஷ்மீரத்துப் பிராம்மணர்களும், தெற்கிலிருந்து கிளம்பும் மலையாளத்து மாப்பிள்ளைமாரும், அழகாக அலங்கரிக்கப்பட்ட 'ஸ்பெஷல் ரயில்' வண்டிகளில் அமர்ந்துகொண்டு, நூதனமான தேசீய கீதங்களைப் பாடிக்கொண்டு, தாங்கள் குடியேறப் போகும் புதிய வீடுகளில் புதிய இன்பங்களையும் அதிசயங்

களையும் எதிர்பார்த்து மகிழ்ச்சியுடன் பிரயாணம் செய்யலாம். ராதையுடனும், லட்சுமியுடனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா முடிவில்லாத ராஸக்கிரீடை செய்யும் பேரின்பக் காட்சியைக் காண இச்சடலத்தை உதறிவிட்டு விரைந்து செல்லும் ஒரு வைஷ்ணவ பக்தரின் ஆத்ம யாத்திரைக்கு இதை உவமை கூறலாம்.

இதன் இடையில், புதிய தாயகங்களுக்குக் குடி யேறிய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அமைதியான வாழ்க்கையை நடத்தத் தொடங்கிவிடலாம். இவ் விதமான பாகிஸ்தான் திட்டம் அமுலுக்கு வந்து விடுமாயின், வகுப்புவாதப் பத்திரிகைகள் அன்பு மயமான சகோதரத்துவத்தை நிலை நிறுத்திச் சமாதா னப் பிரசாரம் செய்யும் சாதனங்களாக மாறிவிட லாம்; உடனே ஹிந்து முஸ்லிம் கலகங்களும் புராணகாலத்துப் பழங்கதைகள் ஆகி விடலாம்!

இப்படிப் பரிவர்த்தனை ஏற்பாடுகள் முடிக்கப் பட்ட பின்பு, சுதந்தரச் சட்டசபை, ராணுவம், பொக்கிஷம் இவைகளுடன் பாகிஸ்தான் சர்க்கார் லாகூரிலிருந்து தனது ஆட்சி அமுலை ஆரம்பித்து விட லாம். இதேவிதமான அலங்கார அங்கங்களுடன் ஹிந்து சர்க்காரும் டில்லியிலிருந்து தனது ஆட்சியை நடத்துமென நாம் கூறுவோம்.

ஒரு சுதந்தர சர்க்கார் ஆகிவிடும் பாகிஸ்தான் சர்க்கார், தன்னுடைய தற்காப்பையும் தானே கவனிக்க வேண்டியிருக்கும். அதற்கு, ஒருபுறம் ஆப்கானிஸ்தான் எல்லையும், மறுபுறம் ஹிந்து சர்க்காரின் எல்லையும் இருக்கும். அந்நியப் படை யெடுப்பைத் தடுப்பதற்காகத் தனது வடமேற்கு எல்

லையில் ஒரு * 'மஜினோ' அரணை, பாகிஸ்தான் சர்க்கார் அமைக்க வேண்டியது அவசியம் ஆகலாம். ஹிந்து சர்க்காரும், வடமேற்கிலிருந்து நேரக்கூடும் அபாயத்தைத் தடைசெய்வதற்குத் தனது பஞ்சாப் எல்லையில் ஒரு 'மஜினோ' அரணைக் கட்ட விரும்புமென்றே நான் நிச்சயமாகக் கூறுவேன். ஹிந்து இந்தியாவுக்கும் முஸ்லிம் இந்தியாவுக்கும் நடுவே ஒரு சுங்க வரம்பு நிறுவப்பட வேண்டியதும் அவசியமாய் இருக்கலாம்.

வங்காள, ஆஸாம் ஜில்லாக்களுடன் கூடிய கிழக்குப் பாகிஸ்தான் சர்க்கார், மேற்குப் பாகிஸ்தான் சர்க்காருடன் ஒரு சமஷ்டியில் சேர விரும்பலாம்; அல்லது அது சுதந்தர சர்க்காராகவே தனித்திருக்க விரும்பலாம்.

நம்முடைய இந்தக் கற்பனைத் திட்டத்தில் உள்நாட்டுச் சண்டைகளுக்கு இடமில்லாமலே போகலாம். பிறகு நம் சர்க்கார்களின் எல்லை நிர்ணயம், பிரஜாபரிவர்த்தனை முதலிய ஏற்பாடுகளை வகுப்பதற்காக, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அடங்கிய பல நிபுணர்களின் 'கமிஷன்க'ள் வேலைசெய்ய வேண்டியிருக்கும். தங்கள் சொத்துக்களை விட்டுப் பிரிந்து செல்லும் பிரஜைகளுக்கு நஷ்ட ஈடும் தீர்மானிக்கப் படவேண்டியிருக்கும். சச்சரவில்லாமல் இந்த விஷயத்தைத் தீர்த்துவைக்க, 'அப்பீல்' அதிகாரங் கொண்ட மத்தியஸ்த நியாய சபையும் ஒன்று ஏற்பட்டாக வேண்டும். இதற்கு ஏற்றது சமஷ்டி நியாய

---

* 'மஜினோ': பிரான்ஸ் தேசம் தன்னை ஜெர்மனியிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள, 1914-18-ஆம் வருஷங்களில் நடந்த ஐரோப்பிய யுத்தத்துக்குப் பிறகு அமைத்துக்கொண்ட நீண்ட அரண்.

சபைதான். இந்தியாவின் பிரதம நீதிபதியே—அவர் நடுநிலைமை வகிப்பவர் ஆதலால் — மத்தியஸ்தராக இருப்பார்.

பல தலைமுறைகளாகச் சேர்ந்து வாழ்ந்திருந்த இடங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பாகிஸ்தானில் திரட்டப்படும் இந்தப் புதுக்குடிகள்—பட்டாணியர் பஞ்சாபிகள், கோஜாக்கள், கச்சி மீமன்கள் பம்பாய்ப் போராக்கள், மலையாளத்து மாப்பிள்ளை கள்—தங்களுடைய மதப்பற்றுதல் காரணமாகத் தங்களுக்கிடையே ஒரு புதிய ஐக்கியத்தையும் பல புதிய கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டு விடக்கூடும் என்றுதான் நாம் கொள்ளவேண்டும். ஏனென்றால், இவையன்றி ஒரு தேசீயப் பொது வாழ்வு நிலை பெறு தன்றோ!

இப்படித் தோன்றும் புதிய முஸ்லிம் ஜனசமூகத் தில் உள்நாட்டு வகுப்புக் கலகங்களுக்கு இடமிருக்கா தென்றே நாம் எண்ணிக் கொள்ளவேண்டும். ஸுன் னிகள், ஷீயாக்கள், வஹாபிகள் என்ற வித்தியாசங் கள் போய்விடும். பாகிஸ்தானில், 'பாக்கு'கள்தான் இருப்பார்கள். தெற்கில் குடியேறியவர்களும் தங்களை ஆரியாவர்த்தத்திலிருந்து வந்த கலப்பற்ற ஆரியர்கள் என்றே பெருமை கூறிக் கொள்ளுவார்கள்!

அக்கம் பக்கத்துத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கும் பாதுகாப்புக் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கொண்ட ஒன்றிரண்டு நிரந்தரக் 'கமிஷன்'கள் கூடி மாதக்கணக்காய், தங்கள் மண்டைகளை உடைத்துக் கொள்ளாமல், வேற்றுமைகளைச் சமாதானப் படுத் திக் கொள்வதற்காக வேலை செய்லாம். சுங்க எல்லை

நிர்ணயம் குற்றம் செய்துவிட்டுத் தங்கள் நாட்டில் வந்து ஒளிந்து கொள்ளும் குற்றவாளியைப் பிடித்துக் கொடுப்பதற்கான விதிகள் அமைப்பு - இவை போன்ற வேறு பல விஷயங்களையும் கவனிப்பதற்கு, நிரந்தரமான ஒத்துழைப்பு இரு ராஜ்யங்களுக்கும் அவசியமாய் இருக்கலாம். இவ்விரண்டு நாடுகளுடைய எல்லைகளாலும் அவைகளுக்கு ஆபத்து ஏற்படுமாயின், கூட்டு ராணுவத் தலைமையும், பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்படும் ராணுவச் செலவுத்திட்டமும் அமுலுக்கு வரவேண்டி யிருக்கலாம். அநேகமாக ஹிந்து-முஸ்லிம் படைகள், ஆப்கானிஸ்தான எல்லையில் உள்ள 'மஜினே' அரணைக் காக்க நேரிடலாம்.

ஆனால், மனிதனது திட்டப்படி காரியங்கள் நடைபெறுவதில்லை. எதிர்பாராத நிகழ்ச்சிகளே நடக்கின்றன.

மேலே விவரிக்கப்பட்ட ஏற்பாடுகளை எதிர்க்கும் நோக்கத்துடன், இரு தரப்பிலுமுள்ள சில வெறியர்கள் கிளம்புகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். சில ஹிந்து-முஸ்லிம் தலைவர்கள் இந்திய ஐக்கியத்தை வற்புறுத்தி அகண்ட ஹிந்துஸ்தானக் கொடியுடன் எழுகிறார்கள் என்றும் வைத்துக் கொள்ளுவோம். பலமான ஓர் இயக்கத்தை நடத்த அவர்கள் அதிகமான ஆட்களைத் திரட்டலாம். அவர்களது தூண்டுதலால், சில ஜனங்கள் தங்களுடைய பூர்வீகமான இடங்களை விட்டு வெளியேற மறுக்கலாம். இந்த இயக்கத்தை நடத்துபவர்கள் சட்டத்தைக்கூட மீறுவதென்று துணிந்துவிடலாம். தங்களது தாய்நாடு பிரிக்கப்படுவதைத் தடுப்பதற்காகச் சில ஆவேசப் பித்தர்கள் உயிர்த்தியாகம் செய்யவும்

முன் வரலாம். அப்பொழுது, பிரிவினை வாதிகள், இப்படித் தங்களுடைய ஏற்பாடுகளைக் குலைப்பதற்குக் கிளம்புவோரைப் பலாத்காரமாக அடக்கும் விரிவான திட்டத்தைப் பற்றிச் சிந்தனை செய்யவும் நேரிடலாம்.

பிரிவினை வாதிகள், இந்தியாவைத் துண்டாடுவதற்காக, பிரிட்டிஷாரின் உதவியைக்கூட நாடலாம். ஆனால், அந்த உதவி அவர்களுக்குக் கிடைக்காமலும் போகலாம். தங்களுடைய நலன்களைக் காப்பாற்றும் பொருட்டுத் தங்களாலேயே வளர்க்கப்பட்ட இந்திய ஐக்கியத்தை உடைப்பதற்கு, பிரிட்டிஷார் வெறுத்தாலும் வெறுத்து விடுவார்கள். இதன் பயனாய், பிரிவினை வாதிகளுக்கும் ஐக்கியவாதிகளுக்கும் கடுமையான நீண்டகாலப் போராட்டமே ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

தேசம் முழுதும் ஒரு கடும்புயல் வீசும். ஒவ்வொரு மனிதனும் தன் சகோதரனைக் கொல்லக் கிளம்புவான். ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு தெருவிலும் ரத்தப்பிரவாகம் பெருகி ஓடும். பிரிவினை வாதியும், ஐக்கிய வாதியும் ஒருவரை யொருவர் வெறுப்பார்கள் ; பகிஷ்கரிப்பார்கள் ; குத்திக் கொல்லவும் துணிவார்கள். எழுநூறு வருஷங்களாக நாம் போற்றி வளர்த்த ஐக்கியத்தை அழிக்க, நாம், நம்மிடை மூளும் மூர்க்கமான போராட்டத்தில் பெருகி விடும் குருதி வெள்ளத்திலும், கண்ணீர்ப் பெருக்கிலுமே, நீந்தவேண்டி யிருக்கும்.

நாம் ஒருவரை யொருவர் அழித்துக்கொண்டிருக்கும்போது, ராணுவம் சும்மா இருந்துவிடும் என்று எண்ணிவிடுவதற் கில்லை. அது அமைதியை நிலை

நாட்டும்; அந்த அமைதி, 'கல்லறை'யில் காணும் அமைதியாகத்தான் இருக்கும். இரு தரப்பினரும், தங்களுடைய சுதந்தரத்துக்குப் பதிலாக, அடிமைத் தனத்தையே விலைக்கு வாங்கிக்கொள்ள நேரிடும்,

என்றாலும ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம் என்பதோ உண்மையானது.

ஹிந்து-முஸ்லிம் இவர்களின் உடல்களில் ஒரே ரத்தம்தான் ஓடுகிறது. ஆரிய, திராவிட, சிதிய ஜாதியார்களது கலப்பு ரத்தமே அவர்களின் உடல்களில் ஓடுகிறது. வேற்றுமைகளிலும் ஒற்றுமையை நாம் கண்டுள்ளோம். இதற்கு அக்பரும், கபீரும் சிறந்து விளங்கி ஒளிவீசும் உதாரணங்கள் ஆவார்கள். ஹிந்து-முஸ்லிம் தத்துவங்கள் பரஸ்பர உறவினால் நலம்பெற்று வளர்ந்துள்ளன. மதம் மாறின ஹிந்துக்கள், முஸ்லிம் மத ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். வங்காளத்து அரசருடைய மந்திரிகள் போன்ற பிரபல முஸ்லிம்கள், சைதன்ய சம்பிரதாயத்தைத் தழுவி, ரூபர், சநாதனர் என்னும் பெரிய வைஷ்ணவ மஹான்களாக வாழ்ந்திருக்கிறார்கள். குரு நானக், கபீர் இவர்களின் உபதேசங்களும், மஹா விஷ்ணுவின் தசாவதாரங்கள் உண்மை என்று நம்பும் கோஜாக்களின் மதக் கொள்கைகளும், ஹிந்து-முஸ்லிம் ஐக்கியத்திலிருந்து உதித்தவைகளே என்று கூறலாம். ஹிந்து-முஸ்லிம் உறவினால் நம் தொழில்கள், இன்பங்கள், கலைகள், இலக்கியம், சங்கீதம் முதலிய யாவும் பயன் பெற்றுச் செழித்துள்ளன. பழமை மாறாத கிராமங்களில் உள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும், பொதுவான மண்ணிலும் நாகரிகத்திலும் ஜனித்த உறவை உணர்கிறார்கள்.

அரசியலில் அதிகாரம் வகிக்கவேண்டிய நோக்கத்தால் புகுத்தப்பட்ட தனித்தொகுதி முறையினல் வகுப்புத் துவேஷ உணர்ச்சி தங்கள் மனதைக் கெடுக்கு முன்பு, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஈசாவின் மனோ பாவத்தையே தங்களது உன்னத லட்சியமாகக் கொண்டிருந்தார்கள்.

நாற்பது வருஷங்களுக்கு முன், என் சொந்த ஊரில், ஈசாவின் மனோபாவமே ஹிந்து-முஸ்லிம்களிடையே பரவி நின்றது எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது.

என் சிற்றப்பாவின் நண்பரான பைஸாமீயா (காகா என்று எங்களால் அழைக்கப்பட்டவர்) என்பவர் இருந்தார். தம்முடைய வீட்டில் விருந்துண்ணும்படி எங்களை அவர் வற்புறுத்துவார். தம் வீட்டு முற்றத்தை ஹிந்துக்களைக் கொண்டு, அவர் நன்ருகச் சுத்தம் செய்விப்பார். எங்களுக்காக ஒரு பிராம்மணர் சமையல் செய்வார். வைதீகப் பிராம்மணர்களாகிய நாங்கள், பட்டாடைகளை அணிந்து கொண்டு, பிராம்மண ரீதியில் உணவு அருந்துவோம். எங்கள் மனங்குளிர உணவளித்ததற்காக, எங்களுக்குச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆனந்த வெள்ளத்தில் அவர் மூழ்கியிருப்பார். அவரது முகம் குதூகலத்தால் மலர்ந்திருக்கும். என்னுடைய சிற்றப்பாவின் வீட்டுக்கு அவர் வராத நாளே கிடையாது. எங்களுடன் உண்டு உரையாடுவார்; குடும்ப விஷயங்களில் தம்முடைய யோசனைகளையும் கூறுவார்.

முப்பது வருஷங்களாக, எங்கள் வீட்டில் ஒரு முஸ்லிம் வேலைக்காரன் இருந்தான். அவனுடைய

கைகளைவிட்டு ஜபமாலை அகலுவதேயில்லை. தொழுகை செய்ய, ஒருநாளும் அவன் தவறுவதில்லை. அவனது நாவில் திருக்கொரான் வேதம் எப்பொழுதும் வழங்கிக்கொண்டிருக்கும். என்றாலும், ஆசாரமுள்ள ஒரு பிராம்மண வீட்டின் பழக்கவழக்கங்களை அவன் நன்ருக அறிந்திருந்தான். அவற்றை அவன் மிகவும் மதித்தான். எங்கள் குடும்பத்தில் அவனால் அன்பாக வளர்க்கப்பட்டவர்கள் பலர். நாங்கள் பம்பாயில் இருந்தபோது, சிவராத்திரி, கோகுலாஷ்டமி விழாக் காலங்களில், பூஜை செய்பவர்களை அவனே அழைத்து வருவான்; புஷ்பங்களையும் அவனே கொண்டுவருவான். கதவுகளைத் திறந்து, எங்கள் குலதெய்வம் நடுநிசியில் ஆராதிக்கப்படுவதற்கான எல்லாக் காரியங்களையும் அவனே சித்தம் செய்வான்.

எங்கள் உறவினர்களில் ஒருவரான ஒரு வைதீகப் பிராம்மணர், ஒரு முஸ்லிம் தனவந்தரிடம் வேலை பார்த்துவந்தார். அந்தக் குடும்பத்தின் ரகசியங்களில் அவருக்குத் தெரியாதது ஒன்றுகூட இருக்காது. அவருடைய எஜமானரின் மதவிழாக்களில் ஒவ்வொன்றையும் அவரே கவனிப்பார்.

ஈசாவின் மனேபாவம் அந்தக் காலத்தில் எங்களைக் கவர்ந்திருந்தது.

ஒரு முஸ்லிம் அரசியல் வாதியைப் பின்பற்றியே, நான் தீவிரமான ராஜீய வாழ்க்கையைத் தொடங்கினேன். எங்களது ஸ்தாபனத்துக்கு அவர் தலைவர்; நான் காரியதரிசி. அவர் தம்முடைய அரசியல் அபிப்பிராயங்களை எங்களுடன் பரிமாறிக்கொள்வார். அவரிடம் வகுப்புவாத உணர்ச்சியை மருந்துக்குக்கூடக்

காணமுடியாது. 'இந்தியா இந்தியர்களுக்கே' என்ற கொள்கையை வற்புறுத்திய முதல்வரும் அவரே. லக்ஷ்மணபுரியில் ஏற்பட்ட ஹிந்து-முஸ்லிம் உடன் படிக்கைக்குக் காரணபூதரும் அவரே.

அவர்தான் **முகமத் ஆலி ஜின்ன**.

அப்பொழுது, ஈசாவின் மனேபாவம் அவரை விட்டு அகலவில்லை.

டாக்டர் அன்சாரியின் வீட்டில், இருந்திருக்கிறேன். நான் ஹிந்துவென்றே, அவர் முஸ்லிம் என்றே எனக்குத் தோன்றியதே யில்லை. திருக்கொரானில் ஞானத்தை நாடும் **கான் அப்துல் காபர்கானும்**, கீதையையே தமது ஜீவாதாரமாகக் கொண்ட **காந்திஜீயும்**, சேவாக் கிராமத்தில் ஒரே குடிசையில் ஒன்றுபட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். வெவ்வேறு மத வேதங்களின் மூலம் கடவுளது ஒரே போதனையை மேற்கொண்ட அவ்விருவரும், நேசபாவத்துடன் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

ஆனல், இன்றே ஈசாவின் மனேபாவம் நம்மில் சிலரைவிட்டு நீங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் அரசியல் நீதிகளோ அல்லது அநீதிகளோ அல்ல. ஹிந்து-முஸ்லிம்களிடையே நிலவி நிற்கும் ஐக்கிய நாகரிக பந்தத்தை அசட்டை செய்ய, நாம் விரும்புவதே இதற்குக் காரணம். பொது மொழி, கல்லூரிகள் அல்லது கலாசாலைகளின் தொடர்புகள், ஒன்றுபட்ட சமுதாய வாழ்க்கை, சரித்திரம் அல்லது ஐதிக பூர்வமான நல்லுணர்ச்சியை அறிவுறுத்தும் நினைவுகள், இரு வகுப்பினருங் கூடிப் பங்கிட்டுக் கொண்ட சுகதுக்கங்கள் அல்லது வெற்றி தோல்விகள் ஆகிய இவைகளால் இணைக்கப்பட்ட பந்தமே,

நாகரிக-சமுதாய ஐக்கியத்தை உருவகப்படுத்துகின்றன.

இரு ஜாதிகளிடையேயுமுள்ள இந்த ஐக்கியத்தைப் பலவீனப்படுத்தி, அவற்றின் தொடர்புகளைக் குறைத்துவிடுவதில் பிரியமுள்ளவர்களாக, நம்மில் சிலர் இருக்கிறார்கள்.

நாம் எல்லாருமே புரிந்துகொள்ளக் கூடிய ஹிந்துஸ்தானி பாஷை போதிக்கப்படுவதை, ஒருவர் ஆட்சேபிக்கிறார். இரு சமூகங்களிலும் உதித்த மகான்களையும் வீரர்களையும் பற்றிய சரித்திரப் புத்தகங்களைப் பாடமாக வைப்பதை, இன்னொருவர் எதிர்க்கிறார். மூன்றாமவர், தனிப் பள்ளிக்கூடம், தனிக் கல்விமுறை-இவைகள் வேண்டுமெனப் பிடிவாதம் செய்கிறார். தற்போது போதிக்கப்படும் ரீதியில், சரித்திரம், இரு சமூகங்களிடையேயும் நடைபெற்ற போராட்டங்களை உணர்த்தும் கதை போலிருக்கிறதேயொழிய, அவற்றிலிருந்து வளர்ந்த சமரஸ ஐக்கிய பாவத்தை அறிவுறுத்தும் வரலாறாக இருக்கவில்லை. மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவிய உயரிய வகுப்பாரையும், குற்றங்கள் புரியும் கீழ்வகுப்பாரையும் தவிர, மற்றவர்களிடம் ஐக்கியபாவத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகளை வளர்க்கும் சாதனங்கள், மிகக் குறைவாகவே இருக்கின்றன. காங்கிரஸுக்கு வெளியேயுள்ள ஸேவா சங்கங்களின் மூலம் இவ்விரு வகுப்புக்கள் இடையேயும் ஏற்பட்டிருந்த தொடர்புகள் குறைந்துவிட்டன. 'உன்னால் ஆனதைச் செய்' என்ற பிடிவாத மனோபாவத்தை ஹிந்து கைக்கொண்டுவிட்டான். சமரஸத்துக்காக எடுத்துக் கொள்ளப்படும் தேசீயவாதியின் ஒவ்வொரு முயற்சி

யையும், பிரிவினைவாதி பழித்துக் கூறுகிறான். இதனால் தேசீயவாதிக்குக்கூடத் திகைப்பு ஏற்படுகிறது. இந்த முஸ்லிம் பிரிவினை வாதிகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகக் காங்கிரஸ் மந்திரிசபைகள் மனப்பூர்வமாகச் செய்த காரியங்களின்மீது அபாண்டமான குறைகள் கூறப்பட்டன. மேலும், சிறுபான்மையோரை ஒடுக்கும் ஹிந்துக் கொடுங்கோலர்களின் ஆட்சி ஸ்தாபனங்கள் என்றுகூட அந்த மந்திரிசபைகளை வர்ணித்துவிட்டார்கள்! ஒவ்வொரு ஹிந்து அல்லது முஸ்லிம் தேசீயவாதியும், தன் தன் சமூகப் பிரிவினைவாதியின் கண்ணுக்கு ஒரு துரோகியாகவே தோன்றுகிறான். இரு வகுப்புக்களுக்கும் பொதுவாக, லௌகிக விஷயங்களில் நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்கு முறைகளை அமைக்கச் செய்யப்படும் முயற்சி ஒவ்வொன்றும் வீணாக்கப்படுகிறது. இந்த நிலையில், தனது லட்சியத்துக்காகப் பாடுபடுவது வீணாகி விடுமோ என்ற சோர்வு, ஐக்கியவாதிக்குக்கூட உண்டாவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஹிந்துவின் மனப்பான்மையுங்கூட, ஓர் இடையூறாகவேதான் இருக்கிறது. அவன் ஒரு பயங்கொள்ளியாக இருக்கிறான். வற்புறுத்தவோ அல்லது விட்டுக்கொடுக்கவோ அவனுக்குத் தைரியம் கிடையாது. எண்ணிக்கையில் பெருவாரியாக இருந்தும், மிரட்டல்களுக்கு ஹிந்து சமூகம் பயப்படுகிறது. முதல் வட்டமேஜை மகாநாட்டில், பஞ்சாப் முஸ்லிம்களுக்குச் சட்டசபையில் ஒரு ஸ்தானம் அதிகமாகக் கொடுக்க மறுத்ததால், கூட்டுத்தொகுதி முறையை அடையும் அரிய சந்தர்ப்பத்தை ஹிந்து சமூகம் இழந்துவிட்டது. வைஸிராயின் நிர்வாக

சபையில், தன் சமூகத்துக்கு ஒரு ஸ்தானம் அதிக மாய்க் கொடுப்பதாலுல், அரசியல் முன்னேற்றத் தைத் தடுக்கும் தடை உரிமையை (communal veto) வைஸிராயின் பிரகடனத்தில் வகுப்புவாதிகளுக்கு அளித்திருக்கக்கூட, ஹிந்து சமூகம் இணங்கியிருக் கும். ஓர் அற்ப அபாயங்கூட ஹிந்து சமூகத்தைப் பீதியடையச் செய்கிறது. ஜீவாதாரமான கொள்கை களை உறுதியுடன் பற்றி நிற்க, அதற்குத் துணிவு கிடையாது. அந்தக் கொள்கைகளுக்காக ஐக்கிய மாய்ப் போராடவோ, அல்லது பயமின்றிச் சமரஸம் செய்துகொள்ளவோ, அல்லது அவற்றை விட்டுக் கொடுக்காமல் வற்புறுத்தவோ, அதற்கு வீரியமில்லை. முப்பது கோடி இந்தியர்களாகிய ஹிந்துக்கள் சிறு பான்மையோரின் உருட்டல் மிரட்டல்களுக்குப் பணி வது மிக மிகக் கேவலம் என்பதை, ஹிந்து சமூகம் மறந்துவிடுகிறது. தன்னுடன் இரண்டறக் கலந்து நிற்கும் சிறுபான்மை வகுப்புக்களுடன் அரசியல் அதிகாரத்தை நியாயமான முறையில் பகிர்ந்துகொள் வதில் எவ்விதமான ஆபத்தும் இல்லை என்பதையும், அது மறந்துவிடுகிறது.

இந்தியாவைத் துண்டுபோட வேண்டுமென்ற கூச்சல் மிகச் சிலரிடமிருந்தே கிளம்புகிறது. பஞ் சாபில் ஓர் ஐக்கிய சர்க்காரைத் திறம்படவும் வெற்றிகரமாகவும் **ஸர் சிக்கந்தர் ஹயத்கான்** நடத்தி வருகிறார். அனுபவமுள்ள அவரும், அவரைப்போன்ற அநேகரும், இந்தப் பிரிவினையை எதிர்ப்பார்கள். பாகிஸ்தான் என்பது ஒரு ராஜீய கோஷமே அன்றி, அது ஜீவசக்திபெற்ற சத்தியம் அன்று. இந்தியா ஒன்றே. அச்சமின்றியும் குலையாத கட்டுப்பாட்டுட

னும், இநத உண்மையைத் தேசீய்வாதிகள் ஒரு தாரக மந்திரமாகவே போற்றுகிருர்கள். மிகப் பெரும் பாலான ஆனுல் மௌனமான ஹிந்துக்களும் முஸ்லிம் களும் தங்கள் உயிரினும் உயிராய் மதிக்கும் பொருள் களில் எல்லாம், பழக்கத்தாலும் பரம்பரையினுலும் கூட்டுறவாலும் இந்திய ஐக்கியம் இரண்டறப் பின்னிக்கிடக்கிறது.

இந்த ஒன்றுபட்ட மௌன சக்தியே இறுதி யான முடிவைச் செய்ய வல்லது. இந்தச் சக்தி தன் னுடைய அபிலாஷைக்கு எதிராக மிகப் பலத்துடன் நிற்கும் என்பதை, பிரிவினைவாதி மறந்துவிடுகிருன்.

பல நூற்ருண்டுகளாக வளர்ந்து வந்துள்ள இந்த ஐக்கியத்தை எவனுலும் சிதைக்க முடியாது.

ஈசாவின் மனேபாவமே முடிவில் வெற்றிபெறப் போகிறது.

4. மனப் பிராந்தி

உங்களுக்கு என்னுடைய நிலைமையை, முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தற்காப்பு விஷயங்களில் பலாத்காரத்தை உபயோகிப்பதைக் கைவிடுவது சரியல்ல என்ற எண்ணமே என்னைக் காங்கிரஸை விட்டு விலகும்படி செய்தது. எனக்கு நம்பிக்கை யில்லாத கொள்கையை, நான் ஒத்துக்கொள்வதால், நான் எனக்கே உண்மையற்றவன் ஆகி விடுகிறேன். இவ் வித்யாசத்தைத் தவிர, மற்றப்படி காங்கிரஸை விட்டு விலகு முன்பு நான் எவ்வளவு தீவிரமான தேசீயவாதியாக இருந்தேனே அப்படியேதான் இப்பொழுதும் இருக்கிறேன். தேசத்திலுள்ள பல்வேறு சமூகங்களிடையேயும் நலன்களிடையேயும் இனிமையான இணைபாடு ஏற்படுவதால்தான் தேசீயம் என்ற பதத்துக்கு அர்த்தமுண்டு. இது அமையா விட்டால் நமது நாட்டில் ராஜீய சுதந்தரம் நிலை பெருது என்றே எண்ணுகிறேன். நான் இந்தியாவின் பிரிவினையை ஏன் எதிர்க்கிறேன்? இந்தப் பிரிவினை நமது நாட்டின் தேசீய வாழ்வையும் அதன் வருங்காலத்தையும் மறுப்பதால்தான்.

பிரிவினைக் கோரிக்கை, இந்த நாட்டிலுள்ள ஹிந்துக்களின் நிலைமையையும் செல்வாக்கையும் அழித்துவிடும் எண்ணத்துடனேயே தோன்றியிருக்கிறது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அரசியலில் பெரும்பான்மை பெற்ருே அல்லது மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் சமபங்கு வகித்தோ, அதன் மூலம்

பெரும்பான்மையான ஹிந்து சமூகத்தைச் சிறு பான்மை நிலைக்குத் தாழ்த்தி விடுவதையே, பிரிவினை வாதிகள் விரும்புகிறார்கள். ஹிந்துக்களிடையே கட்டுப்பாடில்லாமல் வேற்றுமைகள் மலிந்திருக்கும் வரையில், அவர்களால் இந்தப் பொல்லாத ஆசையை எதிர்க்கமுடியாது. ஹிந்துக்கள், தேசியப் போக்குள்ள முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள் முதலியோரின் கூட்டு முயற்சியாலேயே அகண்ட ஹிந்துஸ்தான இயக்கம், சுதந்தர லட்சியத்தை அடையமுடியும். இந்த உண்மையை மறந்து, பய முறுத்தலுக்கு அஞ்சி, இந்தியப் பிரிவினைக்கு இவர்கள் இணங்கினாலோ அல்லது சிறுபான்மை நிலைக்குத் தாழ்த்தப்பட்டாலோ, இந்த நாட்டில் வாழ்வதிலே சாரமில்லை.

ஹிந்து சமூகத்துக்குப் பணியாற்றி அதைப் பலப்படுத்தும் ஒருபரந்த ஸ்தாபனம் உங்கள் *சங்கம். ஆதலால், ஹிந்துக்களுக்குப் பயமின்மையைக் கற்பிப்பதே உங்களுடைய முக்கியமான முதல் கடமையாய் இருக்க வேண்டும்.

கஷ்டமான எதிர்காலம் ஹிந்து சமூகத்தை நோக்குகிறது. நமக்குப் பலத்தையும் ஐக்கியத்தையும் அளித்த பழைய சக்திகள், புதிய மாறுதல்களால், தங்கள் வலிமையை இழந்துவிட்டன. அவநம்பிக்கையும், சந்தேகமுங்கொண்ட ஜாதிகளின் கூட்டமாக, நமது சமூகம் இன்று மாறி நிற்கிறது. மாகாண வேற்றுமைகளும் மொழி வேற்றுமைகளும், நமது ஹிந்து சமுதாயத்தின் ஒற்றுமையைச் சிதைத்

* பூனாவில், 1941-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 6உ ராஷ்டிரீய ஸ்வயம் சேவா சங்கத்தாருக்கு நிகழ்த்திய பிரசங்கம்

திருக்கின்றன. சமஸ்கிருத பாஷை, புராண ஐதீகங்கள், இந்திய நாகரிகம் இவைகள் நமக்கு அளித்த ஒற்றுமையானது, பிறநாட்டு ஸம்பந்தங்களால் இன்று பலவீனப் பட்டிருக்கிறது. நமது ஒற்றுமையைப் பலவீனப்படுத்திய பிற நாட்டு ஸம்பந்தங்கள், பதிலுக்கு நம்மிடையே வேறோர் ஒற்றுமையைச் சிருஷ்டிக்கவில்லை. சகிப்புத் தன்மையின் பெயரால், நமது சமுதாயம் வலிவிழுந்து போகும்படி விட்டுவிட்டோம். இனிமேல், ஜாதிகளால் சமுதாய வாழ்க்கை சீர்படாது; அவிபக்த குடும்பம் சமூகப் பாதுகாப்புக்குப் பயன்படாது. நம்மை இதுகாறும் காப்பாற்றி வந்த பழைய சம்பிரதாயங்கள், இனி நம்மைக் காப்பாற்ற மாட்டா. நாம் மேனாட்டாரைக் 'காப்பி' அடிக்கிறோம்; கொஞ்சங்கூட மானமின்றி, அந்நியருக்குத் தலை வணங்குகிறோம். பலவீனத்தினால் கூச்சல் போடுகிறோம்; கெஞ்சுகிறோம்; சபிக்கிறோம். ஆனால் நம்மை ஐக்கியப் படுத்திக்கொள்ள மட்டும் நாம் தெரிந்து கொள்ளவில்லை. உலக சரித்திரத்திலேயே மிகப் பெரிய நெருக்கடி இன்று நம்மை எதிர்நோக்கி நிற்கிறது.

பிற சமூகங்களுடன் ஒத்துழைத்ததன் பயனாய், தேசீயம் என்ற அருமையான புதிய சக்தியை நாம் சிருஷ்டித்தோம். ஆனால், அது இன்று ஆபத்தான நிலையில் இருக்கிறது. மதவெறியை ராஜீயத்தில் புகுத்தி இந்தியாவைப் பிரிக்க விரும்பும் சில மூர்க்கமான பிரிவினைவாதிகளால், நாம் நூறு வருஷங்களாக உருவகப் படுத்திய நன்மைகள் யாவும் அழிந்துவிடும் போலிருக்கிறது. தேச பக்தியுள்ள ஒவ்வொரு ஹிந்துவும், முஸ்லிமும், சீக்கியனும், கிருஸ்துவனும்—ஏன், எந்த

இந்தியனுமே—இதைப் பொறுக்க முடியாது. அகண்ட ஹிந்துஸ்தானம் பழமையிலும் நிலவியது: இப் பொழுதும் நிலவி நிற்கிறது. அது என்றென்றும் நிலவும்பொருட்டு, நம்மில் ஒவ்வொருவரும் பலமாகப் போராடித் தீரவேண்டும்.

இந்தியாவின் பிரிவினையை எதிர்ப்பதற்கு முட்டுக் கட்டையாய் நிற்பது பிரிவினை வாதிகளின் ஆத்திர மல்ல. ஆனல், ஹிந்துக்களின் பயத்தால் ஏற்பட்ட மனப் பிராந்திதான் அதற்குப் பெருந் தடை என்பதை நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். ஆயினும், இதற்கு விலக்கானவர்களும் இருக்கிருர்கள். தைரியத்துடன் போராடினுலும் நம்முடைய காரியம் பலிக்காது என்ற பயத்தால், நாம் கெஞ்சும் மனப்பான்மையோடு இருக்கிறேம். பிரத்தியட்ச ரீதியான உண்மைகளைக் காண நாம் அஞ்சுகிறேம்; நாமே அவைகளை வார்த்தை ஜாலங்களால் மறைக்கவும் பார்க்கிறேம். ஓர் உத்தியோகம் பெறுவதற்கோ அல்லது நம்முடைய பணத்துக்கு நல்ல வட்டி சம்பாதிப்பதற்கோ, பொதுவாக எந்த அவமரியாதையையும் அடைய, நாம் சித்தமா யிருக்கிறேம். நமது அந்தஸ்து எங்கே போய் விடுமோ என்று அஞ்சுகிறேம். ஆட்டு மந்தைபோல, பலபேர் போகிற வழியிலேயே நாமும் சென்று விடுகிறேம். இந்த மனப்பான்மையே நம்மைச் சதாகாலமும் அமுக்கிக்கொண்டிருக்கிறது. எவனுவது ஒருவன் இதை விட்டு மீறிச் சென்றுல், அவன் பெரிய பாதகனுய் நமக்குத் தோன்றி விடுகிருன்.

நம்மைக் கவனிப்பவர்கள், நமது பலவீனத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிருர்கள் என்று உங்

களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். பிரிட்டிஷார் வீசி எறியும் சில பதவித் துண்டுகளுக்காக, நாம் ஒருவருக்கொருவர் 'குஸ்தி' போடுகிறோம். ஒரு முஸ்லிமைப் பிரிட்டிஷார் ஆதரித்தால், எங்கே தன்னை மறந்துவிடப் போகிறார்களோ என்று ஹிந்துவும் விரைந்து ஓடுகிறான். யுத்தத்தில் பிரிட்டிஷார் தோல்வியடைவார்கள் போலத் தோன்றினால், எங்கே ஹிட்லர் வந்துவிடப் போகிறானே என்று, அவன் பல நாள் இராத் தூக்கமின்றித் தவிக்கிறான்.

ஓர் உதாரணம் தெரிவிக்கிறேன். மத்திய சர்க்காரில் ஹிந்துக்களுக்கு அறுபத்தாறு பங்கும் முஸ்லிம்களுக்கு முப்பத்துநாலு பங்கும் இருக்குமானால், பஞ்சாப் பிரதம மந்திரி **ஸர் சிக்கந்தர் ஹயத்கானல்** இந்த விகிதாசாரத்தை, அவர்களுக்கு ஐம்பத்தாறு பங்கும் இவர்களுக்கு நாற்பத்துநாலு பங்குமாக மாற்ற முடிகிறது. தேசத்தில் ஹிந்துக்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து பங்காக இருந்தும், அரசியல் நிர்வாகம் முதலிய எல்லாத் துறைகளிலும் ஹிந்துக்கள் நூற்றுக்கு ஐம்பது பங்கு விகிதாசாரத்தில்தான் இருக்கிறார்கள். ஜனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது தங்கள் பாத்தியதை மிகவும் குறைக்கப்பட் டிருக்கிறது என்பதை ஹிந்துக்கள் மறந்துவிடுகிறார்கள். தங்களுக்கு இவ்வளவாவது அகப்பட்டதே என்று அவர்கள் சந்தோஷப்பட்டுக் கொள்கிறார்கள். ஸர் சிக்கந்தரைப்போல் ஹிந்துக்களும் தைரியசாலிகளாக இருந்தால், இவ்வாறு அவர்கள் அலட்சியம் செய்யப்பட்டிருப்பார்களா?

ஒரு முஸ்லிம் ஆத்திரமடைந்தால், நாம், நம்முடைய மொழி, உடை, ஏன் நம்முடைய நாகரிகத்

தையே தத்தம் செய்துவிடச் சித்தமா யிருக்கிறோம். நமக்குப் பொருத்தமான பழக்க வழக்கங்களை விடாது அனுஷ்டித்துக் கொண்டிருந்தால், நம்மை எங்கே தேசியவாதிகள் என்று ஒத்துக்கொள்ள மாட்டார் களோ என்று மனங் கலங்குகிறோம். தேசத்தைத் துண்டாட ஏற்பாடுகள் செய்யப்படும்போது, இந்த அபாயத்தைத் தடுக்காமல் இருப்பதோடு, அதற்குச் சாக்குப்போக்குகளும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஊர்வலம் நடத்தும் உரிமை, வாத்தியம் வாசிக்கும் களியாட்டம், வந்தேமாதர கீதம் பாடும் ஆனந்தம், ஹிந்திமொழியைப் பேசும் பிறப்புரிமை இவைகளை யெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று நாம் பயமுறுத் தப்படுகிறோம். இதற்கு, "நாம் எதிர்த்தால், நமக்கு இன்னும் பெரிய கஷ்டம் வரலாம்" என்று சொல்லு கிறோம். நமது கோழைத்தனத்தை மறைத்துக் கொண்டுவிட, ஏதாவது ஒரு சாக்குக் கிடைத்தால் போதும்; அதற்குள் நாம் பத்திரமாக நுழைந்து விடுகிறோம்.

"ஹிந்துக்கள் அழிந்துகொண்டிருக்கும் ஒரு சமூகம்" என்று, ஒருசமயம் ஒருவர் கூறினர்; நாம் பயத்தை உதறித் தள்ளாவிட்டால், நாம் அழிவது மாத்திரமல்ல, நம்முடைய ஆத்மாவும் நாசமாகி விடும். நம்முடைய வாழ்க்கைக்கு எவை ஜீவாதா ரமோ, அவற்றை எல்லாம் துறந்துவிடும்படி நாம் பயமுறுத்தப் படுகிறோம்; பலவந்தம் செய்யப்படு கிறோம். ஆனல் இதுமட்டும் நிச்சயம்: நம்முடைய கோழைத்தனத்தை நாம் விட்டாலொழிய, இந்தியா வின் எதிர்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரமான தேசீயம் ஒருநாளும் வெற்றிபெறப் போவதில்லை.

தேசியம் வெற்றிபெற வேண்டுமானுல், நம்மிடம் பயத்தால் பிறந்த மனப் பிராந்தியை நாம் துரத்திவிட வேண்டும்; நம்முடைய நாகரிகத்தை விட்டு விடாமல் இருக்க வேண்டும்: எல்லா மிரட்டல்களையும் எதிர்த்தாக வேண்டும். நமக்கு ஒரு மொழி, ஒரு மதம், ஒரு சமூக வாழ்க்கை, ஒரு நாகரிகம், இவைகள் எல்லாவற்றையும்விட முக்கியமாக ஒரே தேசம் இவைகள் யாவும் இருக்கின்றன. நமக்குப்பெருமையை அளிக்கும் இவைகள் அழிக்கப்படாமல் இருக்க வேண்டும். நம்முடைய புண்ணிய பூமியான இந்தியா சின்னுபின்ன மாகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான், நாம் மற்றவருடன் ஒத்து உழைக்க முடியும். நீங்கள் இந்தியாவில், பல கிளைகளைக்கொண்ட, பரந்த செல்வாக்குள்ள ஒரு சங்கமாயிருக்கிறீர்கள். ஹிந்து சமூகத்தை ஒன்றுதிரட்டிப் பலப் படுத்துவதுதான், உங்களுடைய லட்சியம். ஆனுல், இந்த லட்சியத்தை அடைய வேண்டும் என்ற ஆத்திரத்தில், நாம் நிராயுதபாணிகளான அடிமை மக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அந்நிய ஆட்சியே நம் துரதிருஷ்டங்களுக் கெல்லாம் மூல காரணம். அந்நியர்கள், தங்களுடைய சொந்த நலன்களுக்குச் சரிப்பட்டிருந்தால்தான், உங்களுக்கு உதவி செய்வார்கள். ஆகையால், நமக்கு முன்னிருக்கும் இந்த அகண்ட ஹிந்துஸ்தானப் போராட்டத்தில், நம்முடன் சேரத் தயாராயிருக்கும் எல்லாச் சமூகங்களுடைய உதவியையும் நாம் நாடவேண்டும். தன்னேடு சேர விரும்பும் ஒருவனுடன் ஒத்துழைப்பதால், ஒரு பலவானுக்கு இழிவு ஏற்பட்டுவிடாது. தேசிய விரோதமான எந்தக் குறுகிய மனப்பான்மை

யாலும் நமது திருஷ்டியின் ஒளி மங்கிவிடக் கூடாது. நம்மைவிடத் தேசமே பெரிதென மதித்து நாம் உழைப்போம்; நமக்கு நாமே உண்மையாக இருப் போம்; மாகாண, மொழி வேற்றுமைகளைக் களைந்து, எவராலும் எதிர்த்துத் தகர்க்கமுடியாத ஐக்கி யத்தை நாம் அடைவோம். பிற சமூகங்களுடன் ஒன்று சேர்ந்து பொதுவான தேசிய வாழ்வை அடைவ தாலேயே, நாம் பெருமை அடையலாம். நாம் ஒரு பெரிய இந்திய ஜாதியா யிருக்கிறோம். இதுவே நமது வருங்காலத்தின் நம்பிக்கையாகவு மிருக்கட்டும்.

அகண்ட ஹிந்துஸ்தான இயக்கம் ஒரு வகுப்புப் பிரச்னை யல்ல; மத சம்பந்தமான பிரச்னையு மல்ல; ஏன், அரசியல் பிரச்னையு மல்ல. உலகத்தில் அரசியல் உரிமைகளுக்கும், மத பந்தங்களுக்கும் மேலான நிரந்தரமான சில உரிமைகளுண்டு. அவைகளில், **வாழும் உரிமை - அதாவது நியாயமாக வாழும் உரி மையே**-மிகவும் புனிதமானது. நம்முடைய தேசத்தின் ஐக்கியம் சிதைவுற்றால், இந்த உரிமையும் மறைந்து விடும். எனவே, அகண்ட ஹிந்துஸ்தானம், நம்முடைய மத வேற்றுமைகள், அரசியல் பிரச்னைகள் இவைகள் எல்லாவற்றிற்கும் மேலானது; நம்முடைய வாழ் வுக்கே ஆதாரமானது.

நான் தேசீயவாதி என்பதால், உண்மையான ஹிந்துவாக இருக்கக் கூடாதென்பது தில்லை. ஓர் உண்மையான ஹிந்துவை, தேசீயம் எதிர்த்து நிற்க வில்லை. அதேபோல, ஓர் உண்மையான முஸ்லிமையும் தேசீயம் எதிர்த்து நிற்கவில்லை. இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் அல்லாதாருடன் ஒற்றுமையுடனும், சமா தானத்துடனும் வாழ்ந்து எல்லோரும் சேர்ந்த முயற்சி

களால் அனைவருக்கும் ராஜீய சுதந்தரத்தைப் பெற, நான் விரும்புகிறேன். அதற்காக, நான் என் மதம், என் சமூகம், என் நாகரிகம் இவைகளை விட்டுக் கொடுத்துப் பணிவதற்கில்லை. என்னுடைய தேசம் சுதந்தரமாகவும் வீரியத்துடனும் இருக்க வேண்டும்; அதோடு, என் நாகரிகமும் வளர்ந்து உலகுக்குத் தன் ஒளியை வீசவேண்டும். என்னுடைய மூதாதையர்கள் வாழ்ந்த அதே வாழ்வின் வழியே நானும் வாழ வேண்டுமென்பதுதான் முக்கியம். அரசியல் உரிமைகளும், சந்தர்ப்பங்களும் அதற்கு வெறும் சாதனங்களே. ஹிந்துமதத்தில் சாரம் ஒன்றுமில்லை என்ருல், நாம் அனைவரும் முஸ்லிம்களாக மாறிவிடலாமே! ஹிந்துமதத்தில் ஜீவனுள்ள ஒளியும் உண்மையும் இருக்கிறது என்ருல், அகண்ட ஹிந்துஸ்தான மண்ணிலிருந்து அதை உலகத்திலுள்ள எந்தச் சக்தியும் சிதைத்தெறிய நாம் இடங்கொடுக்க முடியாது.

ஏ! ஹிந்து வாலிபனே! பயத்தை விட்டுவிடு என்பதுதான், நான் உனக்குச் செய்யும் வேண்டுகோள். நாம் முப்பது கோடி ஜனங்கள். நமக்கு வலிமை இருக்கிறது; வசதிகள் இருக்கின்றன; ஆற்றலுண்டு; ஸ்தாபனமுமுண்டு. நமக்குப் பெருமையான பிதுரார்ஜிதமுண்டு; சரித்திரமுண்டு; நாகரிகமு மிருக்கிறது. நாமே அடிமைத்தனத்தில் மூழ்கியிருக்க விரும்பினுலொழிய, எந்தப் பலவானும் நம்மை அடிமைகளாக வைத்திருக்க முடியாது. நாம் பயங்கொள்ளிகளாக இருப்பதால், பிறர் நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிருர்கள். பயத்தினுல் உண்டாகியிருக்கும் மனப் பிராந்தியை விட்டொழி; நான்

உன்னை மன்றாடுகிறேன். அனல் கக்கும் எரிமலையின் மீது உன் நகரங்களை நிர்மாணி. உறுதியாய் நில்; வானத்தை முட்டும்படி தலைநிமிர்ந்து நில். யுத்தத்தால் தளர்ந்துபோன உலகத்துக்கு இந்தியாவே வழிகாட்டப் போகிறது.

இந்தியா ஒருநாளும் இறவாது; நீ அதைக் காப்பாற்றுவாய்.

5. நாமும் உலகசமுதாயமும்

அகண்ட ஹிந்துஸ்தானம் வெறும் அரசியல் அல்லது மதப் பிரச்னையல்ல என்பதை முன்பே கூறியிருக்கிறேன். இந்தத் தேசத்திலுள்ள எல்லாச் சமூகங்களும் வாழ்வதற்கு இந்தியாவின் ஐக்கியம் ஜீவாதாரம் ஆகிறது.

நம்முடைய வாழ்வில், உண்மையைவிடக் கோஷங்களையே பெரிதாய் மதிக்கத் தொடங்கி யிருக்கிறோம். கோஷம் என்பது ஒரு சில்லறை நாணயத்தைப் போன்றதாகும். ஒரு கருத்தை மிக ஏராளமான ஜனங்களிடம் பரப்புவதற்காகவே, கோஷங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. மிக ஏராளமான ஜனங்களிடம் பரவ வேண்டும் என்பதற்காக, கோஷங்களை மிகவும் எளியவைகளாகத் தயாரிக்கவேண்டி யிருக்கிறது. அப்படி எளியவையாய் அவை இருப்பதற்காக, பெரும்பாலும் அந்தக் கோஷங்களிலே போலி வார்த்தைகளைச் சேர்த்து விடுகிறோம். போலி வார்த்தைகளுக்கோ மதிப்பில்லாமல் போகிறது.

இப்படிப்பட்ட கோஷங்களில் '**தேசீய சர்வாதிகாரம்**' என்பதும் ஒன்று. இது, உலகத்தில் முந்நூறு வருஷங்களாகத் தாண்டவமாடுகிறது. இந்தத் தேசீய சர்வாதிகாரத்தின் பெயரால் ஐரோப்பாவில் பல யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஐரோப்பாவில் ரோம சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டது முதல் இன்று வரை இந்தக் கொள்கையால் பல பெரிய போர்கள் அங்கே தோன்றியிருக்கின்றன. இந்தக் கொள்கை

யால் தூண்டப்பட்ட தேசீயப் பேராசைகளால்தான் முதல் உலக யுத்தம் நிகழ்ந்தது. வர்ஸேல்ஸ் உடன் படிக்கையும் இதனாலேயே நடந்தது. பிரான்ஸுக்கு விரோதமான இங்கிலாந்தின் தேசீயப் பேராசையே ஹிட்லரின் ஆதிக்கத்துக்கு ஊன்றுகோலாயிருந்தது. சர்வதேசச் சங்கம் உண்மையான சர்வதேச அதிகாரம் செலுத்துவதைத் தடை செய்ததும், இதே தேசீய சர்வாதிகார மோகந்தான். இந்தத் தேசீயப் பேராசைகளில் மிகவும் மூர்க்கத்தனமானது ஹிட்லரின் ராஜீயக் கொள்கையே.

'தேசீய சர்வாதிகாரம்' என்ற கொள்கை உலகத்தின் வாழ்க்கைக்கே ஒத்ததல்ல; அவசியமுமல்ல. இந்தக் கொள்கை புராதன கால முதல் ஐரோப்பாவில் இருந்து வரவில்லையென்றும், பதினாறும் நூற்றாண்டுக்கு மேல்தான் இது ஐரோப்பாவில் தலைக்காட்ட ஆரம்பித்ததென்றும், பேராசிரியர் லஸ்கி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஒரு காட்டில், மிருகங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதைப் போலத்தான் இந்தக் கொள்கையும் சர்வதேச அரங்கத்தில் பயன்படுகிறது. ஒவ்வொரு மிருகத்தையும்போல, ஒவ்வொரு தேசமும் இன்னொன்றைக் கபளீகரம் செய்யப் பார்க்கிறது; அல்லது தானே மற்றொன்றுக்கு இரையாகி விடுகிறது. இப்படிப்பட்ட குறுகிய தேசீய சர்வாதிகாரக் கொள்கையின் விளைவால்தான் இரண்டாவது உலக யுத்தமும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கொள்கை கலப்பற்றதோர் அசத்தியம்; இயற்கைக்கு மாறானது. உலக நிலைமை, இது சித்தியடைய இடந்தராது. பல நூற்றாண்டுகளாக

உலகம் அனுபவித்த மாறுதல்களை ஆராய்வோமானல், உலக முழுமைக்கும் பொதுவாக உள்நாட்டுக் கலவரங்களையும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளையும் தடுக்கப் போதிய பலத்துடன் கூடிய ஒரு சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டாலொழிய, யுத்தங்களையே அடியோடு நிறுத்திவிடுவது என்பது கூடாத காரியமென, நாம் ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

சர்வதேசச் சங்கத்தால் செய்ய முடியாத காரியம் இப்பொழுது, இந்த யுத்தத்தின் காரணமாக, தானே நடந்து வருகிறது. என்று அச்சுநாடுகளின் கூட்டுறவு ஏற்பட்டதோ அன்றே தேசீய சர்வாதிகாரம் என்ற அரசியல் கொள்கையும் மாண்டுவிட்டது. என்று அமெரிக்க ஐக்கிய சர்க்கார் தங்களது 'ஸெனேட்'டில் குத்தகைக் கடன் மசோதாவை நிறைவேற்றினர்களோ, அன்றே அந்த அசத்தியப் பேராசை வெறியும் புதைக்கப்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள வெள்ளையர் குடியேற்ற நாடுகள், பெல்ஜியம், டச்சு இவைகளின் காலனிகள், அமெரிக்க ஐக்கியநாடு, ரஷ்யா, சீன முதலிய தேசங்கள் ஒருபுறமும், ஜெர்மனி, இதாலி, பிரான்ஸ், ருமேனியா, ஹங்கேரி, ஜப்பான் ஆகிய தேசங்கள் மறுபுறமும் இரண்டு பெரிய சமஷ்டிகளாக இன்று பிரிந்திருக்கின்றன. பாதுகாப்பு, அந்நியநாட்டு விவகாரங்கள் முதலிய எல்லா விஷயங்களிலும் ஒன்றுக்கொன்று விரோதமான இந்த இரண்டு சமஷ்டிகளுக்கும் தனித்தனியே தங்களுக்குள் ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. இவ்விரண்டில் ஒன்று யுத்தத்தில் வெற்றி பெறலாம். வென்ற தேசங்கள், தோற்ற தேசங்களையும் சேர்த்து

ஒரு பெரிய சமஷ்டியை அமைத்தாகவேண்டும். இவ்வித சமஷ்டி, அவைகளின் தற்காப்புக்காக மிக மிக அவசியமானது ஆகிவிடும்.

எனவே, மனித வர்க்கம் உய்யவேண்டுமானுல், தேசங்கள் எல்லாம் ஒரே சமுதாயமாகப் பிணைக்கப் படவேண்டும். அந்தச் சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்கு, சகல தேசங்களும் பணியவேண்டும். ஜனத்தொகை, செல்வம், சக்தி இவைகள் எப்படியிருந்தாலும், ஒவ்வொரு தேசமும் இந்தச் சமுதாயத்தின் கீழ்க் கொண்டுவரப்படவேண்டும் என்பதை, உலகம், அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டு விட்டது. உலக சமுதாயமே இந்தத் தேசீயப் பேராசைகளைக் கட்டுப்படுத்தப் போகும் நிலைக்கு, இன்றைய உலகம் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

ஓர் உலக சமுதாயம் அல்லது சர்வதேச சமஷ்டியில் இந்தியர்களும் சுதந்தரமுள்ள சம பங்காளிகள் என்று ஏற்றுக்கொள்ளப்படாததால்தான், இந்தியா சுயராஜ்யம் கோருகிறது. அதன் ஜனத்தொகை, செல்வம், சக்தி இவைகளுக் கிணங்க, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், வெள்ளைக் குடியேற்ற நாட்டினர்போல, தாங்களும் சுதந்தரமான பங்காளிகளாக, சரிநிகர் சமானமாய் வாழவேண்டும் என்பதே, இந்தியர்களின் சுதந்தரக் கோரிக்கைக்கு அர்த்தம். சுயராஜ்யம் என்பதன் பொருள் இந்தியாவுக்கு மட்டும் தனிமையாகத் தேசீய சர்வாதிகாரம் பெறுவதுதான் என்ருல், அது நமக்கு மட்டுமல்ல; முழு உலகத்துக்குமே கூட எல்லையில்லாத ஆபத்தை விளைவிக்கும். தனித்து வாழவேண்டுமென்ற அப்படிப்பட்ட மனப்பான்மை, உலகத்தையே காக்கும் பொறுப்புள்ள

'தர்மகர்த்தாக்கள்' வெள்ளையர்தான் என்று கர்வத்துடன் நினைக்கும் ஏகாதிபத்திய முறைக்கு ஊக்கம் அளித்துவிடும்.

பழுத்த தேசியவாதி விரும்பும் சுதந்தர இந்தியா, பழைய காலத்து வரம்பற்ற தேசிய சர்வாதிகாரங்கொண்ட சுதந்தர இந்தியாவாக இருக்க முடியாது. அதனுடைய பாதுகாப்பும், அந்நியநாட்டு விவகாரங்களும், சர்வதேசீயத் தன்மை பெற வேண்டும். அதனுடைய பிரதிநிதிகளும் சேர்ந்த ஓர் உலக சமஷ்டியின் அங்கத்தினர்களால்தான், அந்தப் பிரச்னைகள் கவனிக்கப்படவேண்டும். நமது எதிர்கால வாழ்க்கை இப்படித்தான் இருக்கவேண்டும். புத்தியுள்ள எவனும், இந்த யுத்தத்துக்குப் பிறகு வேறு எந்தக் கொள்கையும் பயன்படாது என்று நன்ருக உணருவான்.

நிலைமை இப்படியிருக்க, பிரிவினை வாதிகள், இந்தியாவின் ஒரு சிறுபான்மை வகுப்பினருக்குத் தனியே தேசீய சர்வாதிகாரம் வேண்டும் என்பதைப் பற்றி என்ன சொல்வது? ஹிந்து-முஸ்லிம் தேசீய வாதிகள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களின் விருப்பத்துக்கு மாருக, இந்தக் காரியத்தைச் செய்ய இந்தப் பிரிவினை வாதிகள் நினைக்கிருர்கள். காங்கிரஸ், ஹிந்து மகாசபை, ஆஸாத் முஸ்லிம்கள், மொமின்கள் மகாநாடு, அஹ்ரார்கள் முதலிய பெரிய ஸ்தாபனங்களின் முயற்சிகளுக்கு மாருகவே இந்தக் கெட்ட எண்ணம் கிளம்பி யிருக்கிறது. இந்தக் கெட்ட எண்ணம் ஒரு மாய மானுகும். கடைசி வரையில் ஒரு மாயமானுகவே இருக்கவும்தான் போகிறது. இந்தக் கொள்கை ஒருநாளும் சித்தியடையப் போவ

தில்லை. ஆயினும், இந்தப் பொல்லாத கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள், தேசத்தின் அமைதியையும் இன்பத்தையும் அபாயத்துக்குள்ளாக்குவதோடு, இந்திய மக்களின் சுதந்தரத்தையும் தடை செய்கிருர்கள்.

மதவெறியும், தேசீய சர்வாதிகாரப் பேராசையும் சேர்ந்து உண்டாக்கியதே இந்தப் பாகிஸ்தான் கொள்கை. இந்தியாவில் பெரும்பான்மை மக்களுடன் இனத்திலும் ஒற்றுமையிலும் பொருளாதார அமைப்பிலும் ஒன்ருயிருப்பதும் நாகரிகத்தில் அதிக வேற்றுமை யில்லாததுமான ஒரு சிறுபான்மைக் கோஷ்டியினருக்குத் தேசீய சர்வாதிகாரம் வேண்டுமென்ற உரிமையைப் பெற நினைப்பதே இந்தப் பாகிஸ்தான் கொள்கை. ஓர் இந்திய சர்க்காருக்குப் பதிலாக, இரண்டு இந்திய சர்க்கார்கள் தோன்றுவதை இது கனவு காண்கிறது. ஒவ்வொரு சர்க்காருக்கும் பிரத்தியேகமான ராணுவமும், அயல்நாட்டுக் கொள்கையும் இருக்கும்; ஒவ்வொரு சர்க்காரிலும் கொடூரமான சிறுபான்மையோர் பிரச்சினையும் இருக்கும்.

அகண்ட ஹிந்துஸ்தானம் வெறும் மனோராஜ்யமல்ல. இனம், பொருளாதாரம், நாகரிகம் ஆகியவற்ருல் பிணைக்கப்பட்ட இந்திய மக்களின் ஐக்கியமே, அகண்ட ஹிந்துஸ்தானம். சென்ற நூற்ருண்டில், பிரிட்டிஷாராலும் பொதுஜன சக்தியாலும் அது வளம்பெற்றது. பழைய ஐதீகங்களால் அது புனிதமாக்கப்பட்டது. ஆகையால், இந்த அகண்ட ஹிந்துஸ்தானம், நீடூழி வாழும்!

* * *

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 SEP 1942
MADRAS

6. மகா அபாயம்

அகண்ட ஹிந்துஸ்தானத்துக்காகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டிய அவசியத்தை நான் வற்புறுத்துவது பீதியால் அல்ல. நமது நாட்டின் க்ஷேமத்தை அழிக்கவிருக்கும் ஒரு பெருத்த அபாயத்தை, ஜனங்கள் உணரும்பொருட்டே நான் இப்படி முயற்சிக்கிறேன்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்க ளாயினும், ஒரே இனத்தவராதலால், தங்களிடையேயுள்ள மத வேறுபாடுகளை நேச பாவத்துடன் தீர்த்துக்கொண்டார்கள்.

இதைச் சற்று ஆராய்வோம்:

1. தேசத்திலுள்ள அரசியல் விரோதங்கள், மத வேற்றுமைகளால் ஏற்பட்டவை அல்ல. மொகலாய அரசர்களுக்குள் மிகவும் மதவெறிகொண்ட அவுரங்கசீப், ஹிந்துக்களோடு மட்டும் போர் புரியவில்லை; தெற்கே யிருந்த முஸ்லிம் ராஜ்யங்களுடனும் போரிட்டான். கிழக்கிந்தியக் கம்பெனியார் நடத்திய யுத்தங்களில், ஹிந்துக்களே ஹிந்துக்களுடனும், முஸ்லிம்களே முஸ்லிம்களுடனும் போரிட்டார்கள். 1857-ஆம் ஆண்டில் நடந்த சிப்பாய்க் கலகம், மொகலாய சக்கரவர்த்தியின் பெயரால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து நடத்திய சுதந்தரப் போரே யாகும்.

2. இரு சமூகங்களிடையேயும் அப்பொழுது சமூக ஒத்துழைப்பு நன்ருய் நடைபெற்றது. ஒவ்வொருவருடைய மதத்துக்கும், சமூகப் பழக்கங்களுக்கும் மற்றவர் மரியாதை காட்டினுர்கள். மசூதிக்கு முன்னுல் வாத்தியம் வாசிப்பதைப்பற்றிச் சச்சரவு கிடையாது. அந்தந்த மாகாணத்து மொழியே ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான தாய் மொழி. மத மாற்றப் பிரசாரம் தீவிரமாக அனுஷ்டிக்கப்படவில்லை. மதம் மாறினவன்கூட, மத விஷயம் ஒன்றைத் தவிர, தன்னுடைய சொந்தப் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவில்லை.

3. ஒவ்வொரு மாகாணத்திலும், அந்தந்த மாகாணவாசிகளின் இன ஒற்றுமை அவர்களை ஐக்கியப்படுத்தியது. உதாரணமாக, பஞ்சாபில் இருந்த ஜாட் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு ஹிந்துவுக்கும், ஒரு ஜாட் சீக்கியனுக்கும், ஒரு ஜாட் முஸ்லிமுக்கும் இருந்த இன ஒற்றுமை, பஞ்சாபின் ஒரு ஜாட் ஹிந்துவுக்கும், ஒரு தென்னிந்தியத் தமிழ் ஹிந்துவுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.

4. ஜாதிப் பிரிவுகளும், அவிபக்த குடும்ப முறையும் ஹிந்துக்களிடையே இருந்தது போலவே, முஸ்லிம்களிடையேயும் இருந்தன.

5. ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இரு சாராரிடமும் சகிப்புத்தன்மை குடிகொண்டிருந்தது. தங்கள் தங்கள் மத தத்துவங்களை அவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள். அதனுல் அவர்களிடையே மதச் சண்டைகளை காணப்படவில்லை. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை, கபீர் உபதேசித்தார். தியாளபவான், ஜமாலிஸுல்தான் என்ற

இரண்டு மகான்கள் சாகும்வரை தோழர்களாகவே யிருந்தார்கள். பஞ்சாபிலுள்ள அவர்களின் சமாதி களை, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்தே இன் றும் வணங்குகிறார்கள். **பாவா** என்ற முஸ்லிம் மஹான் ஒரு ஹிந்து மஹானின் சிஷ்யர். **பாபா ஷஹான** என்னும் ஹிந்து மஹான் ஒரு முஸ்லிம் மஹானின் சிஷ்யர். குஜராத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஆலயங்களுக்கும் மசூதிகளுக்கும் மரியாதை காட்டியதோடு, தங்கள் தங்கள் மத வித்தி யாசங்களைக் கவனிக்காமல், அவைகளில் பிரார்த்தனை களையும் செலுத்தினார்கள்.

6. ஜனங்கள் அனைவரும் ஓரினத்தவராய் இருந் ததால், அவர்களிடம் பொருளாதார ஐக்கியமும் ஊன்றியிருந்தது.

1857-ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் இந்தியா முழுவதையும் வென்றார்கள். அதற்குப் பின், ஹிந்துக் களும் முஸ்லிம்களும், ஒரு கொடியின் கீழ் ஒன்று பட்டு, தங்கள் தாய்நாட்டின் சுதந்தரத்தைப் பெற, பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கலகம் செய்தார் கள். அதற்காக அவ்விரு சமூகங்களையும் சேர்ந்த பல்லாயிரம் பேர் தங்கள் ரத்தத்தையும் சிந்தினார்கள். அதன் பின்னரும், பல வருஷங்கள், தங்கள் பொது விரோதியாகிய பிரிட்டிஷாரை, ஹிந்துக்களும்—முஸ் லிம்களும் ஒன்று சேர்ந்தே எதிர்த்துப் போராடினார் கள். இவர்களின் சுதந்தர உணர்ச்சிக்கும், தியாகத் துக்கும் காரணமா யிருந்தது பரஸ்பர ஒத்துழைப்பே. இதே ஒத்துழைப்பின் உருவான பயன்தான், காங் கிரஸ் மஹாசபையின் தோற்றமும் அதன்பின் அந்தச் சபை இருபது வருஷங்கள் செய்த சேவையும்.

பிரிட்டிஷ் ஆட்சியும், அதன் ஸ்தாபனங்களும் கல்வி முறையும் ஒரே இனத்தைச் சேர்ந்த இவ்விரு சமூகங்களிடையேயும் இருந்த ஒற்றுமையை, முதலில் பலப்படுத்தின.

1857-ஆம் ஆண்டில், பிரிட்டிஷார், சீக்கியர்களின் உதவியைக் கொண்டு, ஹிந்து-முஸ்லிம் அதிகாரத்தை அழித்தார்கள். அதன் பின்னர் ஏற்பட்ட சமாதானத்தை உபயோகித்துக் கொண்டு, இந்தியர்கள், தங்களுடைய தேசத்தில் அதிகாரம் பெறவும் பொருளாதார ஆதிக்கம் அடையவும், பிரிட்டிஷாருடன் போராட ஆரம்பித்தார்கள். பிரிட்டிஷார் இதை எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள் ?

ஜனத்தொகையிலும் படிப்பிலும் செல்வத்திலும் மேலோங்கி யிருந்த ஹிந்துக்களே, இந்தப் போராட்டங்களில், பிரிட்டிஷாரின் பலமுள்ள முக்கிய விரோதிகளாக ஆகிவிட்டார்கள். உடனே பிரிட்டிஷாரும் தங்களுடைய ஆதிக்கத்தை நீடித்துக் கொள்ள, இந்த நாட்டின் முக்கியமான சிறுபான்மைக் கோஷ்டியான முஸ்லிம்களைத் தட்டிக்கொடுக்க ஆரம்பித்தார்கள். இந்தக் காரியம் பகிரங்கமாக மனங்கூசாமல் செய்யப்பட்டது.

பிரபல முஸ்லிம்கள் அடங்கிய ஒரு தூதுக் கோஷ்டி, அப்பொழுதைய வைஸிராயான லார்டு மிண்டோ துரையைப் பேட்டிகண்டு, அரசியலில் தங்களுக்குத் தனித் தொகுதி முறையைக் கோரியது. இதைத்தான் காலஞ்சென்ற மௌலானா முகமத் ஆலி, '**முதலாளியின் கட்டளைப்படி நடைபெற்ற கச்சேரி**' என்று வர்ணித்தார். இதன் பொருள், '**தனித்** தொகுதி முறை தங்களுக்கு **வேண்டும்**' என்று முஸ்

லிம்களைக் கேட்கும்படி தூண்டியது பிரிட்டிஷ் ஆட்சி வர்க்கமே என்பதுதான்.

1909-ஆம் வருஷம் நம்மீது திணிக்கப்பட்ட புதிய அரசியல் திட்டத்தில், தனித் தொகுதி முறை முதன் முதலாகப் புகுத்தப்பட்டது. 'இவ்விதம், வேண்டுமென்றே, பிரிட்டிஷார் நம்மிடையே பிளவுகளைச் சிருஷ்டித்தனர். **ஸையத் ஹஸன் இமாம், முகமத் அலி ஜின்னு** இவ்விருவரும், தேசீய ஒற்றுமையின் பொருட்டு இந்த முறையைக் கடுமையாக எதிர்த்தார்கள், ஆனால் பயனில்லை.

இரண்டாவது கட்டம்: இதுவரை, முஸ்லிம்கள், மத விஷயத்தில் மட்டும் சிறுபான்மையோராக இருந்தார்கள். இதற்குப் பின் அரசியலிலும் அவர்கள் சிறுபான்மையோராகக் கருதப்பட்டார்கள். அவநம்பிக்கை விதையும் விதைக்கப்பட்டது. தனித் தொகுதி முறையால் பலன் அடைந்த வகுப்புவாத முஸ்லிம் பிரதிநிதிகள், இந்த அவநம்பிக்கைச் செடியை வளர்க்க ஆரம்பித்தார்கள்.

முதல் மஹாயுத்தம் (1914—18) நமது தேசத்தில் ஒரு சுதந்தர ஆவேசத்தைக் கிளப்பியது. நாடெங்கும் சுய ஆட்சிக் கிளர்ச்சி வலுத்தது. இதைத் தடுக்க, தனித் தொகுதி முறைதான் பிரிட்டிஷாருக்கு மிகவும் வசதியாயிருந்தது.

1919-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில், மத்தியச் சட்டசபையைச் சேர்ந்த பத்தொன்பது அங்கத்தினர்கள். புதிய சீர்திருத்த விஷயமாக ஒரு மகஜரைச் சர்க்காரிடம் சமர்ப்பித்தார்கள். உடனே சில முஸ்லிம் தலைவர்களும், தங்கள் சமூகத்தவருக்குப் பஞ்சாபிலும் மத்திய மாகாணத்திலும் தனித்தொகுதி

முறையை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு சட்டசபையிலும் முஸ்லிம் பிரதிநிதிகளின் தொகைகளை நிர்ணயிக்க வேண்டுமென்றும், மத சம்பந்தமான சட்டங்கள் செய்வதில் பாதுகாப்புக்கள் வேண்டுமென்றும் சில கோரிக்கைகளைச் சர்க்காரிடம் சமர்ப்பித்தார்கள்.

1916-ஆம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் லக்ஷ்மணபுரியில் நடந்த காங்கிரஸில் ஹிந்து-முஸ்லிம் ஒத்துழைப்புக்காக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தப்படி, சட்டசபைகளில் முஸ்லிம்களுக்கு அவர்களின் ஜனத்தொகைக்கு அதிகமாகவே, பிரதிநிதிகளின் விகிதாசாரம் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டவுடன், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து தேச விடுதலைக்காகப் போராடுவார்கள் என்று அப்பொழுது சொல்லப்பட்டது!

லக்ஷ்மணபுரி ஒப்பந்தப்படி சட்டசபைகளில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த சலுகையின் புள்ளி விபரம் வருமாறு:

மாகாணம்	முஸ்லிம்களின் ஜனத்தொகை	முஸ்லிம் ஸ்தானங்களின் விகிதாசாரம்
வங்காளம்	52·6 %	76 %
பீஹார், ஒரிஸா	10·5 %	238 %
பம்பாய், ஸிந்து	20·4 %	163 %
மத்திய மாகாணம்	4·3 %	349 %
சென்னை	6·5 %	231 %
பஞ்சாப்	54·8 %	91 %
ஐக்கிய மாகாணம்	14·0 %	214 %

இந்த லக்ஷ்மணபுரி ஒப்பந்தமானது, அடுத்த சீர்திருத்தம் வழங்கிய இந்தியா மந்திரி மாண்டேகு பிரபுவுக்கும், இந்திய வைஸிராய் செம்ஸ்போர்டு பிரபுவுக்கும் பிடிக்கவில்லை. ஆனாலும், அவர்கள் இதை ஒப்புக்கொண்டார்கள். இதிலே ஒரு முக்கிய மாறுதலையும் செய்தார்கள். 'மத சம்பந்தமான மசோதாக்களை அந்தந்த மதத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆமோதிக்க வேண்டும்' என்ற நிபந்தனைக்குப் பதிலாக, 'அந்த மசோதாக்கள் வைஸிராயின் சம்மதம் பெற்றே சட்டசபைகளில் கொண்டு வரப்பட வேண்டும்' என்று ஒரு திருத்தமும் செய்தார்கள்.

மூன்றாவது கட்டம்: முஸ்லிம்களுக்குத் தாங்கள் தான் 'ரட்சகர்கள்' என்று பிரிட்டிஷார் கூறிக்கொண்டார்கள். முஸ்லிம் வகுப்புவாதிகளும் தேசியத்துக்கு விரோதமாக, பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டார்கள். இந்தச் சீர்திருத்தத்துக்குப் பிறகு ஏற்பட்ட சட்டசபை விவாதங்களைக் கவனித்தால், முஸ்லிம் வகுப்புவாதிகளின் கோரிக்கைகள் பெருகிக் கொண்டே வந்ததைப் பார்க்கலாம். நாடெங்கும் ஹிந்து-முஸ்லிம் கலகங்களும் சகஜமாகிவிட்டன. பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் மனப்பான்மையும், ஹிந்துக்களுக்கும், தேசீய மஹாசபையான காங்கிரஸுக்கும் விரோதமாகவே யிருந்தது.

லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்துக்குக் காரணஸ்தர்களாக இருந்த பெரும்பாலான முஸ்லிம் தலைவர்கள் இப்பொழுதும் திருப்திகொள்ளவில்லை. பதினான்கு புதிய கோரிக்கைகளை அவர்கள் விடுத்தார்கள். இந்திய சுதந்தரத்துக்காக மற்றவருடன் ஒன்றுபட,

தங்களுடைய பதினான்கு கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென வற்புறுத்தினார்கள்.

அந்தக் கோரிக்கைகளில் அடியில்கண்ட மூன்று நிபந்தனைகளும் காணப்பட்டன :

1. **தங்களுக்கு ஏற்கனவே ஆறு மாகாணங்களில் கிடைத்த அதிகப்படி விகிதாசாரம் அப்படியே இருக்கவேண்டும்.**
2. **வங்காளத்திலும், பஞ்சாபிலும் தங்களுடைய பெரும்பான்மை நிலைமை மாறக்கூடாது.**
3. **ஸிந்து, வடமேற்கு எல்லைப்புறம் என்னும் இரண்டு முஸ்லிம் மாகாணங்கள் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட வேண்டும்.**

இந்தக் கோரிக்கைகள் ஒப்புக் கொள்ளப்பட்டால், தாங்களும் கூட்டுத்தொகுதி முறையை ஒப்புக் கொள்வதாக, முஸ்லிம்கள் சொன்னார்கள். ஹிந்துக்கள், இந்தக் கோரிக்கைகளை அடியோடு எதிர்த்தார்கள். ஆனால், மத்தியஸ்தரா யிருந்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி, அநேகமாக இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் இணங்கிவிட்டார். இதனால் தேசீய வாதிகளும் ஹிந்துக்களும் தோல்வியடைந்தார்கள். இவ்வாறு, கூட்டுத்தொகுதி முறை ஏற்படுத்துவதை, பிரிட்டிஷாரே கெடுத்துவிட்டார்கள்.

நான்காவது கட்டம்: தாங்கள் மதவிஷயத்திலும், ராஜீயத்திலும் சிறுபான்மையோரென, இந்திய முஸ்லிம்கள் இதுவரை பாதுகாப்புக்கள் கோரினார்கள். ஆனால், இப்பொழுதோ, முழு இந்தியாவிலும் அதிகாரத்தில் தங்களுக்குச் சமபங்கு வேண்டுமென்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். பிரிட்டிஷாரும்

இதற்கு ஒப்புக்கொண்டார்கள். தேச ஒற்றுமையைக் குறித்து இந்த முஸ்லிம் தலைவர்கள் ஒருவிதமான உறுதிமொழியுந் தரவில்லை. இத்துடன் ஆபத்து நின்றுவிடவில்லை. இந்தியச் சீர்திருத்தம் பற்றிப் பிரசுரிக்கப்பட்ட **ஸைமன் யாதாஸ்தில்**, "இந்தியா ஒரே தேசமல்ல; ஹிந்து சமூகமுமல்ல; பல சிறுபான்மைக் கோஷ்டிகள் நிறைந்த ஒரு நாடே" என்று வர்ணிக்கப்பட்டது. தேசீயத்துக்கு விரோதமாகச் சண்டையிடும் இந்தச் சிறுபான்மைக் கோஷ்டிகளின் ரட்சகர்கள் பிரிட்டிஷாரே என்பதுதான் இதன் உட்கருத்து.

பிரிவினைவாதிகளின் கோரிக்கைகள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே வந்தன. ஐரோப்பாவில், ஹிட்லர் அனுஷ்டித்த முறைகளே, இவர்களுக்கும் வழிகாட்டியாயிருந்தன. முஸ்லிம்கள் இனிமேல் அரசியலில் மட்டும் சிறுபான்மையோர் அல்ல என்றும், அவர்கள் ஒரு தனித்தேசீயச் சிறுபான்மைக் கோஷ்டியினரே ஆவார்கள் என்றும் பிரிவினை வாதிகளின் சார்பாகச் சொல்லப்பட்டது.

சென்ற யுத்தத்துக்குப் பிறகு, **வெர்ஸேல்ஸ்** உடன்படிக்கையின்படி, ஒரு தேசத்தில் ஆட்சிபுரியும் ஓர் இனத்தாரின் கீழ் இன்னோர் இனத்தாரைச் சேர்ந்த சிறுபகுதிகள் இருந்தன. இந்தப் பகுதிகளில் உள்ள ஜனங்களுக்குச் சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு சர்வதேசச் சங்கத்திடம் இருந்தது. இந்தத் தேசீயச் சிறுபான்மைக் கோஷ்டியினர், தாங்கள் தாங்கள் வசித்துவந்த தேசங்களுக்கு விரோதமாகக் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். இதன் பயன்தான்

இன்று நடக்கும் மகாயுத்தம். உதாரணமாக, செக்கோஸ்லாவாகியா நாட்டிலுள்ள 'சூடேட்டன்' ஜெர்மன் மக்களைக்கொண்டே, செக்கோஸ்லாவாகியாவை ஹிட்லர் அழித்தார்.

முஸ்லிம் லீக்கும், ஹிட்லரைப்போலவே, தனது கிளர்ச்சியை இந்த நாட்டில் ஆரம்பித்தது. 1938-ஆம் வருஷம் அது கேட்ட கோரிக்கைகள் அடியில் கண்டவையாகும்:

1. 1929-ஆம் வருஷம் கேட்கப்பட்ட பதினான்கு கோரிக்கைகள். (இவைகளின் சாராம்சம் மாகாண சர்க்கார்களுக்குத்தான் முக்கிய அதிகாரங்கள் இருக்கவேண்டும்; மத்திய சர்க்காருக்கல்ல என்பதே.)
2. முஸ்லிம்களுக்கு உத்தியோகங்களில் சட்டரீதியாக ஒரு பங்கு கொடுக்க வேண்டும்.
3. சமூக வழக்கங்களுக்கும், கலாசாரத்துக்கும் பாதுகாப்புக்கள் வேண்டும். பசுக்களை முஸ்லிம் மத ஆசாரப்படி, கொல்லும் உரிமையும் காக்கப்பட வேண்டும்.
4. வந்தேமாதர கீதம் பாடுவது நிறுத்தப்பட வேண்டும். காங்கிரஸின் மூவர்ணக்கொடியை உபயோகிக்கக்கூடாது; அல்லது முஸ்லிம் லீக் கொடியையும் அதற்குச் சமமாக உபயோகப்படுத்த வேண்டும்.
5. இந்திய முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக்தான் பிரதிநிதித்துவ சபை என்று அங்கீகரிக்கப்பட வேண்டும்.
6. மாகாணங்களில் கூட்டு மந்திரிசபைகள் அமைக்கப்பட வேண்டும்.

தேசீயம், ஜனநாயகம் போன்ற உயரிய லட்சியங்கள் வெற்றிபெறப் பாடுபடும் காங்கிரஸ்வாதிகளையும், ஹிந்து-முஸ்லிம் தேசீயவாதிகளையும், தங்

கள் லட்சியங்களை இழந்துவிடும்படி, இந்தக் கோரிக்கைகளின் மூலம் இந்த முஸ்லிம் வகுப்புவாதிகள் வற்புறுத்துகிறார்கள். அரசியலில், தாங்கள் சரிசமமாகப் பாவிக்கப்பட வேண்டுமென்று இந்தக் கோரிக்கைகளின்படி, இவர்கள் பெரும்பான்மையினரைக் கட்டாயப்படுத்துகிறார்கள்.

ஐந்தாவது கட்டம்: 1939-ஆம் வருஷம் முஸ்லிம் லீக்கின் கோரிக்கைகள் இன்னும் பெருகிவிட்டன:

1. சட்டசபைகளிலும், உத்தியோகங்களிலும் முஸ்லிம்கள் நூற்றுக்கு ஐம்பது பங்கு இருக்கவேண்டும்.

2. உர்துவே தேசீய பாஷை ஆக வேண்டும்.

இவைபோலவே இன்னும் பல கோரிக்கைகளைச் சொன்னார்கள். இந்தியர்களில் மிகப் பெரும்பாலோரின் புண்ணிய பாஷையாக ஸம்ஸ்கிருதம் இருந்தாலும், ஸம்ஸ்கிருத வார்த்தைகளையே நாம் உபயோகப்படுத்தக்கூடாதாம். மத்திய மாகாணத்தில், முஸ்லிம்கள் நூற்றுக்கு நாலரைப் பங்காக இருந்தாலும், 'வித்தியா மந்திர்' என்ற சாதாரணப் பதத்தைக் கூட நாம் உபயோகப்படுத்தக் கூடாது என்கிறார்கள். இந்திய ஜனத் தொகையில் (நாலுகோடி முஸ்லிம்களும் உள்பட) முப்பத்திரண்டுகோடிக்கு அதிகமாக உள்ள இந்திய மக்களில் நூற்றுக்கு எண்பது பேர் ஸம்ஸ்கிருத பாஷையை அஸ்திவாரமாகக்கொண்ட மொழிகளைப் பேசுபவர்களாய் இருக்கிறார்கள். அப்படியிருந்தும், உர்துவைத்தான் தேசபாஷை ஆக்க வேண்டுமாம்!

ஜனங்களின் சமூக வித்தியாசங்களைச் சாந்தப் படுத்தி இணைக்கும் கல்விமுறை, விவாகம் முதலிய காரியங்கள் இப்பொழுது தனித்தனியாகப் பிரிக்கப் படுகின்றன. ஒரு முஸ்லிம் பையன் உர்துவில்தான் படிக்க வேண்டுமாம். அவனுடைய பாடப் புத்தகத் தில் இஸ்லாம் மத சம்பந்தமான விஷயங்களைத் தவிர, வேறு ஒன்றும் இருக்கக்கூடாதாம். ஹிந்துப் பழக்க வழக்கங்களை அனுசரித்து வந்த பலகோடி முஸ்லிம் களின் வாழ்க்கை, **ஷரியத்தின்** கீழே (முஸ்லிம்களின் சட்டம்) கொண்டுவரப்பட்டது. மதமாற்றம் செய் வதன்மூலம் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் கொள் கையை ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு புனிதமான காரிய மாக மதிக்க வேண்டும் என்று தூண்டப்பட்டது. இதன் பயனாக, இரண்டு சமூகங்களும் வரவரப் பிரிந்துபோக ஆரம்பித்தன. இன்று இவ்விரு சமூ கங்களிடையேயும் அவநம்பிக்கையும் ஆத்திரமுமே தோன்றியிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. குறுகிய திருஷ்டியுள்ளவர்கள் செய்த மகத்தான 'சேவைகள்' இவைதான்.

ஆறாவது கட்டம்: ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இவ்விரு சமூகத்தாரும் தனித்தனித் 'தேசத்தவர்' என்ற **பாகிஸ்தான் திட்டம்** அரங்கத்துக்கு வந்தது. காந்திஜீ ஹிந்துக்களின் பிரதிநிதியாகக் கருதப்பட் டார். 'முஸ்லிம்கள் சிறுபான்மையோர் அல்ல; ஒரு தனித் தேச மக்கள். காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தா பனம்' என்கிறார்கள் பிரிவினைவாதிகள்.

ஹரிஜனத் தலைவர்களில் ஒருவரான **டாக்டர் அம்பேத்கார்**, பாகிஸ்தான் திட்டம்பற்றி அக்கரையாக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில், அவர், முஸ்

லிம்கள் நிறைந்த பிரதேசங்களையே பாகிஸ்தானில் சேர்த்திருக்கிறார். ஆனால், பிரிவினைவாதிகளோ இந்தப் பாகிஸ்தான்பற்றி, வேண்டுமென்றே, ஒன்றும் தெளிவாகக் கூறவில்லை. அவர்கள் 'இருக்கஇடம்' வேண்டுமென்கிறார்கள்; துறைமுகங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள்; தாங்கள் ஏகாதிபத்தியம் நடத்தத் தங்களைச் சுற்றியிருக்கும் ஹிந்து ராஜ்யங்கள் வேண்டுமென்றும் கேட்கலாம், அவர்களது ஆசைக்கோர் அளவில்லை.

1940-ஆம் வருஷம் ஏழாவது கட்டத்துக்கு வந்திருக்கிறோம்: இப்பொழுது பிரிவினைவாதிகள், தாங்கள் உயரினத்தவர் ஆதலால் இந்தியாவை ஆளும் உரிமை தங்களுக்கே வேண்டும் என்கிறார்கள். வைஸிராய் லின்லித்கோப் பிரபுவிடம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்:

1. மத்திய சர்க்காரில் காங்கிரஸ் சேர்ந்தால், நிர்வாகசபையில் முஸ்லிம்களுக்கு நூற்றுக்கு ஐம்பதுபங்கு ஸ்தானங்கள் இருக்க வேண்டும்; காங்கிரஸ் சேராவிட்டால், பெரும் பகுதியும் தங்கள் வசமே இருக்கவேண்டும்.
2. பிரிவினைவாதிகளின் சம்மதமின்றி, மத்திய சர்க்காரில் எவ்வித மாறுதலையும் செய்யக்கூடாது.

இவ்வாறு தேசீயம் அழிக்கப்பட வேண்டும்; ஹிந்துக்கள் அடிமைகள் ஆக்கப்பட வேண்டும். பிரிட்டிஷாரும் - முஸ்லிம்களும் சேர்ந்ததோர் அதிகாரவர்க்கம் இந்தியாவை ஆளவேண்டும். இந்தத் திட்டம், ஓர் அதிதீவிரப் பைத்தியக்காரனின் மூளையிலிருந்து உதித்த அபூர்வமான யோசனையின் விளைவாகத் தோன்றலாம். ஆனால், அது உண்மையல்ல.

சமீபத்தில் நடந்த வகுப்புக் கலகங்களால், பிரிவினைவாதிகள் ஆழ்ந்த யோசனையுடன் காரியங்களை நடத்துகிறார்கள் என்று தெளிவாகிவிட்டது. டாக்டர் அம்பேத்காரே பின்வருமாறு சொல்லுகிறார் :

“ அரசியலில் காலிகளின் முறைகளை முஸ்லிம்கள் கையாள ஆரம்பித்து விட்டார்கள். வகுப்புக் கலகங்கள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ‘ சூடேட்டன் ’ நாட்டு ஜெர்மானியர்கள், செக்கோஸ்லாவாகியாவில் கையாண்ட முறைகளையே இவர்களும் தீவிரமாகப் பின்பற்றுகிறார்கள் என்று தெரிகிறது.” *

பாகிஸ்தான் கூச்சலைப் பிரிவினைவாதிகள்தான் போடுகிறார்கள் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. இந்த விஷமக் கூச்சல், ஹிந்துக்களுக்கு விரோதமான கோஷமாக முஸ்லிம் பொது மக்களிடமும் பரவி விட்டது.

இந்த அசுரனை உற்பத்தி செய்து கொழுத்து வளர ஊக்கமளித்தது, பிரிட்டிஷ் அதிகாரவர்க்கமே. இதனுடன் போராட, அந்தச் சர்க்காருக்கு இன்று வலிமை இல்லை. பின்னால் வருவதை யோசியாமல், பிரிட்டிஷ் சர்க்கார், இவ்வாறு காரியங்களைச் செய்கிறது. இந்தியாவில் பிரிட்டனின் பெரிய நண்பன் யார் ? பிரிட்டிஷ் ஐதீகங்களில் நன்றாய் ஊறி, அதன் இலக்கியச் சுவையை உணர்ந்த இந்தியத் தேசீயவாதியே, அவன் ஒரு குடியேற்ற நாட்டந்தஸ்தையே

*** டாக்டர் அம்பேத்கார் எழுதிய “ பாகிஸ்தான்பற்றி என் கருத்துக்கள் ” என்ற புத்தகத்தின் பக்கம் 267-இல் காணப்படும் வாக்கியங்கள்.**

விரும்பினுன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சரிசமான மாக இருப்பதைத் தவிர, அவன் வேறென்றையும் விரும்பவில்லை.

ஆனுல், முஸ்லிம்கள் இந்தத் தேசீயவாதியை எதிர்ப்பதற்குக் கொஞ்சங் கொஞ்சமாகத் தூண்டப் பட்டார்கள். இதன் முடிவு என்ன? பிரிவினை வாதிகள், தங்கள் மதவெறியை உபயோகப்படுத்திக் கொண்டு, தாங்களே இந்த நாட்டை ஆளுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிருர்கள்.

முன்பு கூறப்பட்ட டாக்டர் அம்பேத்கார் எழுதிய அதே புத்தகத்தில், 'தற்காப்புக்கள் தளர்ந்தன' என்ற ஓர் அத்தியாயம் இருக்கிறது. அந்த அத்தியாயத்திலிருந்து நாம் பின்வரும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். 1921-ஆம் வருஷம் முஸ்லிம்கள் இந்திய ராணுவத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து சதவிகிதம் இருந்தார்கள். 1930-ஆம் வருஷம் முப்பது சதவிகிதம் ஆகிவிட்டார்கள். இந்தியா படிப்படியாகச் சுயஆட்சி பெற்ருல், ஹிந்து அரசியல்வாதிகள் அதிகாரம் செலுத்துவார்களே என்று பயந்து, ராணுவத்தை இவர்களுக்கு விரோதமாக முஸ்லிம்களைக்கொண்டு பலப்படுத்த, பிரிட்டிஷ் சர்க்கார் முயன்றுகொண்டிருக்கிருர்கள். 1940-ஆம் வருஷம் ராணுவத்தில் முஸ்லிம்களின் தொகை எழுபது சதவிகிதமாய் இருக்கலாம் என்று அம்பேத்காரே நினைக்கிருர். சிலர் இன்னும் அதிகம் என்று சொல்லுகிருர்கள். ஆனுல், இதன் மர்மம் ஒருவருக்கும் தெரியாது!

ஆனுல்,நாம் இதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷாரும், இப்பொழுதைய வைஸிராயும், பிரிவினையால் ஏற்படும் அபாயங்களை நன்ருய்

உணர்ந்தே, 1935-ஆம் வருஷத்துப் புதிய அரசியல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார்கள். இந்த யுத்தம் ஆரம்பித்ததும், அவர்களின் எண்ணமும் பயனற்றுப் போய்விட்டது.

இப்பொழுது, தேசத்தைப் பிரித்துப் பரஸ்பரம் விரோதமுள்ள இரண்டு இந்தியாக்களைச் சிருஷ்டிக்கத் தீவிரமான முயற்சிகள் நடைபெறுகின்றன. இது பலிக்காவிட்டால், தேசீயத்தை அழித்து ஹிந்துக்களைச் சட்டரீதியாக ஒரு சிறுபான்மை நிலைக்கு அழுத்திவிடவும் முயற்சிகள் நடக்கின்றன.

முஸ்லிம்களே பெருவாரியாக இருக்கும்படியாகச் சில மாகாணங்கள் அமையுமாறு, தற்போதைய மாகாண எல்லைகளை மாற்றும்படி, முஸ்லிம்கள் சொல்லலாம். அப்படிப்பட்ட மாகாணங்களுக்கு அதிகமாக அதிகாரம் இருக்க வேண்டுமெனக் கேட்கலாம். மத்திய சர்க்காரால் தங்கள் மாகாணங்களின் அதிகாரம் குறைக்கப்படாமல் இருக்கப் பாதுகாப்புக்கள் கோரலாம். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் எல்லா மாகாணங்களிலும், மத, சமுதாய வாழ்க்கைகளில், ஜீவாதாரமான உரிமைகள் அளிக்க வேண்டும் என்று கேட்கலாம். இந்தக் கோரிக்கைகள் நியாயமானவை என்று நாம் ஒப்புக்கொள்வோம்.

ஆனால், அவர்கள் இப்பொழுது கேட்பதோ நமது தேசத்துக்கும், நமது பொதுமக்களுக்கும்,-ஏன், முஸ்லிம்களுக்கும்கூட -பெருத்த அபாயத்தைத் தேடுவதாய் இருக்கிறது. எனினும், இந்த முயற்சிகள் பலிக்கப்போவதில்லை. ஆனால், இந்த முயற்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இவ்வித முயற்சிகளால் நமது ஒற்றுமை குலைந்துபோகும். தேசத்தில்

ரத்தக் களரிகள் உண்டாகும். ஆகையால், இந்த அபாயம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், நாம் இதை எதிர்த்தாக வேண்டும். ஏன்? அகண்ட ஹிந்துஸ்தானம் இறந்து விடக்கூடாது!

---

7. தேசீயம் மறுக்கப்பட்டால் ?

அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கம் குறிபபிட்ட ஓர் அரசியல் கட்சியின் இயக்கமல்ல, அதை அப்படி மாற்றும் எண்ணமுமில்லை என்று நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இது தேசத்திலுள்ள ஒவ்வொருவருடையவும் பொது இயக்கமாகும். காந்திஜீ முன்பு ஒருதரம், **'தேசத்தைத் துண்டாக்குமுன், என்னைத் துண்டித்து விடுங்கள்'** என்று கூறியிருக்கிறார். பிரிவினை வாதிகளைச் சந்தோஷப்படுத்தத் தயாராய் இருக்கும் அமெரி துரை கூட, அகண்ட ஹிந்துஸ்தானத்தின் மீது தமக்குள்ள பற்றுதலை இன்னும் விட்டுவிடவில்லை. ஆகையால், ஒரு கட்சியின் இயக்கமாக இதை மாற்றுவதால் கெடுதலே உண்டாகும். பிற கட்சிகள் இதைத் தங்கள் இயக்கம் அல்ல என்று அலட்சியம் செய்து விடும்.

இந்தியாவிலுள்ள மற்றவர்களை நேசிப்பது போலவே, முஸ்லிம்களையும் நான் நேசிக்கிறேன். இங்குள்ள முஸ்லிம்களில் பெரும்பாலோர், ஏற்கனவே ஹிந்துக்களாயிருந்து, மதம் மாறினவர்களே. புதிய மதத்தைத் தழுவியதால், அவர்கள் அந்நியர்கள் ஆகிவிடவில்லை. அவர்களும் இந்த நாட்டுடன் ஒன்றாக இணைக்கப் பட்டிருக்கிறார்கள்.

தேசத்தைத் துண்டிடும் பிரச்னையில் தேசீயவாதிகளின் அபிப்பிராயம் தெளிவாகி யிருக்கிறது. மத விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும் ஒரு

சிறுபான்மையினராக இருக்கும் முஸ்லிம்கள், தாங்கள் பிற சமூகங்களுடன் சரியாக நடத்தப்பட வேண்டும் என்று விரும்புவது நியாயம். அவர்களுக்கு நியாயமான எல்லா உரிமைகளும் அளிக்கப்பட வேண்டும். ஒரு சிறுபான்மைக் கோஷ்டியை அடிமைப்படுத்தி வைக்கவோ, அவர்களை அடிமைப்படுத்தி வைக்கும் சுயராஜ்யத்தைப் பெறவோ தேசீய வாதிகள் விரும்பவில்லை. நாமெல்லோருமே ஒரே நாட்டினர். நமக்குத் தேசிய சர்க்கார் வேண்டும். நமது நாடு சுதந்தரம் அடைய வேண்டும். இதற்கு விரோதமில்லாமல் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக்கள் அளிக்கும் திட்டம் எதையும் ஒப்புக்கொள்ள, நாம் தயாராய் இருக்கிறோம். இந்தக் கொள்கையின் அடிப்படைமீதுதான் கராச்சிக் காங்கிரஸின் '**ஜீவாதார உரிமைகள்**' பற்றிய தீர்மானமும் செய்யப்பட்டது.

ஆனால், பிரிவினை வாதிகள் வேண்டுவது என்ன? அவர்களுடைய பொல்லாத ஆசைதான் என்ன? மத விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் சிறு பான்மையினராக இருக்கும் தங்களுக்குப் பாதுகாப்புப் பெறுவதல்ல. முஸ்லிம்கள் ஒரு தேசியச் சிறுபான்மைக் கோஷ்டியினர் என்று நாம் அங்கீகரித்தாலும், அதோடும் அவர்கள் திருப்தியடையவில்லை. ஒரே நாட்டின் அதிகாரத்தில் அவர்களுக்குத் தனிச் சுய ஆட்சி உரிமையைப் பெறுவதும் அவர்களுடைய ஆசை அல்ல. ஆனால், தேசீய ஐக்கியத்தைத் தகர்த்து, இந்தியத் தேசியத்தை ஒழித்து, தேசத்தின் சுதந்தரத்தைத் தடுத்து, ஒரு தனி மதத்தைச் சேர்ந்த சிறுபான்மையோரின் பெயரால் இந்தியாவை ஆண்டு,

ஹிந்துக்களேயும் பிற சமூகங்களேயும் அடிமைகள் ஆக்குவதே அவர்களுடைய நோக்கம்.

இந்தப் பாகிஸ்தான் இயக்கத்தின் அபாயத்தை நம்மில் பலர் உணரவில்லே. இந்த அபாயத்தைப் பற்றி யோசிக்கவும்கூட நாம் அஞ்சுகிருேம்: '**இந்த அபாயம் எப்படியும் வராது**' என்று நாம் எண்ணி விடுகிருேம்.

இது மட்டும் நிச்சயம்; பாகிஸ்தான் திட்டம் கைகூடுமாளுல், தேசம் பிளவுபட்டுப் போகும். தேச ஜனங்களின் சமுதாயப் பொருளாதாரப் பந்தங் களும், ஐக்கியமும் நாசமாகிவிடும். தங்கள் தாய் நாட்டிலேயே இந்தியர்கள் அந்நியர்களாக ஆகிவிடு வார்கள். ராணுவ பலமுள்ள இரு சாரார்கள், ஒருவர் மற்றவரின் சுதந்தரத்தையும், நாகரிகத்தை யும் அழிக்க முயலுவார்கள். இப்பொழுது ஏதோ சில ஜில்லாக்களில் நடக்கும் வகுப்புக் கலகங்கள் இனிமேல் தேச முழுவதும் பரவும்.

தங்களுடைய பாகிஸ்தான் திட்டத்துக்கு மாற் ருகப் பிரிவினே வாதிகளால் கூறப்படும் திட்டமோ, இன்னும் அபாயகரமானது. ஒன்பது கோடி இந்தி யர்கள் (அதாவது முஸ்லிம்கள்), எஞ்சிய முப்பது கோடியுடன் ஒரு சட்டரீதியான சூழ்ச்சியால் சமம் ஆக்கப்பட வேண்டும் என்பதே பிரிவினே வாதிகளின் மாற்றுத் திட்டத்தில் வெளிப்படும் பேராசை. அப் படிச் செய்வதால், பெரும்பான்மையோரின் கையில் இருக்கும் அதிகாரம் தங்கள் கைக்கு வந்து விடும் என்று இந்தப் பிரிவினே வாதிகள் கனவு காண்கி ருர்கள்.

இந்தப் பேராசை, சமீப காலத்தில் தான் இவர்க

ளிடம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாபிலும் வங்காளத்திலும் முஸ்லிம்கள் பெரும்பாலோராக இருந்தும் முஸ்லிம் அல்லாதாரிடமிருந்து தங்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாதபடி பாதுகாப்புக்கள் வேண்டும் என்ருர்கள். அதன்படியே சட்டப்படி சட்டசபைகளில் பெரும்பான்மையான ஸ்தானங்களை அடைந்தார்கள். மறுபடியும் அதே கூச்சலை இப்பொழுது கிளப்பிக் கொண்டு, தேசத்தில் தாங்கள் கால் பங்காக இருந்தும், மற்ற முக்கால் பங்குடன் சட்ட பூர்வமான சமத்துவ ஆதிக்கத்தை நாடுகிருர்கள். இந்தச் செப்படுவித்தை பலிக்குமா? எப்பொழுது பலிக்கும்?

1. **இஸ்லாத்திலுள்ள இவர்களின் மதப் பற்றுதல், மத வெறி கொண்ட ஒரு பலத்த அரசியல் இயக்கமாக மாற்றப்பட வேண்டும்;**
2. **ஹிந்துக்களும் தேசிய முஸ்லிம்களும் பிற சமூகங்களும், அதை எதிர்க்க முடியாதபடி ஒற்றுமையிழந்தோ அல்லது பயப்பட்டோ போக வேண்டும். அப்பொழுது தான் இந்தப் பிரிவினை வாதிகளின் பேராசை உருப்பெற முடியும்.**

இப்படிக் கட்டுப்பாடாகத் திரண்ட இந்தச் சிறுபான்மைக் கோஷ்டி, ஒற்றுமையில்லாத பிற சமூகத்தவருடன் பலாத்காரமாகச் சரி சமத்துவத்தை அடைகிறது என்று வைத்துக் கொள்வோம். உடனேயே, அரசாங்க அதிகாரம் முழுமையும் முஸ்லிம் அல்லாதாருக்கு விரோதமாக உபயோகப்படுத்தப்படும் என்று சொல்லவும் வேண்டுமா? வங்காளத்திலுள்ள ஹிந்துக்களின் கலாசாரமும், நாகரிகமும் படும் பாட்டிலிருந்தே, இது நிதர்சனமாகிறது.

ஜனநாயக அஸ்திவாரத்தின்மீதுதான் தேசீயம் நிற்கிறது. அரசியல், பொருளாதார விஷயங்களில் பெரும்பான்மையோரின் ஆதிக்கமே இருந்தாலும், எல்லாச் சமூகத்தவருக்கும் நியாயமான உரிமைகள் ஜனநாயகத்தின் கீழ் இருக்கும். ஆனால், ஒரு தனி மதத்தைச் சேர்ந்த சிறுபான்மையோர், தேசத்தில் சர்வாதிகார ஆதிக்கம் பெறுவது என்பது, சுதந்தர லட்சியத்துக்கு விரோதம்; ஜனநாயக தத்துவத்துக்கு விரோதம்; மக்களின் நாகரிக வாழ்வுக்கும் விரோதம்; ஏன், தேசியத்துக்கே விரோதமாகும். இப்படிப்பட்ட சிறுபான்மையினரின் சர்வாதிகார ஆதிக்கம், பலாத்காரத்தின் மூலமே நடைபெற முடியும். அவர்கள் இம்மாதிரி ஆதிக்கம் வகிக்க, மற்றவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்தக் காரியங்கள் பலிப்பதற்கு, பிரிவினை வாதிகள் கலகங்களைத் தூண்டலாம்; பயமுறுத்தலாம். இவர்களையும், இவர்களது பேராசையையும், அந்தப் பேராசையால் தூண்டப்படும் கலகங்களையும் மிரட்டல் உருட்டல்களையும் முற்றிலும் எதிர்ப்பதே ஒவ்வொரு தேசியவாதியின் கடமையுமாகிறது.

பாகிஸ்தான் இயக்கம் ஒரு வெறும் அரசியல் இயக்கம் மட்டுமல்ல. சில காலமாக நமது தேசீயப் பொது வாழ்வையே பயமுறுத்திக் கெடுக்க நினைக்கும் கொடூர மனப்பான்மையின் விளைவுதான் அது. நம்முடைய கலாசாரத்தையே கெடுக்கும் பல அம்சங்களும் அதில் இருக்கின்றன. அவைகளில் ஒன்றை இங்கே விவரிக்கிறேன்.

இந்தியாவில் மூன்று கோடிக்குக் குறைந்தவர்களே உர்து பேசுகிறார்கள். இவர்களில் பெரும்பா

லோர் முஸ்லிம்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவருக்கும் உர்து தாய்மொழி அல்ல என்பதை நாம் மறந்து விடக் கூடாது. **ஸிந்தி, குஜராத்தி, மராத்தி, கன்னடம்** முதலிய பல மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட **(உர்துவே தெரியாத)** முஸ்லிம்கள், மத வெறியின் பலத்தினால், உர்துதான் தங்கள் தாய்மொழி என்று ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப் படுகிறார்கள்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து சிருஷ்டித்ததுதான் ஹிந்தி மொழி. அதிலுள்ள ஸம்ஸ்கிருத வார்த்தைகள் இந்தியாவிலுள்ள முக்கால் பங்கு ஜனங்களின் தாய் மொழிகளுக்குப் பொதுவானவை. முஸ்லிம்களில் பல கோடிப் பேர்கள் இந்த ஹிந்தியை அறிவார்கள். எனவே, ஹிந்தி மொழியே நமது நாட்டின் பொது மொழியாக இருக்கத்தக்கது அல்லவா?

ஆனால், முஸ்லிம்கள் இதை எதிர்த்தார்கள்; **ஹிந்துஸ்தானி தான்** இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று கூச்சலிட்டார்கள். 1935-ஆம் வருஷம் நாகபுரியில், நாங்கள் **பாரதீய சாஹித்ய பரிஷத்** என்ற ஸ்தாபனத்தை நிறுவிய போது, **ஹிந்தி-ஹிந்துஸ்தானி** என்ற புதிய பதத்தைக் காந்திஜீ புகுத்தினார். இந்த ஹிந்தி-ஹிந்துஸ்தானி, பேசும் மொழி; ஹிந்தியும் உர்துவும் அதன் இலக்கிய மொழிகள். இதற்கும் எதிர்ப்பு கிளம்பிற்று. ஹிந்துஸ்தானி என்றுதான் அந்த மொழியை அழைக்க வேண்டும் என்றார்கள். பெயர் எப்படி இருந்தால் என்ன என்று, நாங்கள் அதற்கும் ஒப்புக் கொண்டோம். ஆனால், இதுவும் அவர்களைத்

திருப்திப்படுத்தவில்லை போலும்! இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? உர்துதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமாம். அதாவது இரண்டே முக்கால் கோடி முஸ்லிம்கள் மட்டுமே பேசும் ஒரு மொழியை, அதை அறியாத நான்கு கோடி முஸ்லிம்களும் முப்பத்திரண்டு கோடி ஹிந்துக்களும் பேச வேண்டுமாம்!

இந்தப் பாத்தியதை நியாயம் என்றால், தேசத்தின் பெரும்பான்மையினரான மக்கள், தங்கள் நாகரிகத்தைக் கொண்டு தேசீய ஐக்கியத்துக்கோ பொது வாழ்வுக்கோ ஒரு ஸேவையும் செய்ய முடியாமல் போகும்.

இந்தப் பாத்தியதையை அவர்கள் வாயளவில் மட்டும் வற்புறுத்தவில்லை. செயலில் காட்டக்கூட இறங்கி விட்டார்கள். மத்திய மாகாணத்தில் ஜனத்தொகையில் முஸ்லிம்கள் நாலரைச் சத விகிதம் தான் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களை 'வித்யா மந்திர'ங்கள் என்று அந்த மாகாணத்துக் காங்கிரஸ் மந்திரி சபையார் அழைத்தார்கள். இதை அவர்கள் எப்படிப் பொறுக்க முடியும்? சம்ஸ்கிருத வார்த்தைகள் என்றால் அடியோடு அவர்களுக்குப் பிடிக்காது அல்லவா?......இந்தப் பெயரை மாற்ற ஒரு பெருங் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள்; தங்களது மத உணர்ச்சி புண்படுத்தப்பட்டு விட்டது என்றார்கள். நமது இயற்கையான சாந்த சுபாவத்தால், நாம் இதற்கும் பணிந்தோம்.

பல வருஷங்களாக வந்தேமாதர கீதம் பாடப் பட்டு வருகிறது. இப்போது அதை எதிர்க்கும் சில பிரிவினை வாதிகள் கூட, அந்தக் காலங்களில் அதற்கு

எழுந்து வணங்கினுர்கள். ஆனுல், அதற்கும், 'வித்யா மந்திர்' என்ற வார்த்தைக்கு ஏற்பட்ட கதி தான் இன்று ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாட்டில் சில பாகங்கள் இப்போது துண்டிக்கப்பட்டு விட்டன.

'அகண்ட ஹிந்துஸ்தானம்' என்பதில், 'அகண்ட' என்னும் வார்த்தை முஸ்லிம்களுக்குப் பிடிக்காததொரு வார்த்தை என்று சில தோழர்கள் எனக்கு எடுத்துக்காட்டி யிருக்கிருர்கள். எனக்குத் தெரிந்த வரையில், 'அகண்ட' என்ற வார்த்தையைப் போல, முஸ்லிம்களுக்குத் தெரிந்த வேருெரு வார்த்தை ஓர் இந்திய மொழியிலும் இல்லை. தங்களுக்குப் புரியவில்லை என்ற காரணத்தினுல், இநத வார்த்தையை முஸ்லிம்கள் எதிர்க்கவில்லை. தங்களைப் பொறுத்த வரையில், ஒரு சம்ஸ்கிருத வார்த்தையைக் கூட உபயோகப்படுத்தக் கூடாதென்ற கர்வ உணர்ச்சியல்லவா, இவ்வாறெல்லாம் ஆட்சேபிக்க அவர்களைத் தூண்டுகிறது!......

துரதிருஷ்டவசமாக, பிரிவினை வாதிகளின் பிரசாரத்தால், சில முஸ்லிம்களிடம், '**ஹிந்துக்கள் தங்களுக்குப் பிரியமானதை யெல்லாம் தியாகம் செய்தாலொழிய, நாம் ஒன்றுக்கும் இணங்கக் கூடாது**' என்னும் உணர்ச்சி பரவி வருகிறது. இரு சமூகங்களும் நேசபாவத்துடன் தங்கள் தங்கள் நாகரிகங்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டு முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே, தேசீய வாதி விரும்பும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அர்த்தம். ஆனுல், பிரிவினை வாதிகள் விரும்புவதாகக் கூறும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் பொருள் விபரீதமானது. அதாவது, பெரும்பான்மையோர் தங்களுக்குச் சொந்த

மானதை யெல்லாம் தத்தம் செய்து விட்டு, சிறுபான்மையோரின் மனப்போக்குப்படி யெல்லாம் ஒத்துப் போக வேண்டும் என்கிருர்கள். அப்பொழுது தான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமாகுமாம்! அபாயகரமான இந்தக் கர்வ மனேபாவத்துக்கு, சுயமரியாதையுள்ள எவனும் பணிய மாட்டான்.

நான், ஓர் இந்தியனுதலால், முஸ்லிம்களுக்குப் பிரியமான உர்து பாரஸீக மொழிகளிலுள்ள இலக்கியச் செல்வத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறேன். அதே போல, முஸ்லிமும் ஓர் இந்தியனுதலால், நான் உயிருக்குயிராய்ப் போற்றும் ஸம்ஸ்கிருதத்துக்கு அவனும் மரியாதை காட்டத் தயாராயிருக்க வேண்டும். எதிர்காலத்தில் நமது பொதுமொழி, ஸம்ஸ்கிருதம், பாரசீகம் இந்த மொழிகளின் அஸ்திவாரத்தின் மீதுதான் ஏற்பட வேண்டும். ஒன்றைத் தாழ்த்தி மற்ரென்றை உயர்த்துவது கூடாது; அது ஹிட்லர் முறையாகும். இந்தியர்கள், இவ்விதத் தாக்குதல்களுக்குப் பணியும் ஒவ்வொரு தரமும், நான் வெட்கம் அடைகிறேன். வருங்காலத்தில், நான் என் ஸம்ஸ்கிருத மொழியைத் தியாகம் செய்ய வேண்டும், என் நாகரிகத்தையே தியாகம் செய்ய வேண்டும் என்று எவராவது முயற்சித்தால், அது ஒத்துழைப்பு அல்ல; அடிமைத்தனந்தான். தேசத்துக்கு இவ்வாறு துரோகம் செய்ய என் தேசிய உணர்ச்சியை உபயோகப்படுத்த நான் சித்தமாயிருக்க முடியாது.

பாகிஸ்தானின் உண்மையான சொரூபம் எப்படி இருக்கும் என்பதற்கு, இந்த உர்து இயக்கம் ஓர் அடையாளமாகும். உலக சரித்திரத்திலேயே சிறந்த புருஷராக விளங்கும் காந்திஜீ சென்ற இருபத்

தைந்து வருஷங்களாக ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிலைநிறுத்த முயற்சித்து வருகிறார். அளவிறந்த பொறுமையுடன், 'பெரும்பான்மையான ஹிந்துக்களிடம் வகுப்பு உணர்ச்சி இருக்கக் கூடாது; தேசிய உணர்ச்சி தான் இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தை நிலைநாட்டி விட்டார். ஆனால், அவர் செய்த வேலையை, அரசியல், நாகரிகம் இவை யாவற்றிலும் சர்வாதிகார ஆதிக்கம் வகிக்க விரும்பும் பிரிவினை வாதிகள் நாசமாக்குகிறார்கள்.

அறிவாளிகளான முஸ்லிம்கள் இதைக் குறித்து நன்றாக யோசிக்கவேண்டும் என்று நான் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். '**முஸ்லிம்கள் ஒரு தனித் தேசத்தினர். அவர்கள் முஸ்லிம் இந்தியாவைச் சேர்ந்தவர்களாக நடந்துகொள்ள வேண்டும்**' என்று, பிரிவினை வாதிகள் முஸ்லிம் பொது மக்களிடம் பிரசாரம் செய்து, இதுவரையில் இந்திய மக்கள் ஒன்றாய் அமைத்த பொதுத் தேசிய வாழ்வையும், தேசிய உணர்ச்சியையும் நிர்மூலம் செய்ய எத்தனிக்கிறார்கள். இதனால், ஹிந்துக்கள் மட்டுமல்ல; பிற சமூகத்தவருங்கூட, தங்களை இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளுவதற்காக, தங்கள் மனப்பான்மையையும் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவன் மற்றொருவனை எப்பொழுதும் பயமுறுத்திக் கொண்டே யிருந்தால், கடைசியில் ஒருநாள் அப்படிப் பயமுறுத்துவோனை, பயமுறுத்தப்படும் மனிதன் எதிர்த்துத் தாக்க நினைப்பது இயற்கைதானே!....

பிரிவினை வாதிகள் பாகிஸ்தான் என்று கூச்சல் போடுகிறார்களே; ஆனால், அது, இரு ராஜ்யங்களிலுள்ள இரு சமூகங்களையும் நேசபாவமாக இருக்கும்

படி செய்யுமா? அப்படிச் செய்யத்தான் என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள்?

டாக்டர் அம்பேத்காரும், தமது புத்தகத்தில் ஒரு பாகிஸ்தான் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். பஞ்சாப், வங்காளம், எல்லைப்புறம், ஸிந்து இவைகளில் முஸ்லிம்கள் பெருவாரியாகவுள்ள ஜில்லாக்களைப் பாகிஸ்தானுக அவர் சேர்த்திருக்கிறார். அவர் தயாரித்திருக்கும் பாகிஸ்தானில் இரண்டு கோடி ஹிந்துக்கள் இருப்பார்கள்; ஹிந்துக்கள் வசிக்கும் ஹிந்துஸ்தானத்தில், ஒரு கோடியே எண்பது லட்சம் முஸ்லிம்கள் இருப்பார்கள். இந்தத் திட்டம், நிரந்தரச் சச்சரவுகளுக்கே இடம் அளிக்கிறது. ஒன்று, பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்கள் ஹிந்துஸ்தானத்துக்கும், ஹிந்துஸ்தானத்தில் உள்ள முஸ்லிம்கள் பாகிஸ்தானத்துக்கும் இடம் மாற்றப்பட வேண்டும்; அல்லது, பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்களை ஹிந்துஸ்தானமும், ஹிந்துஸ்தானத்தில் உள்ள முஸ்லிம்களைப் பாகிஸ்தானும் காப்பாற்றியாக வேண்டும். எப்படியிருந்தாலும், கோடிக்கணக்கான இந்தியர்கள் தம்தம் சொந்த ஊர்களிலேயே அந்நியர்களாக மாற்றப்பட்டு விடுவார்கள். பொருளாதார உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்து வாழும் அந்தப் பிரதேசங்களுக்கு நடுவிலே சுங்கச் சாவடிகளும் அமைக்கப்பட்டுவிட்டால், அவைகளுக்கிடையே சச்சரவுகள் தோன்றுவதற்குக் கேட்கவும் வேண்டுமா?

சென்ற நூற்றுண்டில் அமெரிக்காவில் ஒரு யுத்தம் நடைபெற்றது. தென் பாகத்திலுள்ள மக்கள் அமெரிக்க நாட்டிலிருந்து பிரிந்து தேசத்தைத் துண்டாக்க எண்ணினுர்கள். அதன் விளைவு என்ன?

உள்நாட்டுப் போர் நீண்டகாலம் நடந்ததுதான் பலன். நம்முடைய நாட்டிலும் அம்மாதிரியான உள் நாட்டுப் போர்கள் மூளவேண்டுமா? அல்லது, அமெ ரிக்காவில் அறிவாளிகள் உணர்ந்த படிப்பினையை நாமும் கற்றுக்கொள்ளப் போகிறோமா? பிரிவினை எண்ணத்தை இன்று விதைப்பவர்கள் உள்நாட்டுக் கலகமாகிய பலனைத்தான் பின்னால் அறுவடை செய்ய வேண்டும்.

எல்லாச் சமூகங்களும் கட்சிகளும் இந்தப் பாகிஸ்தான் அபாயத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப் போகின்றனவா? காங்கிரஸ் தன்னுடைய மகத்தான சக்தியை இழந்துவிட்டதா? தேசிய முஸ் லிம்களும் கிறிஸ்துவர்களும் தங்கள் சுய உணர்வை இழந்து விட்டார்களா? ஹிந்துக்கள் தங்கள் ஆண்மையைத் துறந்து விட்டார்களா? சீக்கியர்களும், ராஜபுத்ரர்களும், மராத்தியர்களும், ஜாட் ஜாதியின ரும் தங்கள் மூதாதைகளின் தைரியத்தைக் கைவிட்டு விட்டார்களா?

பிரிவினை வாதிகள் தாங்கள் செய்துவரும் தவறை உணராவிட்டால், நீண்ட காலம் நமது நாட்டில் மனக்கிலேசமும் துன்பமும் உண்டாகும்; உள்நாட் டுக் கலகங்கள் தலைவிரித்தாடும்; நூற்றாண்டுகளாக நம்மால் சம்பாதிக்கப்பட்டு நமக்குப் பெருமையளித்து வரும் யாவும், இந்தத் தலைமுறையிலேயே அழிந்து போகும்.

இந்த ஆபத்தை எப்படித் தடுப்பது? யார் தடுப் பது? பிரிவினை வாதிகளே இதைத் தடுத்துவிட லாம். ஆனால், அவர்கள் தடுக்கப் போவதில்லை. பின் பலமான பொதுஜன அபிப்பிராயமும், அதனால்

திரட்டப்படும் பொதுஜன ஐக்கிய சக்தியுமே இந்த அபாயத்தைத் தடுக்கமுடியும்; தேசீய உணர்ச்சியே இதைத் தடுக்கமுடியும்.

"அகண்ட ஹிந்துஸ்தான் என்ருல் என்ன? அதற்காக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று என்னைப் பலர் கேட்கிருர்கள். **நமது தேசத்தின் ஐக்கியம், அந்த ஐக்கியத்தினுல் ஏற்படும் அமைதி, பரஸ்பர ஒத்துழைப்பால் ஏற்படும் அரசியல் உரிமைகள், எல்லோரையும் இணைக்கும் பொருளாதார பந்தங்கள், அவரவர் மதமும் நாகரிகமும் போதிக்கும் முறைப்படி வாழ்க்கை நடத்தல்—இந்த உன்னத லட்சியங்களுடன் ஒன்றுபட்டிருப்பதுதான் அகண்ட ஹிந்துஸ்தான்.**

அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கம், கேவலம் அரசியலுக்கு மேற்பட்டது. ஒரு தேசத்து ஜனங்களிடம் பரஸ்பர உரிமைகளும் கடமைகளும் இருக்கும் என்பதுதான் அரசியல். ஆனுல், அரசியல் உரிமைகளுக்காகச் சச்சரவு நடக்கும் பொழுதும், பரஸ்பர ஒத்துழைப்புக்குப் பதிலாகக் கடமைகளை மறந்து அனைவரும் பலாத்காரத்தில் மூழ்கிவிடும் பொழுதும், அகண்ட ஹிந்துஸ்தான் பிரச்சினை வெறும் அரசியல் பிரச்சினையாக இருக்கமுடியாது. அப்பொழுதுதான் அது நமது சமூக வாழ்வின் வேராக உறுதியாய் நின்று, நம்மை நமது அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய ஜீவாதாரமான பிரச்சினையாகிறது.

மாறுபட்ட அரசியல் அபிப்பிராயங்களைக் கொண்ட அனைவரும் இந்தப் பிரச்சினையில் மட்டும் ஒன்றுபடவேண்டும். இந்த நாட்டின் சமூக வளர்ச்சிக்கான தொடர்புகளை அறுத்து, நம்முடைய வாழ்

வுக்கே மூலாதாரமான பொது நாகரிகத்தைத் துண்டிக்கவே, இந்தப் பாகிஸ்தான் திட்டம் முயலுகிறது. ஆகையால், அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கம் வெறும் அரசியல் இயக்கமாகக் கருதப்படக்கூடாது. அது நமது வாழ்வு சம்பந்தமான இயக்கம். எந்த நாட்டிலும் அந்த நாட்டு ஜனங்கள் தங்கள் மூதாதையர் வாழ்ந்த தேசீய முறைப்படி ஜீவிக்கவேண்டும். இந்த முறை பாதிக்கப்படுவது மிருகத்தனம் மட்டுமல்ல, ஒரு கொடிய பாவமும் ஆகும். இந்தப் பாவம் நமது வாழ்க்கையைக் குலைக்கத் தோன்றுமானால், அகண்ட ஹிந்துஸ்தான இயக்கம் ஒரு முக்கிய இயக்கமாகத் தோன்றுகிறது. 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற சங்கநாதத்தை அது நாடெங்கும் முழக்குகிறது. எல்லோரும் அதன் கொடியின் கீழ் ஒன்றுபடுகிறார்கள். அகண்ட ஹிந்துஸ்தானத்தைப் பத்திரமாகக் காப்பாற்றி எல்லோருடைய வாழ்க்கையையும் பத்திரமாக வைத்திருப்பதே, அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கத்தின் பிரச்சினையும், கடமையும் ஆகின்றன. அதுவே வாழ்க்கைக்குச் சுவை ஏற்றி மெருகு கொடுக்கிறது.

அநேகர் நாம் அகண்ட ஹிந்துஸ்தானத்தை எப்படி அடையப் போகிறோம் என்று கேட்கிறார்கள். அதை ஏன் அடையவேண்டும்? இந்தியா அகண்டமாயிருந்தது; அகண்டமாகவே யிருக்கிறது; அதை அகண்டமாகவே வைத்திருக்க வேண்டியது நமது மகத்தான கடமை.

இந்த அகண்ட ஹிந்துஸ்தானத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நாம் எதிர்த்தாக வேண்டும்;

எதிர்த்தே தீருவோம். இந்த நியாயமான லட்சியத்துக்காக, ஏராளமான மக்கள் உழைக்கவும் கஷ்டப்படவும்-ஏன், சாகவுங்கூட-சித்தமா யிருக்கிறுர்கள். இந்தியா இந்த அபாயத்தைப் பலமாக எதிர்த்து நிற்கும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். மனம், வாக்கு, காயம் - இம் மூன்றினுலும் இந்த அபாயத்தை இந்தியா எதிர்க்கும்.

இந்த அபாயத்தை எதிர்க்கவும், இந்த எதிர்ப்பை எல்லாப் பாகங்களிலும் பரப்பவும் எல்லோரும் முன்வாருங்கள் என்று நான் அழைக்காமலேயே மக்கள் திரண்டு முன்வருவார்கள். பிரிட்டிஷார் இந்த எதிர்ப்பைத் தடுக்கமாட்டார்கள். ஒருக்கால் பிரிட்டிஷார் இந்த இயக்கத்தை எதிர்ப்பார்களேயானுல், உலக சமாதானத்துக்கு உழைப்பதாக அவர்கள் கூறுவதெல்லாம் கலப்பற்ற பொய் என்றே ஆகிவிடும். உலக அபிப்பிராயமே, நமது இயக்கத்துக்கு உதவி செய்யும். பாகிஸ்தான் அபாயம் சம்பவிக்குமானுல், நாற்பதுகோடி ஜனசமூகத்தின் வாழ்க்கை நிர்மூலமாகப் போவதுடன், பூலோகத்திலேயே இந்தியா ஒரு நரகமாகிவிடும். இதை உலக அபிப்பிராயம் விரும்பவே விரும்பாது.

8. பிரஜா உணர்ச்சி

வகுப்புக் கலகங்களை ஒழிக்க, தக்க பரிகாரங்களைப் பலர் தேடிக்கொண் டிருக்கிறார்கள். பலர் பல விதப் பரிகாரங்களைக் கூறுகிறார்கள். ஆனால், ஒரே பரிகாரந்தான் உண்டு. அது ஒன்றுதான் பயன்தரத் தக்கது. அது என்ன? பொது ஜனங்கள் பிரஜா உணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது தான்.

ஒரு மனிதனை ஒரு காலி குத்த வந்தால், அருகில் உள்ளவர்கள் அவனைப் பிடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்வதால், காலிகளின் அட்டகாசங்களே நின்றுவிடும். கலகக்காரக் கூட்டமொன்று மூர்க்கச் செயல்களைப் புரிந்துகொண்டிருக்கையில் அவர்களைப் பிரஜா உணர்ச்சியுள்ள ஜனங்கள் எதிர்த்தால், கலகக்காரர்கள் ஓடிவிடுவார்கள்; கலகங்களும் நின்றுவிடும். ஆமதாபாத்தில், ஒரு கலகக் கூட்டம் வீடுகளை எரித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது பொதுஜனங்கள் அவர்களை எதிர்க்க முன்வந்திருந்தால், அந்தக் கூட்டம் அடக்கப்பட்டிருக்கும். பொதுஜனங்களுக்குப் பிரஜா உணர்ச்சி இருந்தால் தான், தீங்கு செய்பவனைத் தடுப்பது தங்கள் கடமையென அவர்கள் எண்ணினால்தான், அப்படிச் செய்யத் தங்களுக்குச் சட்டப்படி உள்ள உரிமையை அவர்கள் பிரயோகித்தால்தான், கலகங்களைச் சமாளிக்க முடியும்.

சட்டப்படி, ஒரு தனிமனிதன்கூட, ஒரு மாஜிஸ்டிரேட்டின் உத்திரவின்றித் தானுகவே தனக்குக் கிடைக்கும் சகல சாதனங்களைக் கொண்டும் ஒரு கலகத்தை அடக்கிவிட உரிமை கொண்டவன். இந்தியர்கள் இந்தக் கடமையைச் செய்யத் தவறி விடுகிருர்கள். இப்படிப்பட்டக் கடமையைச் செய்தாகவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றுவதில்லை. அவர்கள் நடந்துகொண்ட முறையிலிருந்து அவர்களின் இந்த மனப்பான்மை சமீபத்தில் நடந்த கலகங்களில் தெளிவாயிற்று. கலகம் நடக்கும்போது ஓட்டம் பிடிப்பதுதான் இந்தியனுக்குத் தோன்றும் முதல் எண்ணம். இந்த மனோபாவத்துக்கு இரண்டு காரணங்கள் உண்டு:

1. **கலகம் நடக்குமிடத்திலிருந்து தப்பி ஓடி, ஜாக்கிரதையாகப் பத்திரமான ஓர் இடத்தில் மறைந்து கொள்ளவேண்டும் என்று நினைப்பது;**
2. **காலிகள் எதிர்க்கும்போது போலீஸாரும் தங்களைத் தாக்குவார்களோ என்று அஞ்சுவது இந்த இரண்டும்தான்.**

கோழைத்தனத்திலுைம் பிரஜா உணர்ச்சியின்மையாலுமே, கலகம் நடக்கும்போது ஜனங்கள் ஓடி ஒளிந்துகொள்ள நினைக்கிருர்கள். இந்தியாவிலுள்ள போலீஸார், பிரஜா உணர்ச்சிக்குக் கௌரவம் கொடுப்பதில்லை. இதனுலும் ஜனங்களிடையே பயம் ஜனிக்கிறது. நமது கோழைத்தனம் உலகப் பிரசித்தியானது. பிரிட்டிஷார் சென்ற ஒரு நூற்றுண்டாக நம்மை நிராயுதபாணிகளாக வைத்திருப்பதே, இதற்குக் காரணம்.

சமீபத்தில் நடந்த கலகத்தில் நிகழ்ந்த ஒரு சம்ப வம் பின்வருமாறு: ஒரு வீட்டுக்குள் கலகக்காரர்கள் நுழைந்துவிட்டார்கள். அந்த வீட்டு ஸ்திரீமட்டும் கீழே யிருந்தாள். அவளுடைய கணவனே மேல் தளத்தில் இருந்தான். காலிகளைக் கண்ட அந்த ஸ்திரீ, 'காலிகள் வருகிறார்கள்' என்று உரக்கக் கூச்சலிட்டு, தன் கணவனை உதவிக்கு வரும்படி அழைத்தாள். ஆனால், கணவன் கீழே வரவில்லை. அவன் மாடியி லிருந்துகொண்டே, போலீஸாருக்கு 'டெலிபோன் செய்தான்! போலீஸார் வந்து சேர்ந்த பிறகும், "என் மனைவியை மாடிக்கு அழைத்து வாருங்களேன்" என்றே அவர்களை வற்புறுத்தலானான்!

பொதுஜனங்களின் கோழைத்தனத்துக்கு இன் னோர் உதாரணம்: ஒரு நகரத்தில் கலகம் நடந்தது. ஒரு நாள் இரவு முஸ்லிம்கள் வசிக்கும் பாகத்தி லிருந்து, 'அல்லாஹூ அக்பர்' என்ற கோஷம் எழும்பியது. அந்த நகரத்தில் ஹிந்துக்களே அதிகம். ஆனாலும், அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? தங்கள் வீடுகளுக்குள்ளேயே பயத்தால் நடுங்கிக் கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள்! 'ஹர ஹர மஹாதேவா' அல்லது 'வந்தேமாதரம்' என்று அவர்களும் பதிலுக்குக் கோஷித்துக்கொண்டே யிருந் திருந்தால், நிலைமை சமாளிக்கப் பட்டிருக்கும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. மறுநாள் காலை, ஹிந் துக்கள் அந்த நகரத்தைவிட்டு ஓடவும் ஆரம்பித்து விட்டார்கள்!

பம்பாயிலும் இதே மனப்பான்மையைக் காண் கிறோம். இப்பொழுது அந்த நகரில் வகுப்புக் கலகங் களைப் பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வருவ

தில்லை. அதனால், கோழை ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள்? 'கலகங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. போலீஸாரும் பத்திரிகைக்காரர்களும் கலந்து சதி செய்து இந்தச் செய்திகளையெல்லாம் அமுக்கி விடுகிறார்கள்' என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சரி; கலகங்கள் நடந்துகொண்டிருப்பதாகவே வைத்துக் கொள்ளுவோம். பத்திரிகைகளில் அந்தக் கலகங்களைப்பற்றிப் படிப்பதாலேயே அந்தக் கலகங்கள் நின்றுவிடுமா? கலகங்களை நிறுத்துவதற்கு, காலிகளை எதிர்க்கும் பலத்தை நாம் விருத்தி செய்துகொள்ள வேண்டும்; தற்காப்பு வழிகளை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும்; ஒவ்வொரு பாகத்திலுள்ள வாலிபர்களுக்கும் அந்தந்தப் பாகத்தின் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ளும்படி பயிற்சி அளிக்க வேண்டும்; காலிகளை எதிர்த்துக் கைது செய்யும் உரிமையைத் திறமையாகக் கையாள வேண்டும். தங்கள் தற்காப்புக்காக, பிரிட்டனில் ஆண்களும் பெண்களும் - ஏன், குழந்தைகளும்கூட - தைரியத்துடன் திரண்டிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மனித சரித்திரத்திலேயே, அது கீர்த்தி நிறைந்த ஓர் சம்பவம். எதிர்க்கும் உணர்ச்சியைப் பெற விரும்பும் அனைவருக்கும் அது ஒரு தூண்டுகோலாகும்.

போலீஸாரின் ஒத்துழைப்பில்லாமல் நாம் பிரஜா உணர்ச்சியை விருத்திசெய்ய முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். துரதிருஷ்ட வசமாக இப்பொழுதிருக்கும் போலீஸார், தேச மக்களை அடக்கியாளும் சேனையைப்போல நடந்து கொள்ளுகிறார்கள். ஜனங்களிடம் அவர்களுக்கு அனுதாப

உணர்ச்சி இல்லை. கலகங்களை அடக்க, ஜனங்களிடம் கொடிய பயத்தை உண்டாக்கும் வழிகளையே அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள். காலிக்கும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளச் சண்டையிடும் மனிதனுக்கும், அவர்கள் வித்தியாசம் பாராட்டுவதில்லை. இரண்டு கூட்டங்கள் சண்டைபோட்டுக் கொண்டிருந்தால், போலீஸார், தாங்கள் வந்தவுடனே, எல்லோரையும் - வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவரைக்கூட - கைது செய்துவிடுகிறார்கள். சில சமயம் அருகில் இருக்கும் கடைக்காரர்களையும் பிடித்து 'மாட்டி' விடுகிறார்கள். குடிசைகளுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்கிறார்கள். எங்கே பார்த்தாலும் பயத்தைப் பரப்புகிறார்கள். ஜனங்கள் பயந்து ஓடிப்போய் ஒளிந்து கொண்டிருக்கும் வீடுகளின் கதவுகளைக்கூட உடைத்துவிடுகிறார்கள். கலகங்கள் கலகங்களாக நடக்காமல், சில சமயம் வேறுவிதமாய் மாறிவிடும். அப்போது, தனிப்பட்டவர்களைக் காலிகள் தாக்கத் தொடங்குகிறார்கள். அந்தச் சமயங்களில், தங்களைக் காத்துக்கொள்ள ஜனங்களுக்கு ஒரு தடிகூட அனுமதிக்கப்படுவதில்லை. இதெல்லாம் அமைதியை நிலைநாட்டும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் காரியங்களாம்! ஆனால், இந்த வழி, காலிகளை எதிர்க்கும் மனப்பான்மையைக் குறைத்துவிடுகிறது; போலீஸாருடன் ஜனங்கள் ஒத்துழைக்கவேண்டும் என்ற எண்ணத்தை நீக்கிவிடுகிறது; பிரஜா உணர்ச்சியை, வளர விடாமல் தடுத்துவிடுகிறது.

இப்பொழுது, பிரஜா உணர்ச்சி எப்படி விருத்தி அடையும் என்பதைக் கவனிப்போம். அது வளர்வதற்கு இரண்டு வழிகள் உண்டு:

1. **இந்த உணர்ச்சியை ஜனங்களிடம் பரப்ப வேண்டும்; தனிப்பட்டவர்களிடம் பரப்ப முடியாவிட்டாலும், கூட்டங்களிடமாவது பரப்ப வேண்டும்.**

2. **பிரஜா உணர்ச்சி ஜனங்களிடம் பரவுவதைப் போலீஸார் வரவேற்க வேண்டும்; கலகக் காலங்களில் இவ் உணர்ச்சியுடன் உழைப்பவர்களைப் போலீஸார் பாதுகாக்கவேண்டும்; அவ்வாறு பாதுகாக்கும்படி போலீஸார் பழக்கப்பட வேண்டும்.**

இந்த உணர்ச்சியை, ஒரு தனி மனிதன் மற்றவருடன் சேர்ந்து பழகிக்கொள்ளலாம். ஒரு கூட்டத்தில் இருக்கும்போது, அவன் மற்றவரின் ஏளனத்துக்குப் பயந்து, தைரியசாலியாகிறுன். 1930-ஆம் வருஷம் ஒரு ஹிந்துச் சிறுமி, தன்னுடைய தம்பியைக்கூட எதிர்க்கச் சக்தியற்றவளா யிருந்தும், ஒரு கூட்டத்தார் அவளை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்ததால், ஆஜானுபாகுவான ஒரு போலீஸ் சார்ஜண்டையும் எதிர்க்கத் துணிந்தாள். ஆகையால் பிரஜா உணர்ச்சி கூட்டங்களில் பரவுவதால், தனி மனிதனுக்குக்கூட அந்த உணர்ச்சி நிச்சயம் ஏற்படும். எனவே, ஆபத்துக் காலங்களில் எல்லாப் பாகங்களிலுமுள்ள ஜனங்களும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும், தங்கள் பொறுப்பை நன்கு ஆலோசிக்கவேண்டும். பிரஜைகள் சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைத் தீவிரமாக உணர வேண்டும். இந்த உணர்ச்சி பிரஜைகளிடையே பிரகாசிக்காவிட்டால், நாம் ஒவ்வோர் ஆபத்துக்கும்

இரையாகி, முடிவில் அனைவருமே நிர்மூலமாகப் போகவேண்டி வரும்.

தற்போது, பொதுஜன சர்க்கார் நடைபெற வில்லை. ஆகையால், பிரஜா உணர்ச்சியைக் கௌர விக்கும்படி போலீஸாரைப் பழக்குவது மிகவும் கஷ்டம். ராணுவத் தோரணையில் போலீஸார் பழக்கப் பட்டிருந்தாலும், பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக, அவர்கள் போகமுடியாது. பொறுப் புள்ள முறையில் போலீஸாரின் நடவடிக்கைகளைப் பொதுஜனங்கள் கவனிக்க ஆரம்பித்தால், போலீ ஸார்கூட, ஒரு காலிக்கும், அந்தக் காலியை எதிர்க் கும் ஒரு மனிதனுக்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்வார்கள். இந்தக் காரியத்தைப் பொறுப்புள்ள ஜனத் தலைவர்கள் கட்டாயம் செய்ய வேண்டும். நமக்குத் தொந்தரவு நீங்கவேண்டு மானால், நாம் இதைச் செய்தாகவேண்டும்.

9. ஒரு தேசீய முஸ்லீம்

லூதியானவில் முப்தி மௌல்வி முகமத் நயீம் என்பவருடன், நான் ஒரு நாளைக் கழித்தேன். அவர் ஒரு சிறந்த முஸ்லிம் மேதாவி. ஜமீயத்-உல்-உலீமாவின் காரியக் கமிட்டியில் அங்கம் வகிப்பவர். அவருக்கு நாற்பது வயதுக்கு மேல் இருக்கும். அவர் பொறுமையும், சாமர்த்தியமும், ஹாஸ்யச் சுவையும் உள்ளவர். எனக்குக்கூடப் புரியாத அவ்வளவு உயர்ந்த உர்து மொழியை அவர் பேசுகிறார். நம்முடைய அறிவை, ஆச்சரியமான சாமர்த்தியத்துடன் அவர் கண்டுகொள்வார். உறுதியான அபிப்பிராயங்கள் உடையவர்.

அவருடன் இன்பமாக, நான் அந்த நாளைக் கழித்தேன். ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்ற முறையில் கொடி வணக்கத்துடன் அந்நாளை அவர் ஆரம்பித்தார். அழகிய ஒரு சிறு பிரசங்கத்தில், காங்கிரஸ் மகாசபையின் பெருமையைப் பற்றியும், மகாத்மா காந்தியின் ஒப்பற்ற தலைமையைப் பற்றியும் தேசீயத்தின் அவசியத்தைப்பற்றியும், அவர் தெளிவாகப் பேசினர். நடுவே, நான் காங்கிரஸை விட்டு விலகியதற்காக, எனக்கும் ஒரு 'டோஸ்' கொடுத்தார். அவர் சொன்னதில் எனக்கு வருத்தம் ஏற்படவில்லை.

நாங்கள் இருவரும் லூதியானவுக்குப் பதினறு மைல்களுக்கு அப்பால் உள்ள பாயினி சாஹேப் என்ற இடத்துக்குச் சென்றோம். அன்று காலை, அந்த முஸ்

லிம் பெரியார் பல விஷயங்களைப்பற்றி என்னுடன் மனம்விட்டுப் பேசினார். காங்கிரஸ்காரரும் தேசிய வாதியுமான அவர், "நான் உங்களைப்போல **என்** காலத்தில் காங்கிரஸில் சேரவில்லை. காங்கிரஸ் காரனாகவே பிறந்தேன். பெரிய மௌல்வியாகிய **என் பிதாவே** ஒரு காங்கிரஸ்காரர். 1885-ஆம் வருஷம், முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து தேசத்துக்கு உழைக்கலாம் என்ற **'பத்வா'**வை (சுற்றுத்திரவு) விடுத்த உலீமாக்களில் என் பிதாவும் ஒருவர். நான் காங்கிரஸ்காரனாகவே இறக்க விரும்புகிறேன்" என்று சொன்னார்.

அவர், எவ்வளவு தீவிரமான தேசியவாதியோ, அவ்வளவு தீவிர மத பக்தியுள்ள முஸ்லிமாகவும் இருந்தார். தமது மதத்தில் பற்றுக்கொண்ட ஒருவருக்கு உண்டாகும் தேசிய உணர்ச்சியே அவருடைய தேசிய உணர்ச்சி. தாங்கள் பக்தியுள்ள ஹிந்துக்களாக இருந்தால், தேசியவாதிகளாக இருக்கமுடியாது என்று பல ஹிந்துத் தேசியவாதிகள் நினைக்கிறார்கள். அவர் இவ்வெண்ணத்துக்கு எதிரிடையான சிறந்ததோர் உதாரணமாவார். பலம் இழந்தவர்கள்தான் தங்களுடைய மதம், நாகரிகம் - இவைகளைப்பற்றி அவமானம் கொள்வார்கள்.

பின்னால் ஒரு பிரசங்கத்தில், அந்த முஸ்லிம் தலைவர் தம்முடைய நிலையைத் தெளிவுபடுத்தினார். அவர் சொன்னதன் சாராம்சம் இதுதான்: "நான் ஓர் இந்தியன், நான் ஒரு முஸ்லிம். இரண்டில் ஒரே ஒன்றாக மட்டில் இருக்கும்படி என்னை ஒருவரும் கேட்கமுடியாது. என்னுடைய வாழ்க்கைக்கு இவ்விரண்டுமே அவசியம். இவ்விரண்

டின் மீதுமுள்ள என் பக்தியே, நான் இந்தியாவுக்கும் இஸ்லாத்துக்கும் சேவைசெய்ய, எனக்கு உற்சாகம் அளிக்கிறது. நான் என் தந்தைக்குத்தான் பிறந்தேன், என் தாயாருக்கு அல்ல என்று சொல்லமுடியுமா ?''

மேலும் பேசுகையில் அவர் சொன்னதாவது: "நான் ஒரு தீவிர முஸ்லிம். ஆனால், நான் ஒரு தீவிர ஹிந்துவைக் கௌரவிக்கிறேன். அப்பொழுதுதான் நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து நண்பர்களாக இருக்கமுடியும். நான் ஒரு தீவிர ஹிந்துவுடன் சிறையில் இருந்தேன். காலையில் எனக்கு முன்பு அவர் எழுந்தால், எனது தொழுகைக்காக என் பாயையும் தம்முடைய ஜபத்துக்காகத் தமது பாயையும் போட்டுவிடுவார்; நான் சீக்கிரம் எழுந்தால், நானும் அப்படியே செய்வேன். இதுதான் நான் விரும்புவது.''

அவர் சொல்வது மிகவும் சரியானது. இந்தியாவில் உள்ள தொந்தரவில் முக்கால் பங்கு, ஹிந்துத் தேசீய வாதிகள் தங்களுடைய தீவிர முஸ்லிம் நண்பர்களின் மரியாதையைப் பெறாமல் இருப்பதுதான். நான் எரவாடாச் சிறையில்இருந்தேன். அங்கே, நானும் என் நண்பர் ஜனுப் நூரியும் ஒன்றாக இருந்தோம். அவர் திருக்கொரானையும் நான் கீதையையும் படிப்போம். இருவரும் ஒருவரை ஒருவர் மதித்தோம். எங்கள் இருவரிடமும் ஈசாவின் மனோபாவம் குடிகொண்டிருந்தது. சேவாக் கிராமத்தில் உள்ள குடிசையில் கீதையைப் படிக்கும் காந்திஜீயும், திருக்கொரானைப் படிக்கும் கான் அப்துல் காபர்கானும் ஒரே கடவுளை வெவ்வேறு முறைகளில் தொழுவதை, நான் நினைத்துக்கொண்டேன்.

அந்த முஸ்லிம் தலைவர் ஐரோப்பிய நாகரிகத்தைப்பற்றி நன்கு அறிந்துகொண்டிருக்கிறார். "ஆங்கிலம் படித்த நீங்கள் அதனுடைய கெடுதியை அனுபவித்த பிறகுதான் அறிகிறீர்கள். ஆனால், எனக்கோ அது முன்பே தெரியும்" என்று அவர் திரும்பத் திரும்பச் சொன்னார். இதைக் குறித்து ஒரு கதையும் சொன்னார் :

"மிஸ்ஸார் என்னும் பிரதேசத்தில், தானே கடவுள் என்று சொல்லிக்கொண்ட ஓர் அரசன் இருந்தான். ஒரு சோதிடன், நீர் கடவுள் அல்ல என்று கூறும் ஒரு குழந்தை உம்முடைய அடிமைகளில் ஒருவனுக்குப் பிறக்கப்போகிறது என்று அவ்வரசனிடம் சொன்னான். உடனே அந்த அரசன் அடிமைகளின் குழந்தைகளை யெல்லாம் கொன்றுவிட்டான்.

"அந்தக் குழந்தைகளில் ஒன்றுமட்டும் எப்படியோ தப்பிப் பிழைத்து, அவ்வரசனுடைய அரண்மனையிலேயே வளர்ந்தது. அந்தக் குழந்தை பெரியவன் ஆனதும், ஒருநாள் அரசனிடம் சென்று, அவன் கடவுள் அல்ல என்றும் அவனுக்கும் மேலாக ஒரு சர்வேசுவரன் இருக்கிறான் என்றும், தைரியமாகச் சொல்லிற்று. ஆத்திரம் அடைந்த அவ்வரசன், பின்பும் தன்னை எவரும் கடவுள் அல்ல என்று கூறாமல் இருக்கும் பொருட்டு, அடிமைகளின் குழந்தைகளை யெல்லாம் மீண்டும் படுகொலை செய்துவிடச் செய்தான்.

"ஆனால், இப்பொழுதிருக்கும் அதிகாரவர்க்கத்தார் இப்படி ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஏனென்றால், அவர்கள் ஏற்படுத்திய அற்புதமான கலாசாலைகளால் இந்திய மக்கள் அனைவரும்தான் நடை- பிணமாக்கப்பட்டு விட்டார்களே ; இது

போதாதா!'' என்று சொல்லிவிட்டு, அவர், “அந்த அரசன் ஒரு கலாசாலையை வைத்திருக்கக் கூடாதா? அப்படிச் செய்திருந்தால், சிறு குழந்தைகளைப் படு கொலை செய்த பாதகம் அவனைச் சாராமலிருக் குமே!'' என்று பொருள்கொண்ட ஓர் உர்துச் செய்யுளையும் பாடினர்.

நான் அவர் சொன்னதை முழுவதும் ஆமோதிக் கிறேன். ஆங்கிலக் கலாசாலைப் படிப்பால், நம் வாலிபர்களின் குணங்களும் லட்சியங்களும் சீர்கெட் டிருப்பதை நான் அறிவேன். நானே கலாசாலையில் படித்த படிப்பில், பெரும் பகுதியையும் பின்னல் மறக்கவேண்டிய தாயிற்று. மேனாட்டுக் கலையையும் கீழ்நாட்டுக் கலையையும் நன்ருக அறிந்துகொண்ட வர்கள் என்று பெருமையடித்துக்கொள்ளும் நம்மை விட, அந்த முஸ்லிம் தலைவர் உண்மையை நன்ருய் அறிந்திருக்கிருர்.

லூதியானவில் நடைபெற்ற பாகிஸ்தான் எதிர்ப்பு மகாநாட்டில், அவர் தைரியமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பாகிஸ்தான் திட் டத்தை வன்மையாகக் கண்டித்தார். அந்தப் பாகிஸ் தான், '**இஸ்லாமிய சர்க்கார்கூட அல்ல**' என்று சொன்னர்.

அவர் என்னிடம் விடைபெற்றபின், அவரைப் போலவே இன்னும் பல முஸ்லிம்கள் இருக்கக் கூடாதா என்று நான் பிரார்த்தித்ததைக் கடவுள் தான் அறிவார்.

ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி, மௌலான அபுல் கலாம் ஆஸாத், கான் அப்துல் காபர் கான், டாக்டர் கான் சாகெப் முப்தி சாகெப் முதலிய

அற்புதமான மனிதர்களை உற்பத்தி செய்த முஸ்லிம் சமூகத்தைப்பற்றியும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து பிரிட்டிஷாரின் பிரவேசத்தைத் தடுத்து எதிர்த்த அந்நாட்களைப்பற்றியும், நான் வெகுநேரம் நினைத்துக்கொண்டிருந்தேன்.

இப்படிப்பட்ட முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் பொதுமக்களிடம் தங்கள் செல்வாக்கை மீண்டும் அடைவார்களானல், இந்தியாவுக்கு எவ்வளவு நல்ல காலம் பிறக்கும்!

10. *சிரஞ்சீவி ஹிந்துஸ்தான்

என்னை இம் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க அழைத்த என் லூதியானு நண்பர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன். இந்த மகாநாட்டினுல் நான் அநேகம் நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தது எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

அகண்ட ஹிந்துஸ்தானத்துக்காகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதன் அவசியத்தை வற்புறுத்தி, நான் செய்த காரியங்களுக்காக எனக்குச் சூட்டப்பட்ட புகழுரைகளுக்கு நான் தகுதியற்றவன்.

இப்பொழுதிருக்கும் நெருக்கடியான நிலைமையில் நாம் ஒவ்வொருவரும் அச்சமின்றி உண்மையை வெளிப்படையாகக் கூறவேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஒரேமாதிரி நினைக்கவேண்டும்; செயலாற்றவும் வேண்டும். தனக்குத் தோன்றியவாறு உண்மையை மனம்விட்டுப் பேசி, அதன்படி நாம் ஒவ்வொருவரும் நடந்தாக வேண்டும். நடக்கத் தவறுவோமாஞல், ஜனநாயகம் என்பது ஒரு கேலிக்கூத்தாகி விடும்; வாழ்வே வெறும் பாசாங்கு வாழ்க்கையாகிவிடும்.

இந்த யுத்தத்திஞல், ஜனங்களின் வாழ்க்கை மட்டும் அல்ல; அவர்களின் பிழைப்புக்கூட மாறியிருக்கிறது. இந்த யுத்தத்தின் விளைவான விபரீதங்

---

* **1941 ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதியில் லூதியாஞவில் நடைபெற்ற அகண்ட ஹிந்துஸ்தான் மகாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரை.**

கள் வருங்கால இந்தியாவைச் சீர்குலைத்து விடும்போல் தோன்றுகின்றன.

யுத்தம் ஆரம்பமானதும், இந்தியாவிலுள்ள மாகாணங்கள் சுய ஆட்சிப் பாதையில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. மொத்தத்தில் அவைகள் பிரிட்டனிடம் அனுதாபம் கொண்டிருந்தன. பிரிட்டனின் சுதந்தரமான சகாவாக யுத்தத்தில் கலந்துகொள்ள, இந்தியா விரும்பியது; அடிமையாக அல்ல; ஆனால் பிரிட்டிஷாருக்கு இது பிடிக்கவில்லை. பின்பு நடந்த தெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆறு மாகாணங்களில் ஜனநாயக ஆட்சி மறைந்தது. இந்திய மக்களுக்குப் பொறுப்பற்ற ஒரு மத்திய சர்க்கார், இந்தியாவின் எல்லாச் சாதனங்களையும் யுத்தத்துக்கு உபயோகிக்க ஆரம்பித்தது சுயமரியாதையைக் காத்துக்கொள்ளுவதற்காக, காங்கிரஸ் தனது அதிகாரத்தை விட்டு ஆரண்யம் புகுந்தது. சுதந்தரம் பெறுவதற்குத் தேசமக்கள் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளையும் தடுப்பதற்காக, பாகிஸ்தான் என்ற ஓர் இயக்கத்தைக்கூட, பிரிட்டிஷ் ராஜதந்திரம் கிளப்பிவிடத் தொடங்கியது, தேசத்தின் பிரதிநிதிகள் எனப் பிரிவினை வாதிகளைப் பிரிட்டிஷார் தட்டிக் கொடுத்தார்கள். இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைப் பிரிவினை வாதிகளே நிர்ணயிக்கப் போகிறவர்கள்போல, அவர்களை, பிரிட்டிஷார் நடத்த ஆரம்பித்தார்கள். பிரிவினை வாதிகளும், இந்திய சுதந்தர இயக்கத்தைத் தடுக்க, பிரிட்டிஷாரின் கையாட்கள் ஆக மாறி விட்டார்கள்.

பிரிவினை இயக்கம் வெகு ஜாக்கிரதையுடனேயே தோன்றிற்று. தனித்தொகுதி முறையே பிரிவினை

இயக்கத்தின் மூலாதாரம். ஜனுப் ஜின்னுவின் பதி னுன்கு கோரிக்கைகளில் சிலவற்றை, பிரிட்டிஷ் பிர தம மந்திரியாய் இருந்த மிஸ்டர் ராம்ஸே மாக்டனுல்டு ஒப்புக்கொண்டார். அவைகளே, இதுவரை மத சம் பந்தமான சிறுபான்மையினராய் இருந்த முஸ்லிம்களை, தேச முழுவதிலும் மாகாணங்களிலும் சரிசமமான அதிகாரத்தைக் கோரும் ஒரு கோஷ்டியினராக மாற்றி விட்டன. அதிலிருந்து தேசத்தைத் துண்டுபோடும் அடுத்தபடிக்கு அந்தக் கோஷ்டியினர் ஏறிவிட்டார் கள். முஸ்லிம் லீக், தேசத்தின் ஐக்கியத்தை மறுத்து விட்டது. அதனுடைய பகிரங்கமான லட்சியமே பாகிஸ்தானம். ஆகையால், அது இந்தியாவின் அரசி யலில் ஒரு கட்சியல்ல. ஏனெனில், இந்தியாவையே உடைப்பதுதான் அதன் கருத்து. நாம் நூற்றுண்டு களாக வளர்த்துவந்த ஒற்றுமையையும் பலத்தையும் தகர்க்க, அது வெளிப்படையாக முயற்சிக்கிறது. தேசத்தின் அமைதியையே சீர்குலைக்கக்கூடிய இயக் கங்களை அது கிளப்பிவிட்டிருக்கிறது. முஸ்லிம்கள் ஒரு தனித்தேசத்தினர் என்ற கிளர்ச்சியை நடத்திக் கொண்டு, இந்தியத் தேசீயத்தின் அஸ்திவாரத்தையே அது தகர்த்தெறியப் பார்க்கிறது. தேசத்தைத் துண்டு போடுவதன் மூலமோ அல்லது தேசத்தி லுள்ள பெரும் பான்மையினரை முஸ்லிம்களுடன் சட்டரீதியாகச் சமநிலைக்குக் கொண்டுவருவதன் மூலமோ, இஸ்லாம் மதத்தை அரசியல் விஷயங்க ளுக்கு உபயோகிக்க, முஸ்லிம் லீக் முயலுகிறது.

பிரிவினைத் திட்டமானது, பிரிவினை வாதிக ளாலேயே இதுவரை நன்ருக விளக்கப்படவில்லை. ஆனுல் அவர்கள் வெளியிட்டுள்ள சில அம்சங்களை,

அந்தத் திட்டத்தின் அபாயத்தை நன்கு காட்டு கின்றன. அந்த அம்சங்களாவன :

1. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் எல்லோரும் ஒரு தனித் தேசத்தினர்.
2. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் இந்தியாவிலேயே ஒன்று அல்லது பல தனிமையான தாய்நாடுகளில் வசிக்க உரிமை பெற்றவர்கள். அந்தத் தாய்நாடுகளில் ஜனங் களின் வாழ்க்கையும் அரசியலும் திருக்கொரானில் உள்ள படி நடத்தப்படும்; மொழியோ, உர்துவாக இருக்கும்.
3. பாகிஸ்தானில் முஸ்லிம்கள் அல்லாத சிறு பான்மை யினரும், புதிதாகச் சிருஷ்டிக்கப்படும் ஹிந்து ஹிந்துஸ் தானில் முஸ்லிம் சிறுபான்மையினரும், பாகிஸ்தான் சர்க்காரையே தங்கள் ரட்சகர்களாகக் கருதவேண்டும்.

வங்காள மந்திரியாய் இருந்த ஜனுப் ஷுஹ்ரவாடி சமீபத்தில் சொன்னர் :

“முஸ்லிம்களுக்குத் தனித் தாய்நாடுகளைச் சிருஷ்டிக்க நாங்கள் விரும்புகிறோம். அந்த நாடுகளில் எங்கள் இஸ்லாம் மதக் கோட்பாடு களின்படியே எல்லாம் நடைபெறும். இது வரையில் சச்சரவிட்டுக்கொண்டிருந்த பல சமூ கங்களும் பொது நன்மைக்காக நேச பாவத் துடன் ஒத்துழைத்துக்கொண்டு ஒரே நாட்டில் வசிக்க முடியும் என்பதை, நாங்கள்தான் எங்கள் பாகிஸ்தான் மூலம் உலகத்துக்கு நிரூபிக்கப் போகிறோம்.”

காங்கிரஸ் மந்திரி சபைகள் சமீபத்தில் புரிந்த ‘அட்டூழியங்கள்’ போன்ற கஷ்டங்களிலிருந்து ஹிந் துஸ்தானிலுள்ள முஸ்லிம்களைப் பாகிஸ்தான் சர்க் கார் காக்குமாம்!

சுருங்கக் கூறுமிடத்து, பாகிஸ்தான், முஸ்லிம் களின் தனித்தாயகமாகும்! அதனுடைய அரசாங்க நிர்வாகம், இஸ்லாம் மதத்தின்படி இருக்கும்! அந்த நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அல்லாதார் 'சரியாக' நடத்தப்படுவார்களாம்! அதாவது, வங்காள மந்திரி கள், ஹிந்துக்களை நடத்திய 'டாக்கா' ரகத்தைப் போலத்தான் இருக்கும் என்று ஊகிக்கலாம்! இது தவிர, ஹிந்துஸ்தானில் உள்ள முஸ்லிம்களைக்கூட இந்தப் பாகிஸ்தானம் காப்பாற்றுமாம்! செக்கோஸ் லாவாகியாவில் இருந்த ஜெர்மன் மக்களை ஹிட்லர் 'பாதுகாத்தது' போல என்று நம்பலாம்!......

நாம் இப்பொழுது இந்த மூன்று அம்சங்களையும் ஆராய்வோம். முதலில், இந்தியாவிலுள்ள முஸ்லிம் கள் ஒரு தனித் தேசத்தினரா?

ஒரே தேசத்திலிருந்துகொண்டு அதன் மேலுள்ள பற்றுதலால் பலமான ஓர் ஐக்கிய பாவங்கொண்டு, தம் தேசத்தவர் பண்டையக் காலங்களில் ஆற்றிய வீரச் செயல்களின் ஐதீகங்களை மனதில்கொண்டு அனைவரும் ஒன்றுகூடி ஒத்துவாழும் மனிதர்களே ஒரு தேசத்தவர் (Nation) எனக் கூறலாம்.

முஸ்லிம்கள் இப்படிப் பட்டவரா? இந்தியா வில் உள்ள முஸ்லிம்கள் ஒரு தனி மதத்தைச் சேர்ந்த சிறுபான்மையினர். இந்தியாவில் எல்லாப் பாகங் களிலும் அவர்கள் இருக்கிறார்கள். ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் போல, தாங்களும் இந்தியாவின் மக்கள் என்றே அவர்களும் நினைக்கிறார்கள். அவர் கள், ஒரு தாய்நாட்டைத் தேடி அலைந்து திரியும் ஜனக் கூட்டமல்ல. இனத்திலே இந்தியர்களாக இருப்பதா லும், இந்தியாவிலுள்ள எல்லாப்பாகங்களிலும் அவர்

களுக்குப் பொருளாதார சம்பந்தங்கள் இருப்பதாலும், பல நூற்ருண்டுகளாக ஒன்றுகூடி வாழ்ந்ததன் பயனுய் நாகரிக ஒற்றுமை கொண்டிருப்பதாலுமே, இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும், இப்படி இந்தியாவின் பொதுமக்களாக இருக்கிருர்கள். ஆகையால், முஸ்லிம்கள் ஒரு தனித் தேசத்தினர் என்பது கொஞ்சங்கூடப் பொருந்தாது.

இந்து தேசச் சரித்திரத்தைப் பாருங்கள்! **குத்புத்தீன் ஐபக்குக்குப்** பிறகு, சென்ற எண்ணூறு வருஷங்களாக இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஒரு கட்சியாகச் சேர்ந்து ஹிந்துக்களுடன் சண்டையிட்டதில்லை. அக்பர், ஜிஹாங்கீர், ஷாஜஹான் இவர்கள் காலத்தில்தான், இந்தியாவின் பெரும் பாகத்தையும் முஸ்லிம் அரசர்கள் ஆண்டார்கள். இவர்களது ஆட்சியை, ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லோருமே ஆதரித்தார்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஒன்ருய்க்கூடி, பிற இந்தியருடன் சண்டை போட்ட காலமே கிடையாது. அப்பொழுது மதவெறி இருந்ததில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனல், அந்தக் காலத்து ஜனங்கள், தங்களுடைய மத வித்தியாசங்களை ஒப்புக்கொண்டு, கௌரவமாகச் சமரஸத்துடன் வாழ்ந்தார்கள். ஆகையால், முஸ்லிம்கள், ஒரு தனித் தேசத்தினர் என்பது சரித்திர பூர்வமான உண்மை அல்ல.

இதற்கு எதிராக, ஆதி கால முதல் இந்தியாவை எல்லாருமே பொதுத் தாயாகப் போற்றி வந்திருக்கிருர்கள். அதே மனப்பான்மை எப்போதுமே இருந்து வந்தது. 'ஆரியா வர்த்தம்', 'பாரதம்', 'ஹிந்துஸ்தானம்', 'இந்தியா' என்று பல பெயர்களால் நமது

நாடு அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. மத சம்பிர தாயத்திலோ, இலக்கியத்திலோ, சிற்பக் கலையிலோ, அரசியலிலோ கௌரவிக்கப்படும் எல்லாத் தலைவர் களும், தங்களை இந்தியாவின் மக்களாகவே பெருமை யுடன் கூறிக் கொண்டார்கள். நம்முடைய மூதாதை யரால் ஏற்பட்ட ஐதீகங்கள் யாவும், நமது தேசம் முழுவதையுமே புனிதமாக்கி யிருக்கின்றன. திரும்பத் திரும்ப, நாம் யாவரும், ஜாதி, மத, பேதமின்றி, பொதுவான ஒரே உணர்ச்சியுடன் வாழ்ந்து வந்திருக் கிறோம். எனவே, **இந்தியா ஒரே தேசம், அதாவது அகண்ட ஹிந்துஸ்தானம்** என்பது ஒரு நிரந்தரமான சத்தியம்.

ஆனால், மனித வாழ்வில், பகுத்தறிந்து ஆராய் தல் என்பது எப்பொழுதும் மட்டுத்தான். ஆவேசத் தால் தூண்டப்படும் ஓர் இயக்கம், ஜனங்களிடம் கிளப்பி விடும் உணர்ச்சியால், அது முடிவில் வெற்றி பெறுவிட்டாலும், நடக்கும்போது மிகுந்த தீங்கை உண்டாக்கலாம். இவ்வாறு ஏற்படும் தற்காலிகக் கஷ்டம், யுத்தத்துக்குப் பின்பு ஏற்படும் குழப்ப நிலை மையுடன் சேர்ந்துகொண்டு, ஜனங்களைப் பயமுறுத்தி இந்தியாவைத் துண்டு போடச் சம்மதிக்கச் செய்யும் என்பதே பிரிவினை வாதிகளின் எண்ணம்.

பிரிவினை வாதிகளுக்குச் சாதகமாகப் பல விஷ யங்கள் இருக்கின்றன. முஸ்லிம் சமூகத்தின் மத வெறியை, தங்கள் அரசியல் பேராசைக்கு உபயோ கப்படுத்திக் கொள்ள, இந்தப் பிரிவினை வாதிகள் நினைக்கிறார்கள். தேசீய முஸ்லிம்களுக்கு முஸ்லிம் பொது மக்களிடம் அதிகமான செல்வாக்கு இல்லை. இதையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கட்டுப்பாடு இல்லாத ஹிந்துக்கள், மத வெறியின் பயங்கர எழுச்சிகளுக்குப் பயந்து விட்டுக் கொடுத்து விடும் போக்கையும், அவர்கள் சாதகப்படுத்திக் கொள்கிருர்கள். துருக்கி, அரேபியா, ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலுள்ள முஸ்லிம்களின் அனுதாபத்தையும் அவர்கள் நம்பியிருக்கிருர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவின் சுயராஜ்யத்தைத் தடுக்கும் எண்ணமுள்ள பிரிட்டிஷார், யுத்தம் முடிந்த பின்பு அளிக்கும் சீர்திருத்தத்தில், தேசத்தைத் துண்டு போடத் தங்களுக்கு உரிமை அளிப்பார்கள் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

மதவெறி, தங்களுக்குச் சாதகமாக, அரசியலில் வெற்றியைக் கொடுக்கும் என்று அவர்கள் நினைக்கிருர்கள். ஆனல், இந்த வெறியினுல், உண்டாகப் போவது என்ன ? அங்கங்கே கொலைகள் நடக்கும்; பல வீடுகள் பற்றி யெரியும்.

இப்படிக் கலகங்கள் அடிக்கடி நடந்து கொண்டிருந்தால், அப்பொழுது, ஆளும் வர்க்கத்தினர், சமாதானத்தை நிலைநிறுத்தத் திறமையற்றவர் அல்லது இஷ்டமற்றவர் என்று ஆகிவிடும். இந்தக் கலகங்கள் நடந்து கொண்டேயிருந்தால், இந்தக் கலகங்களுடன் சர்க்காரும் ரகசியமாகச் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்ற பழி, சர்க்கார் மீது நிச்சயமாக ஏற்பட்டு விடும்.

இப்படிக் கொலையும் தீயும் தீவிரமாகத் திரும்பத் திரும்ப நடப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுதுங்கூட, தேசத்தைத் துண்டு போடும்படி ஜனங்களை எவரும் பயமுறுத்த முடியாது. இதுவரை

யில் கோழைகளாக இருந்தவர்கள் கூட, இந்தக் கலகங்களால் தைரியவான்கள் ஆகிவிடுவார்கள். மத வெறியை நம்புகிறவர்கள், முஸ்லிம்கள் அல்லாதாரைக் கட்டுப்பாடு இல்லாத கோழைகள் என்று நினைக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட கோழைகளும், அவசியம் நேரிடும்போது வீரர்கள் ஆகிவிடுவது உலக இயல்பு. தங்கள் இனத்தார் கத்திக்குத்துக்கு இரையாவதையும், தங்கள் பெண்கள் மானபங்கம் செய்யப்படுவதையும், தங்கள் ஆலயங்கள் அசுத்தமாக்கப் படுவதையும் கண்ணால் காணும் எந்த ஹிந்துவுக்கும், சீக்கியனுக்கும் அல்லது மராத்தியனுக்கும் ஆவேசம் பொங்காமல் இருக்குமா? அவனுக்கு எதிர்ப்பு மனோபாவம், ஏற்படாமல் போகுமா? பாலஸ்தீனத்தில் அரேபியரும் யூதரும், கத்திகளால் ஏகமாகக் குத்திக் கொண்டார்கள். ஆனால், அந்தக் கலகங்களால் அவர்களுடைய பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. வங்காளத்தில் டாக்காவில் நடந்த கலகங்களும் ஆமதாபாத்தில் நடந்த கலகங்களும், ஹிந்துக்களின் மனதில் எதிர்ப்பு உணர்ச்சியையே உண்டாக்கின. பெருத்த அபாயத்தில் இருக்கும் தங்களை, பிரிட்டிஷ் சர்க்கார் சரியான முறையில் பாதுகாக்கவில்லை என்ற எண்ணம் ஹிந்துக்களிடம் பரவி வருகிறது. மனிதனுடைய சாமர்த்தியத்துக்கு எல்லையே கிடையாது. பலாத்காரம் சரிப்படா விட்டால், அதைவிட இன்னும் தீவிரமான சாத்விக எதிர்ப்பு முறையையும் கையாள மனிதன் நினைக்கிறான். உதாரணமாக, தனக்கு வரும் அபாயத்தை, ஒத்துழையாமை, பொருளாதாரப் பகிஷ்காரம் முதலிய வழிகளால், சமாளிக்க அவன் விரும்புகிறான்.

பல நூற்றுண்டுகளாக பல்வேறு இந்திய சமூகங்கள் ஒன்றுபட்டு வாழ்க்கையை நடத்தி வந்திருப்பதால், தற்போது வகுப்புக் கலகங்கள் அதிகமான மாறுதல்களைச் செய்ய முடியாது. உதாரணமாக, பஞ்சாப், வங்காளம் இவைகள் தவிர, மற்ற மாகாணங்களில், ஒன்று, ஹிந்துக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள் ; அல்லது, முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். அதாவது, பீஹார், ஒரிஸா, ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பம்பாய், மதராஸ் இவைகளில் ஹிந்துக்கள் பெருவாரியாகவும், எல்லைப்புறம், ஸிந்து இவைகளில் முஸ்லிம்கள் பெருவாரியாகவும் இருக்கிறார்கள். எனவே, வகுப்புக் கலகங்கள் இந்த மாகாணங்களில் நீண்ட காலம் தீவிரமாக நடக்குமானால், சிறுபான்மையோர் நசுக்கப் படுவார்கள் ; அல்லது அவர்கள் வேறு இடங்களுக்குச் சரண் புக நேரிடும். ஹிந்துக்கள் பெருவாரியாக உள்ள மாகாணங்களில் முஸ்லிம் சிறுபான்மையோருக்கு இந்தக் கதி நேரிடுவதை முஸ்லிம்கள் விரும்புவார்களா? அல்லது, முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கும் மாகாணங்களில் ஹிந்துச் சிறுபான்மையோருக்கு இந்தக் கதி நேரிடுவதை ஹிந்துக்கள்தான் விரும்புவார்களா?

இப்பொழுது, வங்காளத்தையும் பஞ்சாப்பையும் கவனிப்போம். வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மற்ற மாகாணங்களில் இருப்பதைக் காட்டிலும் பல விதங்களில் அதிக ஒற்றுமை இருக்கிறது. இரு சமூகத்தாரும் ஓரினமாய், ஒரே மொழி பேசுகிறார்கள்; ஒரே மாதிரி ஆடை உடுத்துகிறார்கள். கிராமங்களில் இரு சமூகத்தா

ரும் வேஷ்டியே கட்டுகிருர்கள்; தாடியும் வளர்க்கிருர்கள். 1931-ஆம் வருஷத்து ஜனத்தொகைக் கணக்குப்படி ஹிந்துக்களின் ஜனத்தொகை இரண்டு கோடியே பதினைந்து லட்சம்; முஸ்லிம்களின் ஜனத்தொகை இரண்டு கோடியே எழுபத்தி நான்கு லட்சம். ஆகையால், வங்காளத்தில் சிலரால் நடத்தப்படும் பாகிஸ்தான் இயக்கம், ஹிந்துக்களுக்கு விரோதமான இயக்கமே தவிர வேறில்லை. வங்காளத்தில் இந்தப் பிரிவினை இயக்கம் பிரிட்டிஷாரின் சலுகையினுலேயே நடக்கிறது. வங்காளத்திலுள்ள அரசியல் கட்சிகளின் ஓயாத சச்சரவுகளும் வங்காளத்துக்கு இக் கதி ஏற்பட்டதற்கு ஒரு காரணமாகும். ஆனுல், வங்காளத்தில் உள்ள ஹிந்துக்கள், இப்பொழுது தங்கள் வேற்றுமைகளை மறந்து, உணர்ச்சி கொண்டிருக்கிருர்கள். தேசீய முஸ்லிம்கள் சிலரே இருந்தாலும் அவர்கள் அவ்வளவு செல்வாக்கற்றவர்கள் அல்ல. ஆகையால், வங்காளம் மிரட்டலுக்குப் பணிந்து விடாது. ஜன ஒற்றுமை கொண்ட வங்காளம், அபாயத்தை அறிந்து கொண்டு விட்டால், பயமுறுத்தல்களுக்கு அஞ்சி ஓடாது.

பஞ்சாபில், பலம், தைரியம் இவைகள் இல்லாமல் போகவில்லை. அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கத்தில் சீக்கியர்கள் நம்மோடு தோளோடு தோள் நிற்கிருர்கள்.

பிரிவினைப் பிரசாரம் உண்மையானது அல்ல என்று சிலர் நினைக்கிருர்கள். அதாவது, நாம் பிரிவினை வாதிகளைப் பொருட்படுத்தாமல் இருந்தால், நமக்குத் தேச ஒற்றுமை சுலபமாகக் கைகூடும் என்றும், அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கத்தை நடத்துவ

தாலேயே நமது சுதந்தரப போர் பலவீனப்படும் என்றும் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட நினைப்புகளுக்கு ஆதாரமே இல்லை. சென்ற இருபத்தைந்து வருஷங்களாக நடந்ததை இவர்கள் மறந்து பேசுகிறார்கள். 1919-ஆம் வருஷத்திலேயே காந்திஜீ ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைத் தமது தேசீயத் திட்டத்தில் முதலில் வைத்தார். இந்த இருபத்திரண்டு வருஷங்களாக இந்தப் பெரியார் அதற்காக உழைத்தும் வருகிறார். கிலாபத்துக்காக அவர் பாடுபட்டார். முஸ்லிம்களின் நேசத்துக்காக அவர் பட்டினி கூடக் கிடந்தார். எவ்வளவு ஆத்திரம் உண்டானாலும், நமது தேசீய உணர்ச்சி குன்றாதிருக்கும்படி, நமக்கு அவர் கற்பித்திருக்கிறார்.

ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது? இஸ்லாத்தின் கோரிக்கைகளுக்கு, காந்திஜீ சத்துருவாம்! அவராலே உருவாக்கப்பட்ட இன்றையத் தேசீயத்துக்கே குழி தோண்டப்படுகிறது! சுக்கூர், டாக்கா முதலிய இடங்களில் நடந்த கலகங்கள், நம்மை எதிர்நோக்கி நிற்கும் அபாயத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. 1939-40 ஆம் வருஷங்களில் நாம் சுதந்தரப் பாதையில் முன்னேறுவதை இந்தப் பிரிவினை வாதிகள் தடுத்தார்கள். இரு சமூகங்களுக்கும் இடையே அவநம்பிக்கையும் குரோதமும் இவ்வளவு அதிகமாக எப்பொழுதுமே இருந்ததில்லை.

இந்த உண்மைகளை மறைப்பதில் என்ன லாபம்? தேசீயமும் பிரிவினையும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக நிற்பவை. இந்தப் பிரிவினை இயக்கம் வெற்றியடைந்து விட்டால், இந்தியா சுதந்தரத்தை அணுகக்கூட முடியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்

களும், ஒரே உடம்பின் பிரிக்க முடியாத இரண்டு அங்கங்களைப் போல் இருக்கிறார்கள். இதைப் பிரிவினை வாதி அறிய வேண்டும். பிரிவினை இயக்கம் தோற்று விட்டால், சுதந்தரம் தானே வரும்.

பிரிவினை வாதிகள் ஹிட்லரின் தோரணையை விட்டு விட்டு நியாயமான முறையில் பேச ஆரம்பித்தால், சமூக ஒற்றுமையை நாம் மறுபடியும் நமது நாட்டில் நிலைநாட்டிவிட முடியும். நமது தேசம் சமூக ஒற்றுமைக்குப் பெயர் பெற்றது. சென்ற காலத்தில் , பெரும்பான்மை, சிறுபான்மை என்ற ரீதியில் நாம் எண்ண வேயில்லை. பொதுவான இந்தியாவில் ஒவ்வொரு சமூகமும் தனித்தனியே கலாச்சார வளர்ச்சி பெற்றுவர, நம்முடைய நாகரிகம் இடம் அளிக்கிறது. ஐரோப்பாவில் நடப்பதைப் போல நாம் எல்லோரும் ஒரே விதமான வாழ்க்கையையே நடத்த வேண்டும் என்று கட்டுப்படுத்தப் படவில்லை.

ஆனால், இந்தப் பிரிவினை வாதிகளுடன் இப்படிச் சாந்தமாகப் பேசுவதில் பலனில்லை. முதலில் நாம் அவர்களுடைய மதிப்பைப் பெற வேண்டும்; பயமுறுத்தலுக்கு உடன்படக் கூடாது. நாம் இந்த நாட்டில் இருப்பது, நமது பிறப்புரிமை. நமக்கு இது புண்ணிய பூமி. இதை நாம் ஐக்கியமாக வைத்துக் கொள்ள விரும்புகிறோம். **பயமுறுத்தல்களையும் தர்க்க வாதங்களையும் கண்டு பயந்து, விட்டுக் கொடுக்க முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. இந்த விஷயங்களில் மிகவும் முக்கியமானது நமது தேசத்தின் ஐக்கியம்.**

பிரிவினைவாதிகள் எப்படி முக்கியத்துவம் பெற்றிருக்கிறார்கள் ? அதற்கு முக்கிய காரணம், பிரிட்டி

ஷாரே. ஆனுல், உள்ளே ஓர் அந்தரங்க நோக்கம் இல்லாவிட்டால், பிரிட்டிஷார் கூட இந்தப் பிரிவினை வாதிகளை இவ்வளவு பிரபலப்படுத்தி யிருக்கமாட்டார்கள். அந்த அந்தரங்கந்தான் என்ன? இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியைத் திரும்பவும் ஸ்தாபிக்க விரும்புவதுதான் அந்த அந்தரங்க ஆவல். பிரிவினை வாதிகள் இந்த லட்சியத்துக்காகத்தான் உழைத்து வருகிருர்கள். ஆனுல், இந்த ஆசை முஸ்லிம் பொது மக்களுடையது அல்ல. இந்தியாவில் பல பாகங்களில் முஸ்லிம் பொதுமக்கள் ஹிந்துப் பொதுமக்களோடு கூடவே மகிழ்ச்சியுடன் வாழ்கிருர்கள். இவ்வாறு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து தேசத்தின் பெருமையை நிலைநாட்டுவதை, இந்தப் பிரிவினைவாதிகள் விரும்பவில்லை, அவர்களுக்குத் தோன்றுவது ஒரு புது மனோராஜ்யம்.

இந்த மனோராஜ்யம் வெறும் கற்பனையால் மட்டும் ஏற்பட்டதல்ல. நம்முடைய பலவீனத்தின் பயனைய்த்தான் இப்படியெல்லாம் இந்தப் பிரிவினைவாதிகள் நினைக்கிருர்கள். நாம் கோழைகள். நமக்குள் கட்டுப்பாடில்லை. சத்தியத்துக்காகத் தியாகம்செய்ய, நாம் துணிவற்றவர்களாய் இருக்கிருேம். ஆகையால், பாகிஸ்தான் இயக்கத்துக்குப் பிரிவினைவாதிகள் மட்டும் காரணம் அல்ல; நம்முடைய உயர்ந்த லட்சியங்களுக்காக நாம் ஒன்றுகூடி உறுதியாய் நிற்காமல் போனதும் அதற்கொரு காரணமாகும்.

உங்களில் பலர் நான் சொல்வதை மறுக்கலாம். ஆனுல், கேட்பதற்கு மனக்கஷ்டத்தை கொடுத்தாலும், நான் உண்மையைச் சொல்லியே தீரவேண்டியிருக்கிறது. ஹிந்துக்களும் சீக்கியர்களும் பலவீனப்

பட்டிருப்பதால்தான், இந்தத் தேசத்தில் சர்வாதிகார ஆதிக்கம் புரிய, இந்தப் பிரிவினைவாதிகள் விரும்புகிறார்கள்.

உங்களுக்குச் சந்தேகங்கள் இருந்தால், நான் கேட்கும் சில கேள்விகளை நன்றாக யோசியுங்கள். இந்தியாவில் உள்ள ஜனங்களில் இந்தப் பிரிவினை இயக்கத்தால் அதிகமாய்ப் பாதிக்கப்படுகிறவர்கள் பஞ்சாபிகளே. ஆனால், அவர்கள் பிரிவினை இயக்கத்துக்கு எதிராக ஒன்றுகூடி நிற்கிறார்களா? ஹிந்துக்களும் சீக்கியர்களுமாகத் தாங்கள் ஒரு கோடியே பதிமூன்று லட்சம் பேர்கள் இருந்தும், அவர்கள் ஏன் ஒன்றுசேரவில்லை? சீக்கியரும் ஹிந்துக்களும் தங்களுடைய சச்சரவுகளைத் தீர்த்துக் கொண்டபாடில்லை. ஸநாதனிகளும் ஆரிய சமாஜிகளும் பிரிந்து நிற்கிறார்கள், உயர்ஜாதி ஹிந்துக்களையும் ஹரிஜனங்களையும் வேற்றுமைக் கடல் ஒன்று பிரித்து வைத்திருக்கிறது.

தேசீய முஸ்லிம்கள், முஸ்லிம் பொதுமக்களிடையே இந்தப் பிரிவினை இயக்கத்தின் அபாயங்களைப்பற்றித் தீவிரமாக ஏன் பிரசாரம் செய்யவில்லை? சுக்கூர், டாக்கா, ஆமதாபாத் முதலிய இடங்களில் முஸ்லிம்கள் இழைத்த தீச்செயல்களை இவர்கள் ஏன் பொதுக் கூட்டங்களில் கண்டிக்கவில்லை?

இந்தத் தேசத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தாய்நாட்டுக்காக ஏன் உறுதியாக நிற்கவில்லை? இந்தத் தேசத்தில் இருக்கும் பல தேகப் பயிற்சிக் கழகங்கள், நம் வாலிபரை நிமிர்ந்து நின்று, நமது நாட்டின் ஐக்கியத்துக்காக உழைக்கும்படி, ஒருமுகமாக ஏன் உபதேசிக்கவில்லை?

நம்மிடம் எதிர்ப்புச் சக்தி ஏன் குன்றிவிட்டது? நாம் அந்நியரை வணங்குகிறோம்; காலிகளின்முன் நடுங்குகிறோம்; சுயமரியாதையை இழந்தும், உயிர் வாழ்வதையே பெரிதாக மதிக்கிறோம். உலகத்திலே பெருமையோடு வாழும் பல நாட்டு மக்களையும் பின் பற்றி நாமும் நமது நாட்டு ஐக்கியத்தை விட்டுக் கொடுப்பதற்கில்லை என்று நாம் ஏன் திடமான சங் கல்பத்துடன் இருக்கவில்லை?

தேசத்தைத் துண்டுபோடுவதற்காக இந்தப் பிரி வினைவாதிகள் பிரிட்டிஷாரை நம்பியிருக்கிறார்கள். பிரிட்டிஷார் அப்படிச் செய்யாவிட்டால் வேறு யாரோ ஒருவர் வந்து அப்படிச் செய்வார் என்று ஜனப் ஜின்னா பிரிட்டிஷாரைப் பயமுறுத்துகிறார். தங்களது சுயநலத்துக்காகவே, நமது நாட்டின் ஐக்கி யத்தை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, பிரிட்டிஷார் பலப்படுத்தினார்கள். இப்பொழுதும்கூட, பிரிவினை வாதிகளுக்காக இந்தியாவைத் துண்டுபோட, அவர் கள் தயாராயில்லை. ராஜதந்திரம் காரணமாக இந்தியா ஒன்றாயிருப்பதுதான் நல்லது என்று பிரிட்டிஷார் எண்ணுகிறார்கள். ஆனால், ஒன்றும் இனிமேல் நிச் சயமாகச் சொல்லமுடியாது. பிரிட்டிஷ் ராஜதந்திரம் ஏதாவது சாக்கைச் சொல்லிக்கொண்டு, இந்தியாவை இனிமேல் துண்டுபோடவும் முயற்சிக்கலாம்.

தேசப் பிரிவினையை யாராவது பலாத்காரமாகச் செய்ய முற்பட்டால், அதை நான் வரவேற்கிறேன். ஏனெனில், அவ்வாறு செய்யப்படுமாயின், பிரிட்டிஷ் ஆட்சியால் நாம் இழந்த பலத்தையும், எதிர்ப்புச் சக்தியையும் திரும்பப் பெற்றுவிடுவோம். பிரிட்டி ஷாரின் உதவியின்றி நாம் நமது சொந்த பலத்தை

நம்பியிருக்கவேண்டிய காலமல்லவா அந்தக் காலம்? அப்போது நமக்குள் கட்சிச் சண்டைகள் இருக்க மாட்டா; பதவிப்போட்டி இராது. அதுவே நமக்கு முக்கியமான-மிக முக்கியமான-கட்டம். நாம் அடிமைகளைப்போல நடந்துகொள்ள மாட்டோம். 'தாய் நாட்டுக்காக வாழவேண்டும்; அதற்காகவே உயிரையும் விடவேண்டும்' என்ற தத்துவத்தையும் நாம் கற்றுக் கொள்ளுவோம். நாம் தோற்கவும் மாட்டோம்.

அகண்ட ஹிந்துஸ்தான் இயக்கத்தின் லட்சியம் என்ன என்று நீங்கள் அறிந்துகொண்டீர்கள். பண்டைக் காலத்தில் பிறந்து, ஆறுயிரம் வருஷங்களாகப் பலப்பட்டு வளர்ந்து, வெள்ளங்கொண்ட கங்கையின் பிரவாகத்தைப்போல் பெருகிவரும் நம்முடைய கம்பீரமான இந்திய நாகரிகத்தையே, அது பிரதிபலிக்கிறது. உன்னத லட்சியங்களின் முன் மனிதர்களின் கீழ்த்தர ஆசைகள் தோற்றுப்போவதையும், நீதியின் தூய்மையினுல் காட்டுமிராண்டித்தனம் ஜயிக்கப்படுவதையும், மனிதர்களின் தெய்வீக சக்தி வெளிப்பட்டுப் பிரகாசிப்பதையுமே, அது சுட்டிக்காட்டுகிறது. இவைகளைக்கொண்டு ஒளிவீசும் அகண்ட ஹிந்துஸ்தானம் சிரஞ்சீவியாக இருக்கும்!

11. இந்தியாவின் சரித்திரங்கள்

இந்தப் பெயர்கொண்டு பல புத்தகங்கள் வெளி வந்துள்ளன. இந்திய தேச சரித்திரத்தின், பற்பல காலப் பிரிவுகளைப்பற்றிய தனித்தனிப் புத்தகங்களும் வெளியாகியிருக்கின்றன. ஆனால், ஆதிகாலம் முதல் இன்றுவரை இந்திய மக்களின் உண்மையான சரித்திரம் இந்திய நோக்குடன் எழுதப்படவில்லை. நம் நாட்டினரின் உண்மையான சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்ட புத்தகங்களை எழுதவேண்டிய காலம் வந்துவிட்டது. ஒரு நாட்டினருடைய சரித்திரத்தின் மூலம் வெளிப்படும் ஆத்ம சக்தியை அறிந்து பாராட்டுகிறவர்களே, அந்நாட்டினரின் வளர்ச்சியை நன்றாய் அறியமுடியும்.

இந்து தேச சரித்திரம் என்றால் என்ன? அது, ஒரு ராஜ்யத்தின் சரித்திரமல்ல; ஓர் இனத்தாரின் சரித்திரமல்ல; வெற்றிகொண்ட ஒரு கூட்டத்தின் சரித்திரமல்ல. ஆனால், நாம் இந்தியா என்று அழைக்கும் அந்த முழுத்தேசத்தின் சரித்திரமே இந்துதேச சரித்திரமாகும். ஆகையால், இந்துதேச சரித்திரம் என்பது, பழைய காலத்து ஆரியா வர்த்தத்தின் சரித்திரமல்ல; பழைய முஸ்லிம் சரித்திராசிரியர்கள் எழுதிவைத்த ஹிந்துஸ்தானத்தின் சரித்திரமல்ல; பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருக்கும் இந்தியாவின் சரித்திரமுமல்ல.

ஒரு 'தேசம்' என்றால், குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்ட ஒரு பிரதேசம் என்றுமட்டும் கொண்டு

விடக்கூடாது. அல்லது, ராணுவ வெற்றிகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசமும் ஒரு 'தேச'மாகாது. 'தேசம்' என்ற பதத்துக்கு மிக முக்கியமான ஆழ்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. இயற்கை அமைப்பினுலேயே ஒரு தேசத்துக்கு ஓர் ஒற்றுமை ஏற்பட்டுவிடுகிறது; அதை மனிதன் சிருஷ்டிக்கமுடியாது. இந்தியாவுக்கு ஒரு பக்கத்தில் ஹிமாலய பர்வதமும் ஹிந்துகுஷ் பர்வதமும் மற்ருெரு பக்கத்தில் கராச்சியிலிருந்து கல்கத்தாவரை சமுத்திர எல்லையும் இருக்கின்றன. இவ்வாறு இயற்கையிலேயே இந்தியா ஒரு தனித்தேசமாயிருக்கிறது என்பதைப் பழைய காலத்து ஆசிரியர்கள்கூட அறிந்திருக்கிருர்கள். தனித்தேசத்தில் இருக்கும் இந்திய ஜனங்களின் நடையுடை பாவனைகள், நாகரிகம் யாவும், பக்கத்திலுள்ள தேசங்களினின்றும் மாறுபட்டிருக்கின்றன. இப்படி மாறுபட்டிருப்பதால்தான், சீனுக்காரர்கள், ஆப்கானியர்கள், பாரசீகர்கள் இவர்களைப்போல் இல்லாமல் இந்தியர்கள் வேறுவிதமாக இருக்கிருர்கள்.

பூகோள ரீதியாய்த் தனியான ஓர் அமைப்பைப் பெற்றிருப்பதால்தான் இந்தியா ஒரு தேசமாய் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனுல், அது அதனிலும் மேம்பட்டதாகும்; பூகோள ரீதியான அமைப்பிலும் உயர்ந்ததாகும். ஒரு தேசம் என்பது வெறும் பூகோள அமைப்புமட்டும் அல்ல; சரித்திர சம்பவங்களாலும், சமூகத்தை உருவகப்படுத்தும் பலத்த பல சக்திகளாலும் ஏற்படும் ஓர் ஒற்றுமையே தேசமென்பது. ஆனுல், நம்முடைய இன்றைய 'சரித்திரங்கள்' என்பவை எப்படி இருக்கின்றன? அவை கேவலம் ஒரு மாகாணத்தின் சரித்திரம், அல்லது ஒரு ராஜவம்சத்

தின் சரித்திரம், அல்லது மொகலாய சாம்ராஜ்யத்தின் சரித்திரம், அல்லது பிரிட்டிஷ் ஆட்சியின் வளர் பிறைச் சரித்திரமாகவே இருக்கின்றன. இவைகளை யெல்லாம் தேசத்தின் உண்மையான சரித்திரங்கள் என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

இந்தியாவின் சரித்திரம் என்பது, அதை ஆண்டவர்களின் வெற்றிகளைமட்டும் கூறுவதல்ல. இந்த அரசர்களின் வெற்றிகளைப் புகழ்வது கவிகளின் வேலை; சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்ட நாவலாசிரியர்களின் வேலை. அவ்வரசர்களின் வீர தீரச் செயல்கள், தேசத்தில் பழைய ஐதீகங்களாக மாறி, தேச மக்களுக்குப் பெருமை கொடுப்பவையாயும், வழிகாட்டிகளாயு மிருந்தால் மட்டுமே, அவை நமது தேச சரித்திரத்தில் இடம் பெறலாம்.

சரியான ஒரு தேச சரித்திரம், அந்தத் தேசத்தில் ராஜ்யங்கள் எழுந்ததையும் அழிந்ததையும் மாத்திரமே கூறி நின்றுவிடக்கூடாது. அந்த ராஜ்யங்களின் உதயத்தாலும் மறைவினாலும் தேசமக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். சரியான தேச சரித்திரத்தில், அந்தத் தேச மக்களின் சமூக வாழ்க்கை முறை, இலக்கியம், கலை, மனோவளர்ச்சி முதலியவைகளின் விவரமும் எழுதப்படவேண்டும்; அவர்களின் அரசியல் நிர்வாகத் திறமை பற்றிய விவரமும் அந்தச் சரித்திரத்தில் விவரிக்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட சரியான சரித்திரத்தில்தான், தேசத்தில் வசிக்கும் ஜனங்களைப்பற்றிய எல்லா விவரங்களும் இருக்க முடியும். ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் வாழ்ந்த விதம், அவர்களிடையே தோன்றி

உன்னதமான ஐதீகங்களுக்கு வழிகாட்டிய மகா புருஷர்கள், அவர்களின் சாதனைகள், தேசத்தின் அமைப்பாலும் பொருளாதார நிலைமையாலும் ஜனங்கள் பாதிக்கப்பட்ட விதம், அந்த ஜனங்களின் வாழ்க்கையைப் பாதித்த அரசியல் மாறுதல்கள், அவர்களுடைய இயற்கைக்கொத்த சமூக ஸ்தாபனங்கள், மனோதத்துவங்கள், அவர்களுடைய உயர்ந்த கலைகள், இலக்கியங்கள், அவர்களின் கூட்டுறவை வளர்த்த அல்லது கெடுத்த இயக்கங்கள், அவர்களிடையே ஐக்கியத்தைத் தூண்டிய நல்லுணர்ச்சிகள்—இவை யாவுமே கட்டாயமாக ஓர் உண்மைச் சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். ஒருநாட்டு ஜனங்களுக்குப் பல விதமான விருப்பு வெறுப்புக்கள் இருக்கும். அந்த விருப்புவெறுப்புக்களின் மூலமே அவர்களுடைய சமுதாய மனோபாவமானது வாழ்க்கையின் பல துறைகளிலும் வெளிப்பட்டு உருவாகியிருக்கும். அதன் மூலம் ஓர் ஒற்றுமையும் உண்டாகிறது. இந்த விருப்பு வெறுப்புக்களை ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கூறுவதும் ஒருதேச சரித்திரத்தின் கடமையாகும். இந்தியாவைப்பற்றி அப்படிப்பட்ட ஒரு சரித்திரம் இன்னும் எழுதப்படவில்லை.

நம்முடைய இன்றைய சரித்திரங்கள் நமக்குப் பிரதிகூலமான முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்திய நோக்குடன், நமது நாட்டில் நடந்த சம்பவங்கள் ஆராயப்படவில்லை. முக்கியமான விஷயங்களை விட்டு விட்டுச் சில சம்பவங்களையே அதிகமாக வளர்த்தி எழுதியிருப்பதால், நமது தேச சரித்திரத்தின் உண்மையான உருவம் மாறுபட்டுப் போயிருக்கிறது.

உதாரணமாக, சமீபத்தில் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையார் வெளியிட்ட "இந்திய சரித்திரச் சுருக்கம்" என்னும் நூலை எடுத்துக்கொள்வோம். அதன் முதல் பாகம், கி. மு. 2000 வருஷத்திலிருந்து கி. பி. 1000 வருஷம் வரையில் உள்ள காலத்தைப்பற்றியது. இதை அவசரமாக 201 பக்கங்களில் முடித்திருக்கிறார்கள். ஜனங்களைப்பற்றி ஒன்றுமே அதில் எழுதப்படவில்லை. ஆனால், இந்தியாவின் பொது வாழ்க்கைக்குச் சம்பந்தப்படாத சில அரசர்களைப்பற்றியும், அவர்களின் வெற்றிச் செயல்களைப்பற்றியுமே அதில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது.

இரண்டாம் பாகமோ இந்தியாவின் தேச சரித்திரமே அல்ல. இந்தியாவை முஸ்லிம்கள் கைப்பற்றிய விவரங்களே அதில் அடங்கியுள்ளன. அதுவும், அந்த முஸ்லிம்களே எழுதிவைத்த மூலநூல்களை ஆதாரமாகக்கொண்டே எழுதப்பட்டிருக்கிறது. அந்நியர்களை எதிர்த்து, பிறகு, அவர்களைத் தேசத்தின் வாழ்க்கையுடன் ஐக்கியப்படுத்திய இந்திய மகாஜனங்களின் சரித்திரமா இது? தேசத்தில் அந்நியர் வந்து படையெடுத்த காலங்களில் இந்தியர்கள் என்ன செய்தார்கள், முஸ்லிம்களின் வருகையால் இந்தியாவில் ஏற்பட்ட பரஸ்பர நாகரிக ஒற்றுமை எப்படி வளர்ச்சியுற்றது என்பவைகளைப்பற்றி, அதில் ஒன்றையும் காணோம்.

மூன்றுவது பாகம் 421 பக்கங்கள் கொண்டதாக இருக்கிறது. ஏனெனில், அது பிரிட்டிஷ் ஆட்சியை வர்ணிக்கும் பாகம் அல்லவா! இந்தியாவை ஐரோப்பியர் ஜயித்த வரலாறு என்றே இதைச் சொல்லலாம். புத்தகத்திலேயே மொத்தம் 908 பக்கங்கள் இருக்கின்

றன. அவைகளுக்குள் 386 பக்கங்களில் கி. பி. 1740-ஆம் வருஷத்திலிருந்து கி. பி. 1920-ஆம்ஆ வரை பிரிட்டிஷாரின் 'மகத்தான' சாதனைகளைப் பற்றியே எழுதப்பட்டுள்ளது. சென்ற 150 வருஷங் களாக உண்மையான இந்தியா என்ன நிலைமையில் இருந்தது, இந்தக் காலத்தில் இந்தியர்கள் என் னென்ன இன்பதுன்பங்களை அனுபவித்தார்கள், அந் நியரின் கூட்டுறவால் எப்படிப்பட்ட விளைவுகள் தோன்றின என்பதைப்பற்றி எல்லாம் இந்தப் புஸ்த கத்தில் இல்லை. இந்தச் சரித்திராசிரியர் இந்தியா வுக்கு வெளியிலேயே நின்றுகொண்டு, இந்தியாவுக் குப் பிறர் என்ன சாதித்தார்கள் என்பதை மட்டும் விவரிக்கிறார்! இந்தியாவுக்குள் என்ன நடந்தது, அல்லது இந்தியா பிறருக்கு என்ன செய்தது என் பவைபற்றியெல்லாம், அவர் கவனிக்கவில்லை. இதுவா இந்துதேச சரித்திரம்?

இப்படிப்பட்ட தவறுகள் ஏன் ஏற்படுகின்றன? சரித்திர ஆசிரியர்கள், தாங்கள் எழுதப்போவது இந் தியாவின் ஜயாபஜயங்களைப் பற்றி அல்ல இந்தியா வைப்பற்றித்தான் என்பதை மறந்து, பிறர் இந்த நாட்டை ஜயித்ததுபற்றிய அந்நியரின் வர்ணனை களுக்கு அனுவசியமான மதிப்புக் கொடுப்பதால்தான்.

இந்தியர்களைப்பற்றிச் சரியான முறையில் சரித் திரம் எழுதுவதற்குப் போதுமான ஆதாரங்கள் தற் போது இல்லை என்று சொல்லலாம். இந்தக் கூற்று ஓரளவு உண்மைதான். ஆனாலும், அந்நியர்களைப் பற்றிய விவரங்களை இந்துதேச சரித்திரத்தில் நுழைக் காமல் இருக்கலாமே? அவைகளை ஒரு தனிப்புத்தக மாக ஏன் எழுதக்கூடாது?

ஓர் உதாரணம் கொடுக்கிறேன்: மேலே சொல்லப்பட்ட இந்தப் புத்தகத்தில் மகத சாம்ராஜ்யத்தைப்பற்றி 27 பக்கங்களில் 'விவர'மாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், சில மாதங்கள்மட்டுமே இந்தியாவிலிருந்து கடைசியில் இந்தியாவுக்கு நிரந்தரமாக ஒன்றும் சாதிக்காத ஒரு கிரேக்கனின் படையெடுப்பைப்பற்றி 7 பக்கங்கள் இருக்கின்றன! கடைசி 175 பக்கங்களில், 1858-ஆம் வருஷத்திலிருந்து 1919-ஆம் வருஷம்வரையில், பிரிட்டிஷ் சர்க்காரின் நிர்வாக அறிக்கைகளுடைய சாராம்சமே காணப்படுகிறது. இந்தப் பக்கங்களில் **தாதாபாய் நௌரோஜியைப்பற்றி** ஒரு வார்த்தைகூட இல்லை. மகாத்மா காந்தியின் பெயரும் ஒரே ஒருதரந்தான் வந்திருக்கிறது. அப்பொழுதும், அவரை 'மிஸ்டர் காந்தி' என்று ஆசிரியர் அழைத்திருக்கிறார். இப்படி எழுதுவதால், நமது தேச சரித்திரமே மாறுபட்டுக் காண்கிறது அல்லவா?

---

12. சரித்திர காலப் பிரிவுகள்

சரியான சரித்திர நோக்கு அடியில் கண்ட முறைகளால் தான் ஏற்பட முடியும்:

1. இந்தியாவிலேயே கிடைக்கும் ஆதாரங்களைத் தான் முதலில் கவனிக்க வேண்டும்.
2. அந்நிய நாட்டில் கிடைக்கும் ஆதாரங்களை, இந்திய ஆதாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தனித்த ஓரிரு சம்பவங்களைப் பற்றி நிறைய ஆதாரங்கள் அகப்படும் ஓரே காரணத்தைக் கொண்டு, அவைகளுக்கு அனுவசியமாக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.
3. தேச சரித்திரத்தின் காலப் பிரிவுகள் சரியான முறையில் செய்யப்பட வேண்டும்.

சரியான முறையில் பிரித்தோமானால் எப்படி இருக்கும்? பிரிக்கும் காலங்களுள் ஒவ்வொரு கால ஆரம்பத்திலும் புதிய சக்திகளும் நிலைமைகளும் வரத் தொடங்கியிருக்கும். இந்தப் புதிய சக்திகளும் நிலைமைகளும் அந்தக் காலத்தில் தேசத்தைப் பெரிதும் பாதித்து நிற்கும். அந்தக் கால முடிவில் இந்தப் புதிய சக்திகளும் நிலைமைகளும் தங்களுடைய வேகத்தை யிழந்து மறைய ஆரம்பிக்கும். எனவே, மக்களின் வாழ்க்கையை உருவகப்படுத்துகிற பல்வேறு சக்திகளும் நிலைமைகளும் தோன்றி மறையும் பல காலங்களாகவே தேச சரித்திரம் பிரிக்கப்பட வேண்டும். ஜனசமூக வாழ்க்கைக்குச் சம்பந்தம் இல்லாத, ராஜ வம்ச மாறுதல்களைக் கொண்டு மட்டும் தேச சரித்திரத்தைப் பிரிக்கக் கூடாது.

முதல் பிரிவு

[ஆரியர்களின் வருகை—புதிய நாகரிகத்தின் ஜனனம்]

இந்த முதல் பிரிவு **திவோதாஸன்** நாளிலிருந்து **சிசுநாகன்** நாள்வரை நீடித்திருக்கிறது. நாம் நம்முடைய பழைய கால ஐதிகங்களை அலட்சியம் செய்வதால், நம்முடைய நாகரிகத்துக்கு அஸ்திவாரம் நாட்டப்பட்ட இந்த முதல் பாகத்தை மிகவும் சுருக்கமாக எழுதி விடுகிறார்கள். இதைச் சரியான முறையில் எழுத, தற்போது ஏராளமான ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்த முதல் பாகம் சராசரி 1000 வருஷ காலத்தின் சரித்திரமாயிருக்கும். இந்தக் காலத்தில் சமூகத்தின் ஒன்றுபட்ட உணர்ச்சி நன்றாகத் தெரிகிறது. இந்தக் காலத்தைப்பற்றி எழுதுபவர், ஆரியர்களைப்பற்றி முதலில் எழுதுவார். பிறகு, ஜனங்களின் சமயத்தைப் பற்றியும், சமூக வளர்ச்சியைப் பற்றியும், ஜனங்கள் ஒன்று கூடிக் கலந்தது பற்றியும், ஜாதி வேற்றுமைகள் தோன்றியதைப் பற்றியும், ஆரியர்கள் தெற்கே பரவியதைப்பற்றியும், எழுதுவார். இப்படி எழுதுகையில், ஆரிய நாகரிகத்துக்கும் திராவிட நாகரிகத்துக்கும் ஏற்பட்ட சமரஸத்தைப் பற்றியும் கூறுவார்.

இரண்டாவது பிரிவு

[இந்தியாவின் முதல் சாம்ராஜ்யம்]

இந்தப் பிரிவு, கி. மு. ஏழாவது நூற்றாண்டில் ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சிசுநாகன் முதல் ஆரம்பித்து கி. மு. 147-ஆம் ஆண்டு அரசு புரிந்த **புஷ்யமித்திரனுடன்** முடியும்; இந்த 500 வருஷத்தில், பல ராஜ

வம்சங்கள் ஆண்டிருந்தாலும், தேசம் ஒரே சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது. இந்தச் சாம்ராஜ்யத்தை நிர்மாணித்த **பிம்பிசாரர், அஜாத சத்ரு, சந்திர குப்தன், அசோகன், புஷ்யமித்திரன்** முதலானவர்கள், வெறும் போர்வீரர்கள் மட்டுமல்ல; சாம்ராஜ்ய அமைப்பிலும் புகழ் வாய்ந்தவர்கள். கிருஹ்ய சூத்திரங்களும் புராண இதிகாசங்களும் தோன்றியது இக்காலத்தில் தான். மனுமுதல் யாக்ஞவல்கியர் வரையில் வந்த ஸ்மிருதிகளும், பாணிணி முதல் பாஸ கவி வரையில் நிகழ்ந்த மொழி வளர்ச்சியும் இக்காலத்துக்கே உரியவையாகும். இந்தக் காலத்தில் இந்தியர்களுக்குப் பொதுவான அரசியல், சமூகம், மதம் முதலியவைகளும் வளர ஆரம்பித்தன. பாரசீகர்களும் கிரேக்கர்களும் படையெடுத்ததும், இந்தக் காலத்தில் தான். ஆனால், அவை முக்கிய சம்பவங்கள் அல்ல. புஷ்யமித்திரனின் மரணத்துடன் மகத சாம்ராஜ்யமும் அழிகிறது; இந்தப் பாகமும் முடிவடைகிறது.

இந்தப் பிரிவில், இந்திய ராஜ வம்சங்களைப் பற்றிச் சொல்வதற்குப் பதிலாக, இந்திய சமூக வாழ்க்கையின் தொடர்பான வளர்ச்சியைப் பற்றியே சொல்ல வேண்டும். அதாவது,

1. **தேசத்தில், தலைமை வாய்ந்த ஓர் அரசியல் இருந்தது.**
2. **இந்திய நாகரிகம் உலக நாகரிகமாகப் பரவியது.**
3. **கலை, இலக்கியம், தர்ம சாஸ்திரம் இவைகளின் மூலம் இந்திய நாகரிகம் வெளிப்பட்டது.**

4. சம்சார பந்தத்தைக் கடக்க, தத்துவ ஆராய்ச்சிகள் தொடங்கின; அதிலிருந்து மகத்தான ஜீவகாருண்ய இயக்கங்களும் தோன்றின.

சில சரித்திர ஆசிரியர்கள் பாரசீக அரசனுன டெரயஸ், இந்தியாவைப் படை யெடுத்ததை வர்ணிக்கிருர்கள். இந்தப் படை யெடுப்பால் நிரந்தரமான ஒரு பலனும் ஏற்படவில்லே. அந்த டெரயஸின் சிலா சாஸனங்களில் 'இந்தியா' என்று காணப்படுவது இந்தியா அல்ல; தற்காலத்துப் பஞ்சாப், ஸிந்து மாகாணங்களின் ஒரு சிறிய பாகமே. இந்தப் பாகம், நிரந்தரமாகப் பாரசீகரின் ஆளுகையில் இருந்ததுமில்லே. ஸிந்து நதியைக் கூட, டெரயஸ் கடக்கவில்லே.

அலெக்ஸாண்டரின் படையெடுப்பு, பஞ்சாப் பிரதேசத்தில் மட்டுந்தான் நிகழ்ந்தது. அங்குள்ள சில ஜனங்களேயே அவன் தோற்கடித்தான். பீயாஸ் நதி வரையில் வந்து விட்டு, மகத சாம்ராஜ்யத்துடன் போரிடாமலே அவன் திரும்பி விட்டான். பின்னர், அலெக்ஸாண்டரின் கிரேக்கப் படைகளேச் சந்திரகுப்தன் துரத்தி விட்டான். ஆகையால், இந்தக் கிரேக்கரின் படை யெடுப்புக் கூடக் கடைசியில் தோல்வியுற்ற ஒரு படை யெடுப்பே யாகும். சந்திரகுப்தன், பிறகு சக்கரவர்த்தியாகி, இந்தியாவை ஒரு குடை நிழலில் கொண்டு வந்தான்.

மூன்ருவது பிரிவு

[சர்வதேசத் தொடர்புகளும், நாகரிக வளர்ச்சியும்]

இந்தப் பிரிவு, கி. மு. 150-ஆம் ஞூ **சங்கர்களின் வீழ்ச்சியிலிருந்து ஆரம்பித்து, குப்த சாம்ராஜ்**

யம் ஏற்படும் வரை (320-கி. பி.) நீடிக்கிறது. இந்தக் காலத்தில் **சைவம், பௌத்தம், வைஷ்ணவம்** போன்ற பெரிய மதங்கள் வெளித் தேசங்களிலும் பரவின. நம் மக்கள் வெளிநாடுகளிலும் குடியேற ஆரம்பித்தார்கள். தலைமை பூணுவதற்காக, இந்தியாவுக்குள் அநேக ராஜ்யங்கள் சண்டையிட்டன. ஆந்திர சாம்ராஜ்யம் தோன்றிய காலமும் இதுதான். பல்லவ ராஜாக்கள் ஆதிக்கம் செலுத்திய காலமும் இதுதான். அந்நிய நாடுகளிலிருந்து வந்த **ஸகர்களும், குஷனர்களும்** இந்திய சமூகத்துடன் இரண்டறக் கலந்து விட்டார்கள். ஆகையால், இந்தக் காலத்தில் பொதுவான சாம்ராஜ்யம் ஒன்று இல்லாமல் போனாலும், இந்திய நாகரிகமும், மதங்களும் இந்தியாவுக்கு வெளியே பரவின.

நான்காவது பிரிவு

[இரண்டாவது சாம்ராஜ்யம்]

இந்தப் பிரிவு, கி. பி. 320-ஆம் ஷ பட்டத்துக்கு வந்த **சந்திர குப்தன்** என்னும் குப்த அரசன் முதல் ஆரம்பிக்கிறது. கி.பி. 650-ஆம் ஷ **ஹர்ஷ வர்த்தன**னின் மரணத்தோடு, இது முடிவடைகிறது. இந்தக் காலத்தில் குப்த அரசர்கள் ஆண்டார்கள். அதன் பின்பு, ஹர்ஷ வர்த்தனனின் வம்சம் ஏகாதிபத்தியம் செலுத்தியது.

இந்தக் காலத்தில், இலக்கியம், கலைகள், விஞ்ஞானம், சிற்பம் முதலிய துறைகளில், நமது நாடு மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறது. இதன் முடிவு வரையில் **குப்தர்கள்** நிர்மாணித்த சாம்ராஜ்யம் வடக்கே நிலை நின்றது. மத்திய பாகத்தில் **வாகாதகர்**

கள் ஆதிக்கம் செலுத்தினர்கள். தெற்கே **பல்லவர் கள்** ஆட்சி செலுத்தினர்கள். தென்னிந்தியாவிலும் கலை மறுமலர்ச்சி உண்டாயிற்று. அந்நிய தேசங்களுக்கு இந்திய நாகரிகம் பரவிக்கொண்டேயிருந்தது. இக்காலத்தில் **ஹூணர்களின்** தாக்குதல் ஒன்றைத் தவிர, வேறு அந்நியப் படையெடுப்பு எதுவும் ஏற்படவில்லை.

ஐந்தாவது பிரிவு

[சாம்ராஜ்யத்துக்காகப் போர்-நாகரிகம் தேக்கமுற்றது.]

கி. பி. 650-ஆம் ஆண்டு ஹர்ஷ சாம்ராஜ்யம் மறைந்ததும் இது ஆரம்பமாகி, கி. பி. 1175-ஆம் ஆண்டு **முகமத் கோரி**யின் முதல் இந்தியப் படையெடுப்புடன் முடிகிறது. இந்தக் காலத்தில், வட இந்தியாவில் **நேபாளத்**திலும், காஷ்மீரத்திலும் தனித்தனி ராஜாங்கங்கள் இருந்தன. **கன்யா** குப்**ஜத்**தில் கூர்ஜரப் பிரதீகாரர்களும், **வங்காளத்தில்** பாலர்களும், **மத்திய பாகத்**தில் ராஷ்டிரகூடர்களும், **தென்னிந்தியா**வில் சோழ பாண்டியர்களும் ஆட்சி செலுத்தினர்கள். இவர்களிடையே தலைமை ஆதிக்கத்துக்காகக் கடுமையான போர்கள் மூண்டன. இதனால் பல இடங்களில் மாகாண உணர்ச்சிகளும் விரோதங்களும் தோன்றின. இந்தக் காலத்தில் **கஜினி மாமூத்** இந்தியா மீது படையெடுத்து, வட மேற்கே ஒரு பாகத்தைக் கொஞ்ச காலம் கைப்பற்றி வைத்திருந்தான். ஆனால், இதனால் தேசத்தின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு விடவில்லை. எனினும், தேசத்தில் மதங்களும், இலக்கியம் முதலிய பல கலைகளும் வளர்ச்சி அடையாமல் தேக்கமுற்று விட்டன.

ஆறுவது பிரிவு

[எதிர்ப்பு உதயம்—நாகரிகத்தின் சிதைவு]

இந்தப் பிரிவு கி. பி. 1175-ஆம் ஸு **முகமத் கோரி**யின் முதல் இந்தியப் படை யெடுப்புடன் ஆரம்பித்து, கி. பி. 1399-ஆம் ஸு **தைமூர்** டில்லி ராஜ்யத்தை நாசமாக்கியதுடன் முடிகிறது.

இந்தக் காலத்தில் இந்திய அரசர்கள் அந்நியப் படை யெடுப்புக்களைத் தீவிரமாக எதிர்த்தார்கள். அந்நியர்கள் டில்லி ராஜ்யத்தை நிறுவினார்கள். ஆனால், அதைச் சாம்ராஜ்யமாக்க அவர்களால் முடியவில்லை. இந்திய நாகரிகத்துக்குப் புறம்பான புது அரசர்கள் இந்த நாட்டை ஆள ஆரம்பித்தார்கள். புதிய சமூக, நாகரிகப் பிரச்னைகள் கிளம்பி, சமரசப் படுத்தப் பட்டன. தென்னிந்தியாவில் **ஹொய்சாளர்களும், சோழர்களும்** ஆண்டார்கள். இப்பொழுது தான் விஜய நகர சாம்ராஜ்யமும் தோன்றியது. போர் முறையில் ஏற்பட்ட கொடூரமான மாறுதல்களால் ஜனங்கள் அவதியுற்று இடம் மாறினார்கள். நாகரிகமும் சிதைய ஆரம்பித்தது. இந்தியாவில் இதுவரையில் இந்தியர்கள் அனுஷ்டித்து வந்த நியதிகளை ஏற்றுக்கொள்ளாத ஒரு புதிய சமூகம் தோன்றியது.

ஏழாவது பிரிவு

[இந்தியாவின் மூன்ருவது சாம்ராஜ்யம்—கலையின் மறுமலர்ச்சி]

இது கி. பி. 1399-ஆம் ஸு ஆரம்பித்து, கி. பி. 1700-ஆம் ஸு முடிகிறது.

இக்காலத்தில் டில்லி ராஜ்யம் துண்டு துண்டாக உடைந்து போயிற்று. ஆயினும், ஹிந்துக்களும் முஸ்

லிம்களும் சமரஸமாகப் பழகினார்கள். ஹிந்தி பாஷை யும் இக்காலத்தில் தான் தோன்றியது. ராமானந்தரின் காலத்தில் ஆரம்பித்து, கபீர், குரு நானக், துளசிதாஸ், சைதன்யர், வல்லபர், மத்வேந்திரர் முதலியவர்களால் அந்நிய நாகரிக சாரம் கிரஹிக்கப்பட்டு, இந்திய நாக ரிகம், புதுமணம் வீசிக் கிளம்பியது. இந்திய மொழி களிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. மொகலாய சாம்ராஜ்யத்தில் அக்பரின் நாளில் இந்த மறுமலர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. மொகலாய சாம்ராஜ் யத்தின் ஆதிக்கம், ஹிந்து-முஸ்லிம் ஒத்துழைப்புட னேயே நடந்தது. மத வேற்றுமைகளால் ஜனித்த கட்சிகளே அதில் இல்லை. பொருளாதார வாழ்க்கை யும் புனருத்தாரணம் ஆயிற்று. அவுரங்க சீப்பின் மத வெறியால் மொகலாய சாம்ராஜ்யம் அழிந்தது.

எட்டாவது பிரிவு

[நாகரிகத்தின் சிதைவு—பிரிட்டிஷாருக்கும் ஹிந்துக்களுக்கும் ஆதிக்கப் போர்—இந்தியாவைப் பிரிட்டிஷார் ஜயிக்கிறார்கள்.]

இந்தப் பிரிவு கி. பி. 1700-ஆம் ஆண்டு ஆரம்பித்து, கி. பி 1857-ஆம் ஆண்டு முடிகிறது. கி. பி. 1674-ஆம் ஆண்டு அரசராக, சிவாஜி பட்டம் சூட்டிக் கொண் டார். கி. பி. 1675-ஆம் ஆண்டு சீக்கியர்களைக் குரு கோவிந்தசிங் ஒன்றுபடுத்தினார். கி. பி. 1681-ஆம் ஆண்டு மொகலாய சாம்ராஜ்யத்துக்கு விரோதமாக, ரஜ புத்ரர்கள் கிளம்பினார்கள். மொகலாய சாம்ராஜ்ய மும் சிதைவுற்றது. மராட்டிய ஹிந்துக்கள் தங்க ளுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த எத்தனித்தார்கள். ஆனால், அது கைகூட வில்லை. அந்நியர்களான பிரிட்டி

ஷார் தங்களது அதிகாரத்தை ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். அவர்களின் ஆதிக்கத்தை எதிர்க்க, கடைசி ராணுவ இயக்கமாக, சிப்பாய்க் கலகம் கி. பி. 1857-ஆம் ஆண்டு தோன்றியது. அதன் பின்பு பிரிட்டிஷார் இந்தியாவை முடிவாக ஜயித்து விடுகிறார்கள்.

ஒன்பதாவது பிரிவு

[தேசீய உதயம்—அந்நிய ஆதிக்கம்]

இந்தப் பிரிவு, கி. பி. 1858-ஆம் ஆண்டு ஆரம்பித்து இன்று வரை நடைபெறுகிறது. இந்தக் காலத்தில் நாட்டில் சமாதானத்தையும் தேச ஐக்கியத்தையும் தங்களது ராணுவ பலத்தைக் கொண்டு, பிரிட்டிஷார் நிலை நாட்டினார்கள். ஆனால், தேசத்தின் பொருளாதார வாழ்க்கை நலிவுற்றது. இந்தியாவுக்கும் மேனாட்டுக்கும் நாகரிகத் தொடர்பு ஏற்பட்டு, ஒரு புதிய மறுமலர்ச்சியும், நமது நாட்டில் உண்டாயிற்று. **ராம்மோஹன ராய்** தொடங்கி **மகாத்மா காந்தி** வரையில், அந்நியக் கலாச்சாரங்களைக் கிரகித்துக் கொண்ட புதியதொரு நாகரிக இணைபாடு பிறந்தது.

தேசத்தின் எல்லாப் பகுதிகளும், நவீன சாதனங்களால் ஒன்றுபட்டன. காங்கிரஸ் உதயத்தின் மூலம் தேசீய உணர்ச்சி பரவ ஆரம்பித்தது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட, இந்தியாவில் சுதந்தரப் போராட்டம் பலமுறை நடைபெற்றது. ஆனால், மாகாண வேற்றுமைகளும் சமூக வேற்றுமைகளும், அரசியலில் புக ஆரம்பித்தன. சர்வதேசத் தொடர்புகளும் அதிகரித்தன.

13. எதிர்ப்பு உதயம்

கி. பி. 712-ஆம் ஆண்டு முகமத்பின் காஸிம் என்னும் அரேபிய தளகர்த்தன், ஸிந்து மாகாணத்தின்மீது படை யெடுத்தான். அதன்பின், கஜினி மாமூத் இந்தியாவின் மீது படை யெடுத்தான். இந்த இரண்டு படை யெடுப்புக்களைப் பற்றியும் சரித்திராசிரியர்கள் நன்ருக அறிந்து கொள்ளவில்லை.

முகமத்பின் காஸிம், ஸிந்துவில் ஏற்படுத்திய அரேபிய அரசாங்கம் கி. பி. 871-ஆம் வருஷத்தோடு மறைந்தது.

கஜினி மாமூத்தின் படை யெடுப்புக்கள், வெறும் ராணுவச் சண்டைகளே யொழிய வேறென்றுமில்லை. தங்களுடைய எஜமானர்களைப் பெருமைப் படுத்துவதற்காக, மத வெறி கொண்ட முஸ்லிம் சரித்திராசிரியர்கள் இவைகளை மிகைப்படுத்தி எழுதியிருக்கிருர்கள். ஆனல், மாமூத்தை எதிர்த்த ஜயபால ராஜனின் பராக்கிரமமே நம்முடைய மனதைக் கவர்கிறது. தான் ஏராளமான படைகளுடன் வந்திருந்த போதிலும், பஞ்சாபின் ஒரு பகுதியைத்தான், மாமூத் பிடிக்க முடிந்தது. வட இந்திய அரசர்களின் ஐக்கிய பலம், அவனை எதிர்த்து முறியடித்தது. பிறகு, கி. பி. 1175-ஆம் வருஷம் வரையில் இந்தியாவில் அந்நியரின் படை யெடுப்பு இல்லாமலிருந்தது. மாமூத் இறந்த 15 வருஷங்களுக்குள், அவன் பிடித்ததில் பெரும் பகுதியும் திரும்பவும் இந்திய அரசர்களால் கைப்பற்றப்பட்டது.

மாமூத்தின் கூர்ஜரப் படையெடுப்பிலும் அவ னுக்குப் படுதோல்வி ஏற்பட்டது. அப்பொழுது கூர்ஜரத்தில் அரசு புரிந்த பீமன் என்ற பலமுள்ள அரசனுடைய படைகளின் சக்தியால், மாமூத்தும் அவனுடைய படைகளும் பாலைவனத்தின் வழியாகத் தப்பி ஓடும்படி நேர்ந்தது.

டில்லி ராஜாங்கம்

[கி. பி. 1186—1300]

இந்தக் காலத்தில் டில்லி ராஜ்யம் ஸ்தாபிக்கப் பட்டது. அது அந்நியர்களால் ஏற்பட்ட ஒரு ராஜ் யம். ஆகையால், முன்பு இருந்த ராஜ்யங்களைவிட அது பலவிதத்திலும் மாறுபட்டிருந்தது. இந்த ராஜ்யத் தின் முதல் அரசனான **குத்புத்தீன் ஐபக்** கி. பி. 1210-ஆம் ஆண்டு இறந்தபோது, டில்லி, ஆஜ்மீர் முத லிய சில இடங்களைக் கொண்டதாகவே இது இருந்து வந்தது. **இல்டட்மிஷ்** என்னும் அரசன் தன்னை எதிர்த்த இந்திய அரசர்களுடன் இருபத்தைந்து வருஷங்கள் கடுமையாகப் போரிட்டான். **அலாவுதீன் கில்ஜி, முகமத் தக்ளக்** இவர்களுடைய காலங்களில் தான் டில்லி ராஜ்யம் ஒரு சாம்ராஜ்ய நிலைமையை அடைந்தது. ஆனால், ஹிந்து அரசர்களும் டில்லி ராஜ்யத்துக்கு உட்பட்ட கவர்னர்களும் அவ்விருவரை யும் சதா காலமும் எதிர்த்துக்கொண்டேதான் இருந்தார்கள். கி. பி. 1398-ஆம் வருஷம், தைமூர் இந்தியா மீது படையெடுத்தான். அப்பொழுது டில்லி ராஜ்யம் பெரிதும் சிதைந்து போயிருந்தது என்றே சொல்லலாம். இந்த டில்லி ஸுல்தான்கள்

நடத்திய போர்களும் பிற காரியங்களும் மட்டுமே ஒருக்காலும் இந்துதேச சரித்திரம் ஆகிவிடமாட்டா. டில்லியைத் தவிர, வேறு ராஜ்யங்களும் இந்தியாவில் இருந்தன. அவைகளின் சரித்திரங்களைக் கூட, டில்லி ராஜ்யத்தின் சரித்திரத்தைப் போலவே பாவிக்க வேண்டும்.

இந்த அந்நியப் படையெடுப்புக்களில் நாம் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவையாவன :

1. இந்தியா இந்த அந்நியர்களை எதிர்த்த விதம்.

2. இந்தப் புதிய நிலைமையால் இந்திய சமூகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்.

தேசம் முழுவதும் டில்லி அரசர்களை எதிர்த்து நின்றது. அந்த எதிர்ப்புத்தான் இந்தியாவின் உண்மையான சரித்திரம். இந்தியரின் எதிர்ப்பு இரண்டு விதமாய் இருந்தது.

1. தங்களை வெல்ல வருவோருடன் ராணுவ முறையில் போரிட்டார்கள்.

2. இந்திய நாகரிகமும் சமூகமும் அந்நிய சக்திக்கு எதிராகப் போரிட்டன.

குத்புத்தீன் ஐபக், டில்லி ராஜ்யத்தை வென்றவுடன், அவன் அந்நியனாய் இருந்தாலும், ஓர் இந்திய அரசனாகவே மாறி விட்டான். இதே போல்தான், இல்டட்மிஷ்ஷும் மாறினான். டில்லி அரசர்களில் பலர், இந்தியர்களுடன் விவாக சம்பந்தங்கள் வைத்துக் கொண்டு, அடுத்த தலைமுறையில் தங்களது அந்நிய மனோபாவத்தையே இழந்தார்கள்.

டில்லி அரசர்கள் மதவெறியால் சண்டையிட்டதாகக் கூறப்படுவது கலப்பற்ற பொய். அவர்களுடைய ஆசை நாடு பிடிப்பதே யொழிய, இஸ்லாத்தைப் பரப்புவதல்ல. நாடுகளை அவர்கள் படையெடுத்த போது, ஹிந்துக்களுடைய உதவியையும் கோரினார்கள். ஹிந்து அரசர்களின் உதவியைப் பெறுவதற்காக, ஹிந்து நண்பர்களைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்வதில் ஊக்கம் காட்டினார்கள். அவர்களுடைய படையிலிருந்த அந்நியரும் மிகச் சிலர் தான். இந்தச் சில அந்நியர்களும் இந்தத் தேச மக்களுடன் நாளடைவில் கலந்து விட்டார்கள். டில்லி அரசாங்கத்துக்கு உட்பட்ட மாகாண கவர்னர்களும் ஹிந்துத் தலைவர்களின் உதவியைக் கொண்டு டில்லி ராஜ்யத்துக்கு விரோதமாகச் சுதந்தரத்தை அடைந்தார்கள். எனவே, இந்த முஸ்லிம் அரசர்கள், தங்களை அந்நியர்களாகப் பாவித்துக் கொள்ளவில்லை என்பதும், அழிக்க வேண்டிய சமூகமாக ஹிந்துக்களைக் கருதவில்லை என்பதும் தெரிய வருகிறது.

அலாவுதீன் கில்ஜிகூட, ஓர் இந்திய அரசன் தான். அவனுடைய நண்பர்களிலும் எதிரிகளிலும் ஏராளமான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இருந்தார்கள். அவன் கூர்ஜர தேசத்து ஹிந்து ராணியான கமலா தேவியை மணந்து கொண்டான். அவளுடைய முந்திய கணவனின் பெண்ணான தேவால தேவியைத் தன்னுடைய வேறு மனைவியின் மகனான கிஸ்ஸர்க் கானுக்கு மணம் செய்வித்தான். பெரோஸ் தக்ளக் என்னும் அரசன், ஒரு ரஜபுத்ரப் பெண்ணுக்குப் பிறந்தவன். மதம் மாறினவர்கூட உண்மையாய் மாறினவர் அல்ல. பிரிட்டிஷாரிடம் பெரிய பதவி

களைப் பெற, ஐரோப்பிய உடைகளை அணிந்து அவர்களது நாகரிகத்தைத் தழுவும் தற்கால இந்தியர்களைப் போலவே, அவர்களும் அந்தக் காலத்தில் செய்தார்கள். மதம் மாறிய பின்புங்கூட, தங்களுடைய பழைய ஹிந்துப் பழக்க வழக்கங்களையும், மனோபாவத்தையும் அவர்கள் விட்டு விடவில்லை.

ஆகையால், டில்லி ராஜ்யம் ஓர் அந்நிய ஆட்சி அல்ல. அதை ஆண்ட முஸ்லிம்கள், தங்களை அந்நியர்களாகக் கருதவில்லை. மத வித்தியாசந் தவிரப் பிற விஷயங்களில், அவர்களும் இந்தியர்களாகவே, மாறிவிட்டார்கள். அலாவுதீனுடைய தர்பாரிலிருந்த அமீர்க்குஸ்ரு என்ற பிரபல கவிஞன், ஹிந்துஸ்தானத்தைச் சொர்க்கத்துடன் ஒப்பிட்டிருக்கிறான். இந்த மூன்று நூற்றாண்டுகளாக, ஜனங்களின் வாழ்க்கையிலும் எவ்விதமான மாறுதலும் ஏற்படவில்லை.

இந்தக் காலத்தில், இந்தியா, அரசியலில் ஓர் ஐக்கியத்தை ஏன் அடையாதிருந்தது என்று கேட்கலாம்.

நமது அரசியல் முறை, சர்வாதிகாரங் கொண்டதல்ல. அரசாங்கம் சில காரியங்களையே செய்து வந்தது. மற்றவைகளை ஜனங்களே பார்த்துக் கொண்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராமாதிகாரியே கிராம விஷயங்களைக் கவனித்து வந்தான். ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்கள் ஜாதியின் நலன்களைக் கவனித்துக் கொண்டார்கள். பழமையான கால முதல் வந்த இவ்விதத் திட்டங்களை மாற்றுவதென்பது அரசனால் முடியாது. ஜனங்களை ரட்சிப்பதும், குற்றவாளிகளைத் தண்டிப்பதும், தர்மத்தைப் பரிபாலிப்பதுமே அவனது கடமை. சமூக

வாழ்க்கை ஒரு மாறுதலும் இல்லாமல் நடந்து வந்தது. யுத்தங்களின் கொடுமைகளால்கூடத் தேசத்தின் வாழ்க்கை சீர்குலையவில்லை.

யுத்தம் நேரிட்டாலும், தோற்றவனை வென்ற வன் அடியோடு அழித்து விடுவதில்லை; தோற்றவ னின் ராஜ்யத்தைக்கூட அபகரிப்பதில்லை. தோல்வி யுற்ற அரசன் கப்பங் கட்டினால் போதும். ஆகை யால், இந்த யுத்தங்களாலும் அதிக மாறுதல்கள் ஏற்படவில்லை. இந்தியா முழுவதும் ஐக்கியமாகி ஓர் அரசியலின் கீழ் இருக்க வேண்டிய அவசியமும், இந்தக் காரணங்களால் ஏற்படவில்லை. தேசத்தில் தோன்றிய சாம்ராஜ்யங்களும் அதிக காலம் நீடித் திருக்கவில்லை.

இப்படித் தேச முழுவதும் ஒரே சமூகமும், ஒரே நாகரிகமுமாக இருந்த காலத்தில் தான், அந்நிய நாக ரிகமும் சமூகமும் நம்மைச் சந்தித்தன. அதனால், ஒரு புது நாகரிகமும் புது மொழியும் பிறந்தன.

14. எதிர்ப்பின் ஆதிகர்த்தா

சீக்கிய குருவான குருநானக் பிறந்த நான்கானு சாஹெப் என்ற சிறிய ஊருக்கு நான் போயிருந்தேன். அந்த ஊரிலுள்ள *குருத்துவாரத்தில் 18-வருஷங்களுக்கு முன் ஒரு பயங்கர சம்பவம் நடந்தது. அந்த ஆலயத்தின் மகந்துவுக்கும் அகாலிகளுக்கும் (சீக்கியச் சீர்திருத்தவாதிகள்) ஒரு போராட்டம் நிகழ்ந்தது. ஆலயத்தில் அகாலிகள் நுழைவதை, அந்த மகந்து தடுத்தார். அப்படியும் ஆலயத்துக்குள் நூறு அகாலிகள் பிரவேசித்துவிட்டார்கள். உள்ளே ஓர் இடத்தில் அவர்கள் அசையாமல் உட்கார்ந்து கொண்டார்கள். இது மிகுந்த தீரச்செயல். ஏனென்ருல், இந்த நூறு அகாலி சத்தியாக்கிரகிகளையும் மகந்துவின் ஆட்கள் தங்களுடைய துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கினுர்கள். அப்பொழுதும், இருந்த இடத்திலிருந்துகொண்டே அந்த அகாலிகள் உயிர் இழந்தார்கள்.

இந்த நாட்டில் இருப்பவர்களில் சீக்கியர்கள் மிகவும் சிலரே; 40 கோடி மக்களில் 46 லட்சந்தான். ஆனுல், அவர்களுடைய கட்டுப்பாடும் வீர உணர்ச்சியும் வேறு எவருக்கும் இல்லை.

சீக்கியர்களுக்குப் பாகிஸ்தானின் உண்மை உருவம் நன்ருகத் தெரியும்! பாகிஸ்தானை அமைக்க முயற்சி செய்யப்பட்டால், அதை அவர்கள் எதிர்த்து வீரத்துடன் போராடுவார்கள்.

---

* குருத்துவாரம் — சீக்கியருடைய ஆலயத்தின் பெயர்.

15-ஆம் நூற்றுண்டில் இந்தியா அழிவுப் படுகுழியில் மெள்ள மெள்ள அமுங்கிக்கொண் டிருந்த போது, அதனுடைய நாகரிகம் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்துகொண்டிருந்தபோது, பல மகான்கள் நமது நாட்டில் தோன்றி, ஆபத்து விளைவித்த சக்திகளுக்கு எதிராக மக்களிடையே எதிர்ப்புச் சக்தியைத் தூண்டினர்கள். அவர்களுள் தலைசிறந்தவர் குரு நானக். அவரே, தீமையை எதிர்த்த பிரகாசமான சின்னமாகவும் விளங்கினர். அவர் சொல்கிறுர் :

> ''கழுத்தில் முத்துமாலை அணிந்தவர்கள் அடிமைச் சங்கிலிகளால் பிணிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகிறுர்கள்... ஆனல், கடவுளின் விருப்பத்துக்கு எதிராக மனிதன் நிற்கமுடியுமா ?... கடவுளை நம்புங்கள் ! பயப்படாதீர்கள்! நடுங்காதீர்கள் ! தீமையை எதிர்த்து மகிழ்ச்சியோடு உயிரிழக்க முன் வாருங்கள் !''

குருநானக் நம்முடைய பலவீனத்தைப் பலமாக மாற்றினர். 'உன் உயிர் போவதாய் இருந்தாலும், தீமையை எதிர்த்து நில்' என்ற அவருடைய சங்கநாதம், தேசத்தில் ஒரு புதிய உயிரையும் எதிர்ப்புச் சக்தியையும் கிளப்பியது. அவுரங்கசீப்பை எதிர்த்து, சீக்கிய குரு டேக்பகதூர், சத்தியாக்ரகம் செய்தார். குரு கோவிந்த சிங், சீக்கியர்களைப் போர்வீரர்கள் ஆக்கினர். இந்த எதிர்ப்பே மொகலாய சாம்ராஜ்யத்தையும் அழித்தது.

காந்திஜி நமக்குக் கற்பித்த சத்தியாக்கிரக முறையையே குருநானக்கும் சீக்கியர்களுக்கு உபதேசித்தார்.

நாம், அந்நிய ஆட்சியில், நிராயுதபாணிகளாக இருக்கிறேம். நம்முடைய எல்லைகளைப் பகைவர்கள்

வந்து எந்த நிமிஷமும் தாக்கக்கூடும். நம்முடைய ஐக்கியத்தைப் பிரிவினை வாதிகள் தாக்குகிறார்கள். இந்தக் காலத்தில் குருநானக்கின் உபதேசம் நமக்கு உணர்ச்சி அளிக்கும். அதை நாம் கடைப் பிடிக்க வேண்டும். தீமையைத் தீவிரமாக எதிர்ப்போம்; தீரமாகவும் எதிர்ப்போம். அப்பொழுதுதான் நாம் பிழைப்போம். இந்தியா துண்டாடப்படாமல் இருப்ப தற்கு, நாம் போராடுவோம். அதை ஐக்கியமாக வைத் திருப்பதற்காகவே, நாம் போராடுவோம். அப்படிச் செய்தால்தான், நாம் குருநானக்கின் உபதேசத்தை அறிந்தவர்களாவோம். **சகல விதமான தீமைகளையும் தளராமல் எதிர்ப்பது ஒன்றே நமக்குள்ள சுதி மோட்சமாகும்.**

15. எதிர்ப்பு மனோபாவம்

உலகத்திலுள்ள மதக்கிரந்தங்களில் பகவத்கீதையே முக்கியமானது. சங்கரர், ராமானுஜர் முதல் காந்திஜி வரையில் பலருக்கு, அது அமானுஷ்ய சக்தியை அளித்திருக்கிறது.

படித்த இந்தியர்களோ, தாங்கள் கீதையின் உபதேசப்படி நடந்தால், மூடத்தனம் நிறைந்த காட்டு மிராண்டிகளாக மதிக்கப்படுவோம் என்று தங்களை அறியாமலே நினைக்கிறார்கள். இந்தியாவின் உன்னத உபதேச ஒளி உலகத்தில் பரவிக்கொண்டே இருக்க வேண்டுமானால், இந்த மனோபாவம் நம்மிட மிருந்து ஒழியவேண்டும்.

எந்த மனிதனும் தன்னுடைய வித்தையைப் பற்றியும், சக்தியைப்பற்றியும் வெட்கப்படுவதில் லையே. அப்படியிருக்க, நம் உணர்ச்சிகள், சக்திகள் அனைத்துக்கும் அஸ்திவாரமாய் இருக்கும் கீதையைக் குறித்து, நாம் ஏன் வெட்கப்பட வேண்டும்?

கீதையில் பகவான் சொல்லுகிறார்:

> "ஏ! பார்த்தனே! பலவீனத்தை விட்டுவிடு; அது உனக்கேற்றதல்ல. இந்தக் கேவலமான கோழைத்தனத்தை உதறித் தள்ளிவிடு. பகைவர்களை ஜயிப்பவனே! மன உறுதியுடன் நிமிர்ந்து நில்."

இந்த வாக்கியங்களைப் படித்தவுடன், நம்மைப் பிடித்த பயமும் தானே ஓடிவிடுகிறது. நாமும் அர்ஜுனனைப்போல் சொல்லுகிறோம்:

"இதோ நான் மனஉறுதியுடன் நிற்கிறேன். என் சந்தேகங்கள் மறைந்தன. உன் கட்டளைப் படி யெல்லாம் நடக்கிறேன்."

நிலைமை மோசமாக மோசமாக, கீதையின் சக்தியும் அதிகரிக்கிறது. திடமனது உள்ளவர்கள் இதை அறிவார்கள். நம்மைப்போல் பலமிழந்தவர்கள், கீதையின் உபதேசத்தை ஏன் நாடக்கூடாது?

கீதையின் உபதேசத்தால், பலவீனன் பலமடைகிறான்; கர்வமுள்ளவன் பணிகிறான். அந்த உபதேசத்தை நம்புகிறவர்கள், மனிதர்களால் அடைய முடியாத தெய்விக சக்தியைப் பெறுகிறார்கள். அதன் உபதேசம் தனி மனிதனுக்கு மாத்திரமல்ல; சமூகங்களுக்கும் தேசங்களுக்கும் கூட வீரம் அளிக்கிறது.

கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, உன் முழு வலிமையுங்கொண்டு தீமையைத் தீவிரமாக எதிர்க்கவேண்டும் என்பதே கீதை காட்டும் பாதை.

முன்பு, அந்நியர்கள் இந்தியாவைத் தாக்கினார்கள். இந்தியாவின் சுதந்தரம், நாகரிகம் யாவுமே மறைந்துவிடும் தருவாயில் இருந்தன. அப்பொழுது, இந்தியாவுக்குப் பெருமையையும், சக்தியையும், எதிர்ப்பு மனோபாவத்தையும் கீதையின் உபதேசம் தான் கொடுத்தது.

ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி இந்த எதிர்ப்பு மனோபாவத்தைப் பலவீனப்படுத்தி விட்டது.

இன்று ஒரு கொடியோன், ஒவ்வொரு தேசத்திலும் ரத்தக்களறியையும் அடிமைத்தனத்தையும் புகுத்திக்கொண்டு, இந்தியாவையும் அணுகிவிட்டான். பொறுப்பற்ற ஓர் அதிகார வர்க்கம் நமது

மனப்பூர்வமான உதவியை மறுத்து, தேச சுதந்தரத்தை நசுக்கக்கூடிய சர்வாதிகாரம் கொண்டிருக்கிறது. தேசத்தில் சுதந்தர ஆட்சி நடக்கவேண்டுமெனப் பலர் விரும்புகிருர்கள். அதைத் துண்டுபோடவேண்டுமெனச் சிலர் எண்ணுகிருர்கள். மேல் நாட்டு நாகரிகம் நம்முடைய மனோ தைரியத்தை அழித்துவிட்டது. நாம் திக்கற்றவர்களைப்போல் நினைக்கிறோம்; அந்நிய உதவிக்காகக் கெஞ்சுகிறோம்; உதவி வரும் திக்கையே நோக்குகிறோம்.

அர்ஜுனன் முதலில் கொண்ட அதே மனோபாவத்தையே நாமும் கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில்தான் கீதையின் உபதேசம் நமக்கு நம்பிக்கை அளிக்கும் ஓர் எதிர்ப்புச் சக்தியாகிறது. அந்தச் சக்தியைக் கைக்கொண்டு, நாம் எப்படிப்பட்ட தீமையையும் எதிர்த்தாகவேண்டும் என்ற மனோபாவத்துடன் முன்னேறுவோம்!

16. ஜீவனுள்ள எதிர்ப்பு

இவ்வாரத்தின் முடிவுக்குள் நான் பிரிட்டிஷ் சர்க்காரால் கைது செய்யப்படுவேன்.* அதற்காக, நான் வருந்தப்போவதில்லை. ஆனால், நான் ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். நான் செய்யவிருக்கும் காரியம், காந்திஜீயின் கட்டளைப்படியிருந்தாலும், என்னுடைய சொந்த விருப்பத்துக்கும் இணங்கியதே. வேறு ஒரு வழியையும், என்னுடைய கடமை எனக்குக் காட்டவில்லை.

எதிர்ப்பு என்பது உலக இயல்பு. பலர் தங்களுக்கு விரோதமாய் இருப்பதை எதிர்க்கிறார்கள். இன்னும் பலர் தாங்கள் அநியாயம் என்று நினைப்பதை எதிர்க்கிறார்கள். நான் விரோதிப்பதை எதிர்க்கும்போது, என்னுடைய எதிர்ப்பு, வெறும் உணர்ச்சியால் மட்டுமே தூண்டப்பட்டதாய் இருக்கிறது. ஆனால், நியாய விரோதமானதை நான் எதிர்க்கும்போது, என்னுடைய எதிர்ப்பு ஆழ்ந்த கருத்துக்கொண்ட எதிர்ப்பு ஆகிறது.

இதைவிட இன்னும் உன்னதமான ஜீவனுள்ள எதிர்ப்பொன்று இருக்கிறது. மேன்மையானதும் அழகுள்ளதுமான ஒன்றை ஒருவன் நிர்மாணிக்க விரும்புகிறான். ஆனால், அவனுடைய நிர்மாணத்தைத் தடுக்க எழும் அந்நிய சக்திகளை அவன் எதிர்த்தால்தான், அவனுடைய நிர்மாணம் உண்மையாக முடியும்.

---

* திரு. முன்ஷி அவர்கள் சத்தியாக்கிரகப் போரில் 1940-ஆம் வருஷம் டிஸம்பர் நாலாந்தேதி கைது செய்யப்பட்டார்.

தன்னைப் பிறர் நம்ப வில்லை என்றே, தான் தாழ்ந்த ஜன்மமாகக் கருதப்படுவதாகவோ ஒருவன் உணருவானானால், அவன் இயற்கையாகவே எதிர்ப்பு உணர்ச்சி கொள்ளுகிறான். சுயமரியாதையுள்ள மனிதன், தன்னுடைய சுயமரியாதைக்கு விரோதமானதை எதிர்த்தே தீருவான்.

தெருவில் ஒருவன் ஊர்ந்து செல்லும்படி பலாத்காரமாகக் கட்டளையிடப்படுகிறான். தான் ஊர்ந்து செல்லாவிட்டால் தன் மண்டை உடைந்துவிடும் என்று அஞ்சி அவன் பணிந்துவிட்டால், அவனுடைய எதிர்ப்புச் சக்தியும் நசித்துப்போகிறது. இவ்விதமாக நாம் பணிவதால், நமக்குக் கஷ்டமே ஏற்படுகிறது.

ஆனால், அந்தக் கட்டளைக்குப் பணிவதை அவன் எதிர்த்தால், சரியான முறையில் எதிர்க்கவேண்டும். அதாவது, தான் சுயமரியாதையுள்ள ஒரு மனிதன் என்று மனதில் அவன் சங்கல்பித்துக் கொள்ளவேண்டும். அதற்கு விரோதமாக வரும் எண்ணங்களை யெல்லாம் மனதை விட்டு விரட்டிவிட வேண்டும். இப்படியாக, நாம் ஒவ்வொருவரும் தீமையை எதிர்க்கத் துணிந்தால், நம்மைக் கோழைத்தனம் ஏன் அணுகுகிறது ?.........மனிதர்களுக்கு எப்படியோ அப்படித்தான் தேசங்களுக்கும்.

தேசமக்கள் பெருமை அடையும் வழி, அவர்களுடைய இனம் அல்ல ; பாஷை அல்ல. ஆனால், தேச ஒற்றுமைக்காக, அதற்கு விரோதமானவைகளை யெல்லாம் அவர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பதால்தான் பெருமை அடைய முடியும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்தியாவும் இதே படிப்பினையை அறிந்துகொள்ள வேண்டும்.

இப்படிக் கோடிக்கணக்கானவர்கள், ஒற்றுமை மனேபாவங்கொண்டு சிருஷ்டிக்கும் சிருஷ்டிதான் இந்தியா.

ஒவ்வொருவனும் இந்தியத் தேசிய வாதியாகவே பிறக்கவில்லை. தன் மனதில் அப்படி ஆகவேண்டும் என்று சங்கல்பித்துக் கொள்வதாலேயே, ஒருவன் தேசிய வாதி ஆகிருன்.

பிரிட்டன் இன்று தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. ஆகையால், தன்னுடைய உதவியைத் தங்கு தடையின்றிப் பெறவோ, அல்லது தனக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுக்கவோ, பிரிட்டன் போரிடுவது இயல்புதான். ஆனுல், இந்தியர்களைத் தனது சமபங்காளிகளாக, அது மதிக்கவில்லை. எஜமானன் தன் வேலைக்காரனை வெறும் ஆயுதமாக உபயோகிக்கிருன். வேலைக்காரனே இனி வேலைக்காரனுய் இருக்க விரும்பவில்லை. தன்னையும் ஒரு தோழனுகப் பாவித்தாலொழிய, எஜமானனுக்கு உதவியளிக்க, அவன் சம்மதிக்கவில்லை.

இது கொஞ்சம் சங்கடமான விஷயந்தான் ஆனுல், உண்மையாயும் இருக்கிறது.

இந்தியாவைத் தன்னுடைய சமபங்காளி ஆக்கிக் கொள்ள பிரிட்டன் ஏன் மறுக்கிறது?

இந்தியர்கள் பலம் இல்லாதவர்களாகவும், ஒற்றுமை அற்றவர்களாகவும் கருதப்படுகிருர்கள். இதே காலத்தில், நம்மிடையே மதவேற்றுமைகளும், கட்சி வேற்றுமைகளும் அதிகரிக்கப்படுகின்றன; பழைய பிளவுகள் புதுப்பிக்கப்படுகின்றன; புதிய பிளவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்குக் காரணபூதர்கள் யார் என்று சொல்லவும் வேண்டுமா?

இந்த அபாய காலத்திலும், நம்முடைய வேற்றுமை களைக்கொண்டே நம்மை இதே அடிமை நிலையில் வைத்திருக்க முடியும் என்று பிரிட்டன் நினைக்கிறது.

பிரிட்டன் இந்த யுத்தத்தில் தோல்வியுற்ருல் அது உலகத்துக்கே பெரிய ஆபத்தாகும் என்றும், இந்தியா இந்த யுத்தத்தில் சம அந்தஸ்துடன் பிரிட்ட னுடன் தோளோடு தோள் நின்று போராடக்கூடும் என்று என்னைப்போல் பலர் நினைத்தார்கள்.

ஆனால், நடந்தது வேறுவிதம். தேசியத்துக்கு விரோதமான கூச்சல்களைப் பிரிட்டிஷார், இந்த நாட்டில் கிளப்பிவிட்டார்கள். வகுப்புவாதிகளுக்கு விசேஷ உற்சாகத்தை ஊட்டினார்கள். நாம் நேச பாவத்தோடு நீட்டிய கையை அவர்கள் உதறியெறிந் தார்கள். மத்திய சர்க்காரில் நாம் கலந்துகொண்டு பொதுஜன ஆதரவைப் பெறுவதை, பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் விரும்பவில்லை. அதனால் தான், நம் தேசியக் கோரிக்கைகள், தொடர்ந்து மறுக்கப்படு கின்றன.

அமெரி துரை கடைசியாக வெளியிட்ட அபிப் பிராயம், எதிர்காலத்தில் இந்தியாவைத் துண்டு போடுவதற்கு அனுகூலமாய் இருக்கிறது.

இந்தியாவை அடிமையாகவே வைத்திருக்கவும், அடிமையைப் போலவே நடத்தவும் பிரிட்டன் விரும்புகிறது. ஆகையால் நமக்கு இரண்டே வழிகள் தான் இருக்கின்றன. ஒன்று, அதற்குப் பணிவது; அல்லது, அதை எதிர்ப்பது—இந்த இரண்டில் ஒன்று தான் நமக்கு முன்னிருக்கும் நிச்சயமான வழிகள்.

பணிந்தால், தேசம் அதோடு அழிந்துபோகும்; பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் தன் இஷ்டப்படி விரட்

டும். ஆத்ம சக்தியற்ற அடிமைகளாகத்தான் நாம் இருக்க வேண்டிவரும்.

எதிர்ப்பது என்று வைத்துக் கொள்வோம். பல தியாகங்களால் இந்தத் தேசத்தின் ஒற்றுமை உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒற்றுமையை உடைக்க எத்தனிக்கும் சந்தர்ப்பங்களுக்கு இந்தியர் இடங் கொடாமல், எதேச்சாதிகாரத்தைத் தீவிரமாக எதிர்க்கவேண்டும். அப்பொழுதுதான் தேசத்தில் ஐக்கியம் நிலைபெறும்; நாம் சுதந்தரத்தைப் பெறவும் முடியும். இந்த லட்சியங்களுக்காக, நாம் நம்முடைய உடல், பொருள், ஆவி முதலிய எல்லாவற்றையும் தியாகம் செய்யும் மனோபாவத்துடன் போராட முன் வர வேண்டும்.

உலகம் மலர்வதற்காக ஆதிபுருஷன் தன்னையே ஆகுதி செய்து கொண்டதாக, ரிக் வேதத்தில் ஓர் உயர்ந்த செய்யுள் கூறுகிறது. கிறிஸ்தவ மதத்துக்காக, பழைய காலத்துக் கிறிஸ்துவர்கள் சிலுவையில் மாண்டார்கள்; சிங்கங்களுக்கும் இரையானார்கள். இவ்விதக் கஷ்டங்களை யெல்லாம் தைரியத்தோடும் புன்னகையுடனும் அவர்கள் வரவேற்றார்கள். இன்று பிரிட்டன் கூட, தனக்கு நேரும் எல்லாவிதமான கஷ்டங்களையும் எதிர்த்து நிற்கவில்லையா ?...

இப்படிப்பட்ட எதிர்ப்பு இல்லாவிட்டால், வாழ்க்கையே ஒரு நரகம் ஆகிவிடும். இந்த எதிர்ப்புத் தான், ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பலம் அளிக்கும் சஞ்சீவி. ஆகாய விமானங்களின் மூலமோ அல்லது பீரங்கிகளின் மூலமோ இந்த எதிர்ப்பு நடைபெறாது. ஆத்மத் தியாகத்தின் மூலமே இது நடைபெறும். இந்த எதிர்ப்பே, ஜீவனுள்ள எதிர்ப்பாக இருக்க

முடியும். புதிய உலகத்தைச் சிருஷ்டிப்பதும், இந்த எதிர்ப்பே. உலகத்து மக்களிடையே இன்று நிலவி நிற்கும், அடிமை-ஆண்டை, வெள்ளை நிறம்-கறுப்பு நிறம், ஏழை-பணக்காரன் ஆகியவைபோன்ற எல்லா வேற்றுமைகளையும் களைந்துவிடும் சக்தி இந்த எதிர்ப்பிலேதான் இருக்கிறது.

'ஜய முண்டு, பயமில்லை' என்ற கோஷத்துடன் இந்த எதிர்ப்பை நம்மிடையே வளர்த்து, வீர சுதந்தரக் கோவிலை நாம் விரைவில் அடைவோம்!

17. நான் அறிந்த அஹிம்சை

நான் ஒரு காங்கிரஸ் வாதி என்ற முறையில் என்னிடம் காந்திஜீ எதிர்பார்க்கும் அஹிம்சை முறையை, நான் ஒப்புக்கொள்ளவில்லை. அதனுல் அஹிம்சையையே கைவிட்டுவிட்டேன் என்ருே, காங்கிரஸுக்கு விரோதி ஆகிவிட்டேன் என்ருே எவரும் நினைக்கக்கூடாது. 1939-ஆம் வருஷம், "நான் மகாத்மாவைப் பின்பற்றுகிறேன்" என்ற புத்தகத்தை எழுதினேன். கடவுளிடத்தில் உள்ள நம்பிக்கையாலேயே ஜீவித்துக்கொண்டிருக்கும் மகான் என்று காந்திஜீயை அதில் வர்ணித்திருந்தேன். அப்பொழுது என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தேனே அதே அபிப்பிராயத்தைத்தான் காந்திஜீயைப் பற்றி இன்னமும் நான் கொண்டிருக்கிறேன். ஏனெனில், எனக்கு இன்றுவரை ஏற்படும் ஆத்மீக சந்தேகங்களை யெல்லாம் அவரே தெளிய வைத்துக்கொண்டிருக்கிருர்.

*மே மாதம் 26உ நான் அவருக்குக் கடிதம் எழுதியபோது, அவருடைய அன்புக்கு மிகவும் பாத்திரமாகவே இருந்தேன். அந்தக் கடிதம் எழுதிய போதும், நான் சேவாக் கிராமத்தில் இருந்தபோதும்,

---

* 1941-ஆம் வருஷம் மே மாதம் 16-உ திரு. முன்ஷி காங்கிரஸிலிருந்து ராஜீனமாச்செய்தார். அச்சமயம் காந்திஜீக்கு அவர் ஒரு கடிதம் எழுதினர். அதில், " வகுப்புக் கலகங்கள், இனிமேல் அடிக்கடி நேரிடலாம். யுத்தம் இந்தியாவை அணுகினலும், பிரிட்டிஷ் சர்க்காரின் போலீஸ் முறை பலவீனம் அடைந்தாலும், கலகங்கள் அதிகரிக்கும். இந்தியாவைப் பலாத்காரமாகத் துண்டாட

"கடவுளே சத்தியமென்ருல், நான் அசத்திய வாதியாக இருக்கக்கூடாது" என்று நான் எண்ணினேன். எனக்கு எது உண்மை என்று தோன்றுகிறதோ, அதன்படி நான் நடந்தால்தான், காந்திஜீயின் சிஷ்யனுய் இருக்க எனக்கு அருகதை இருக்கும் என்று சென்ற மார்ச்சுமீ உணர்ந்தேன்.

நான் காந்திஜீயை விட்டுப் பிரிந்தபோது என்ன நடந்தது என்பதை, ஓர் உதாரணத்தால் குறிப்பிடுகிறேன். தம்முடைய சிஷ்யனுன ராமானந்தர் பக்தி முறையைப்பற்றித் தமக்கு மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டிருப்பதை ஸ்ரீராமானுஜர் அறிந்ததும், அவரைக் கூப்பிட்டு, ஆசீர்வதித்து, "உமது வழியையே நீர் பின்பற்றும்" என்று அருளினுர். இதே போலத்தான், நான் காந்திஜீயைப் பிரிந்த சமயத்திலும் நடந்தது. பெரிய மகான்களின் மனமே பரந்த நோக்குடையது அல்லவா!

நான் அஹிம்சையைக் கொள்கையளவிலே ஒப்புக்கொள்ளுவதாக, காந்திஜீ தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அது உண்மை. மனே வாக்குக்

முயற்சித்தாலும், இந்தக் கலகங்கள் இன்னும் அதிகரிக்கலாம். இப்படி, காலிகளின் செய்கைகள் அதிகரிக்கும்போது, தற்காப்புக்காக, கட்டுப்பாடான எதிர்ப்பு அவசியமான கடமை ஆகிவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது......அவ்வாறு தற்காப்புக்காக எதிர்க்கவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளாத எந்த முறையிலும், எனக்கு நம்பிக்கையில்லை" என்று திரு. முன்ஷி எழுதியிருக்கிருர்.

இதன்பின் வெளியிட்ட தமது அறிக்கையில், காந்திஜீ "காங்கிரஸ் ஓர் அஹிம்சா ஸ்தாபனமாக இருப்பதால், அஹிம்சையை முற்றிலும் ஒப்புக்கொள்ளாத ஒருவருக்கு அதில் இடமில்லை. ஆகையால், திரு. முன்ஷி காங்கிரஸை விட்டு விலகுவது சரிதான்" என்று கூறியிருக்கிருர்.

காயத்தில் ஒருவன் அஹிம்சா வாதியாக இருந்தால், அவனை அனைவருமே நேசிப்பார்கள். அதனால், அவன் மக்களிடையே நீடித்த அன்பையும், செல்வாக்கையும் பெறுகிறான். அதேவிதம் சமூகங்களும் அஹிம்சை முறையைக் கடைப்பிடித்தால், அவைகளுக்கும் செல் வாக்கு அதிகரிக்கும்.

ஆனால், அஹிம்சையை அறிந்துகொள்ளுவது என்பது ஒரு விஷயம்; அதன்படி நடப்பது என்பதோ வேறு விஷயம். உதாரணமாக, பிரம்மசரியம் மிகவும் சிறந்தது என்று நான் அறிவேன். ஆனால், பிரம்ம சரியப் பிரதிக்ஞையை என்னால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஒருவன் தன்னுடைய பொருள்களை யெல்லாம் தியாகம்செய்துவிடுவது மிகவும் உயர்ந்தது என்று நான் அறிவேன். ஆனால், என் உடைமைகளை யெல்லாம் தியாகம் செய்துவிட, நான் தயாராய் இல்லை. இதேபோல்தான், எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் அஹிம்சாவாதியாக இருக்க என்னால் முடியவில்லை.

1914-ஆம் வருஷம், கெய்ரா ஜில்லாவில் பிரிட் டிஷ் ராணுவத்துக்கு ஆள் திரட்ட, காந்திஜீயே சென் றிருந்தார். 1941-ஆம் வருஷம் தாம் எல்லா யுத்தங் களையும் எதிர்ப்பதாகவும், தேசத்துக்குள்ளேயாவது வெளியிலாவது ஹிம்சையை உபயோகிக்கவே கூடா தென்றும் அவரே சொல்கிறார். முன்னிலும் மிக மேலான ஆத்மீக நிலைக்கு அவர் முன்னேறியிருப்பது தான் இதன் காரணம். 1937-ஆம் வருஷம், மாகாணங்களில் மந்திரிசபைகளைக் காங்கிரஸ் ஏற்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், இன்றோ, ஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட அதிகா

ரத்தைக் காங்கிரஸ் செலுத்துவதையே அவர் அடியோடு வெறுக்கிருர். இந்த உலகத்தில் மனித சாத்தியமான அளவுக்கு அஹிம்சையின் வெற்றியைக் காண, கடவுளால் அனுப்பப்பட்ட தூதர் அவர். நாளுக்கு நாள் மேலெழுந்து முன்னேறிக்கொண்டிருக்கும் அந்த மகாயோகி, எந்த நிலையிலும் அஹிம்சா வாதியாக இருக்கவே துணிவார். சத்தியமும் அஹிம்சையுமே அவருடைய தெய்வம். அந்தத் தெய்வத்தை மனிதர்களுக்கு விளக்கிக் காட்ட, அவர், சமயம் நேரிட்டால், ஆத்மத்தியாகம் செய்து கொள்ளவும் துணிவார்.

ஆனல், சாதாரண மனிதன், அஹிம்சையைக் கடைப்பிடித்தாலும், எச்சமயத்திலும் ஹிம்சையைக் கைவிட்டுவிட ஒப்புக்கொள்ளமாட்டான். மௌலான ஆஸாத், ராஜாஜீ, சர்தார் பட்டேல் முதலியோர் பூனவில் எவ்வித மனப்பான்மையைக் காட்டினர்கள்? இந்தியாவில் ஒரு தேசிய சர்க்கார் ஏற்படுத்துவதாயின், யுத்தத்தில் கலந்துகொள்வதாகவே அவர்கள் சொன்னர்கள். எனவே, தன் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவுக்குத்தான் ஒருவன் அஹிம்சையை ஒப்புக் கொள்ள முடியும் என்பது தெளிவாகிறது. வேண்டுமென்றே ஹிம்சையை அவன் அனுஷ்டிக்க மாட்டான். கோபம், அல்லது பயம் ஏற்பட்டாலுங்கூட, அவன் ஹிம்சையை அனுஷ்டிக்க மாட்டான். ஆனல், வருஷக்கணக்காகக் கடுமையான பயிற்சிபுரிந்து உன்னத நிலையை அடைந்தாலொழிய, அஹிம்சை என்பது அவன் மனத்தில் உள்ள ஓர் எண்ணமாக மட்டுமே இருந்து வரும்.

நான் முன்பு சொன்ன புஸ்தகத்தை எழுதும் போதுதான், நானே இந்த உண்மையை அறிந்து கொண்டேன். சாத்வீக எதிர்ப்பின்மூலம் தேசம் சுதந்தரம் அடைந்தவுடன், பலாத்காரமே நமது நாட்டில் தென்படாது என்று நினைப்பது தவறு என்று அந்தப் புத்தகத்திலேயே, நான் எழுதியிருந்தேன். இந்தியா அஹிம்சையால் விடுதலை பெற்ற பிறகும் பலாத்காரத்தால் அடக்கப்படவேண்டிய பல இந்தியர்கள் இருந்துதான் தீருவார்கள் என்றும் நான் அந்தப் புத்தகத்தில் சொல்லியிருந்தேன். சர்வதேச முறையில் அஹிம்சை அனுஷ்டிக்கப்பட்டாலும், நான் சொல்வது பொருந்தும். மனிதவர்க்கம் முழுவதுமே ஓர் அரசாங்கத்தின் கீழே கொண்டுவரப்படும் வரையில், அரசாங்கத்தின் பலாத்கார முறைகள் மறைய முடியாது.

மனித சமூகத்தின் பெரும்பகுதி இன்றுள்ள நிலையில், ஒவ்வொருவனுக்கும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை இருந்துதான் தீர வேண்டும்.

எனக்குத் தோன்றிய பிரச்சினை இதுதான். நான் அஹிம்சையை வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு கோட்பாடாகவே, மதிக்கிறேன். ஆனால், இப்பொழுதுள்ள நிலைமையில், உள்நாட்டுக் கலகங்கள் நடந்தாலும் அந்நிய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தாலும், காந்திஜீ விதிக்கும் மிகவும் கஷ்டமான நிபந்தனைகளை நான் முழுவதும் அனுஷ்டிக்க முடியுமா?

வழியில் போகிறவனைக் குத்திக் கொல்ல, ஒரு காலி எத்தனிக்கிறான்; அல்லது, ஒரு பெண்ணின் கற்பைக் கெடுக்க எத்தனிக்கிறான்; அல்லது, அவளைக் கவர்ந்து செல்ல எத்தனிக்கிறான். அப்பொழுது, நான்

அந்தக் காலியின் மண்டையில் அடித்து, பலாத்காரத்தால் அவனைத் தடுக்காமல் இருக்க முடியுமா? நான் வசிக்கும் தெருவைக் காலிகள் தாக்குகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, அந்தத் தெருவில் உள்ள வாலிபர்களை யெல்லாம் ஒன்று திரட்டி, நம் வசமுள்ள ஆயுதங்கள் அனைத்தையும் உபயோகித்து, நம் வீடுகள், மனைவி மக்கள் எல்லோரையும், நான் காப்பது அநியாயம் ஆகுமா? இந்தத் தேசத்திலுள்ள ஜனங்கள் கோழைகளாக இருக்கிறார்கள். காலிகளை எதிர்க்கத் தற்காப்பு முறைகளைக் கற்றுக் கொள்ளும்படி, ஹிந்துக்கள், முஸ்லிம்கள் யாவரையும் நான் கேட்டுக் கொள்ளக் கூடாதா? ஓர் ஆலயமோ அல்லது ஒரு மசூதியோ ஒரு கலகக்காரக் கோஷ்டியால் தாக்கப் படுகிறது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள் யாவரும் சேர்ந்து, எந்த முறையை வேண்டுமாயினும் கையாண்டு, அவர்களை விரட்ட வேண்டாமா? இந்த யுத்தத்தினால், நம் தேசத்தின் அமைதிக்கு அபாயம் வருகிறது. அப்பொழுது பலாத்கார முறையையும் கடைப்பிடித்து, நாம் ஜனங்களைப் பாதுகாக்க வேண்டாமா?

நான் சொன்னவை யெல்லாம் வெறும் தர்க்க வாதங்கள் அல்ல; நம்மை இப்போது எதிர்நோக்கி நிற்கும் உண்மையான பிரச்சினைகளே ஆகும்.

நான் மனப்பூர்வமாக என் மனதைச் சோதித்துக் கொண்டேன். காங்கிரஸ்காரர்களிடம் காந்திஜீ எதிர்பார்க்கும் அளவு அஹிம்சை என் மனதில் இல்லை என்று நான் கண்டு கொண்டேன். எனக்குப் புரிந்த வரையில், அஹிம்சை என்றால் ஹிம்சையே கூடாது என்று அர்த்தமல்ல. சில சமயங்களில்,

பலாத்காரத்தை நாம் அனுமதித்தாக வேண்டியிருக்கிறது; ஏன், அதை உபயோகிப்பதே நமது முக்கியமான கடமையும் ஆகிறது. நாம் செய்யும் கடமையை, பயம், குரோதம், பொருமை இவைகளின்றிச் செய்கிறோம். அப்படிக் கடமையைச் செய்யும்போது, ஹிம்சையைக் கையாளும்படி நேர்ந்தாலும், நாம் செய்யும் காரியம் ஹிம்சை அல்ல என்றே நினைக்கிறேன்.

சத்தியாக்கிரகம் வல்லமையுள்ள ஓர் ஆயுதந்தான். இந்த முறையைக் கையாண்ட மகாத்மா காந்திக்கு, உலக சரித்திரத்திலேயே நிரந்தரமான கீர்த்தி ஏற்பட்டுள்ளது. சத்தியாக்கிரக முறையில் ஒருவிதத் தவறும் இல்லை. ஆனால், குறைபாடுகள் உள்ள மனித சுபாவந்தான், இம் முறையை அனுஷ்டிக்க இயலாத நிலையில் இருக்கிறது.

தன் வீட்டையோ, ஆலயத்தையோ, நாட்டையோ, பலாத்காரமாகத் தாக்குபவர்களிடமிருந்து, பலாத்காரத்தைக் கொண்டே அவைகளைக் காப்பாற்ற, கடமையை உணர்ந்த ஒருவன் முயன்றால், அவனை நாம் ஏன் சத்தியாக்கிரகி என்று அழைக்கக் கூடாது?

நான் அஹிம்சையில் அதிக நிபுணன் அல்ல. அந்த முறையில் வியாசர், பதஞ்சலி, காந்திஜீ இம் மூவருக்கும் நான் மாணவனே யாவேன். ஆனால், எனக்குப் புரியும் பொருள் அர்த்தமற்றது என்றால், பகவத் கீதையும் அர்த்தமற்றது என்றே தோன்றுகிறது.

காந்திஜீ உபதேசிக்கும் மேன்மையான தத்துவங்களை நான் அனுஷ்டிக்கவே விரும்புகிறேன். அவைகளுக்கு, நான் அதிக மதிப்புச் செலுத்துகிறேன்.

ஆனால், என்னால் அவைகளைப் பூராவும் அனுஷ்டிக்க முடியவில்லை. நான் அனுஷ்டிக்கிறேன் என்று சொல்வதும் உண்மையாகாது. இதற்குக் காரணம் அதை உபதேசிக்கும் மகான்களின் பிசகு அல்ல; அந்தத் தத்துவத்தின் பிசகும் அல்ல. என்னுடைய சொந்த பலவீனமே. "கதிரவன் தன் ஒளிக் கதிர்களை வைரக் கல்லின் மீதும் மண்ணாங்கட்டியின் மீதும் ஒரே மாதிரிதான் வீசுகிறான். ஆனால், வைரம் மாத்திரமே அந்தக் கதிர்களை எதிரொளி வீசுகிறது" என்றான் மகா கவி பவபூதி. நானோ அந்த மண்ணாங் கட்டியைப் போன்றே யிருக்கிறேன்.

என் செய்கையைப் பாராட்டி, எனக்குப் பலர் எழுதியிருக்கிறார்கள்; சிலர் கண்டித்து மிருக்கிறார்கள். எனக்கு இரண்டும் வேண்டாம். அவர்கள் எனக்காகக் கடவுளிடம் பிரார்த்திக்கட்டும்.

18. அகண்ட ஹிந்துஸ்தான முன்னணி

பல காங்கிரஸ்காரர்கள் நான் கொண்டுள்ள அபிப்ராயத்தையே தாங்களும் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸை விட்டு ராஜீநாமாச் செய்து விடலாமா என்று என்னைக் கேட்கிறார்கள். அதைக் குறித்து, நான் என்ன சொல்லுவது? காந்திஜீயே தம்முடைய அறிக்கையில் காங்கிரஸ் வாதிகளின் கடமையைத் தெளிவாக்கி யிருக்கிறார். மனச் சாட்சியால் பாதிக்கப்படும் காங்கிரஸ் வாதிகள், காந்திஜீயின் உதவியையே நாடட்டும்.

சுயராஜ்யக் கட்சியை மறுபடியும் புதுப்பிக்கும்படி என்னைச் சில காங்கிரஸ் வாதிகள் கேட்கிறார்கள். காங்கிரஸை விட்டு, அந்தச் சுயராஜ்யக் கட்சியில் சேர அவர்கள் விரும்புகிறார்கள். சட்டசபை வேலைத் திட்டம் (Parliamentary programme) அமுலில் இல்லாமலிருக்கும் போது, சுயராஜ்யக் கட்சியின் அவசியம் எப்படி ஏற்படும்?

என்னுடைய உடனடியான பிரச்சினை இது தான். யுத்தத்தின் வேகம் அதிகரிக்கிறது. தேசத்தில் வகுப்புக் கலகங்கள் நடக்கின்றன. இவ்விரண்டு விஷயங்களாலும், இந்தியாவின் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டு வருகிறது. உடனேயே இதற்குத் தகுந்த பரிகாரங்களை நாம் தேடாவிட்டால், நமக்குப் பெருத்த அபாயம் நேரிடும். ஐக்கிய இந்தியாவின் ஒற்றுமையையும், அமைதியையும் காக்க எண்ணுவோர்கள், இந்தியாவைப் பிரிவினை செய்யும்

போசனைக்கு எதிராகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டும். பல சமூகங்களின் தலைவர்கள் பிரிவினை யோசனையைக் கண்டித்திருக்கிறார்கள். இச் சமூகங்களெல்லாம் தேசத்தின் பொதுஜன அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றன. இவைகளெல்லாம் இன்று ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

புதிய சீர்திருத்தங்களைப்பற்றி யோசிப்பதற்கும் அபிப்பிராயம் திரட்டுவதற்கும் இதுவா சமயம்? அல்ல என்பதை நாம் மறந்து விடுகிறோம். இப்பொழுது வகுப்புரிமைப் பிரச்சினைகளைப்பற்றி விவாதிப்பதில் என்ன லாபம்? உலகத்தின் எதிர்கால அரசியல் எப்படி இருக்குமோ என்பதை எவரே அறிவார்? இந்தியாவில் பிறந்த அல்லது குடியேறிய ஒவ்வொரு ஹிந்துவுக்கும், முஸ்லிமுக்கும், சீக்கியனுக்கும், பார்ஸிக்கும், கிறிஸ்துவனுக்கும், ஐரோப்பியனுக்கும் இன்றைய முக்கியமான தேவை ஐக்கிய இந்தியாவே. ஆகையால், இவர்கள் யாவரும் ஒப்புக் கொள்ளும், அகண்ட ஹிந்துஸ்தான முன்னணியையே, தற்போது திரட்ட வேண்டும். இந்த முன்னணியைத் திரட்டினால்தான், நாம் அமைதியாகவும், பத்திரமாகவும் வாழ வழி ஏற்படும்; இந்த யுத்த காலத்தில், இந்தியாவில் உள்நாட்டு அமைதியும் நிலவி நிற்கும். இதற்காக, நான் பலருடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் போதுமான ஆதரவு கிடைத்தால், நமது லட்சியம் வெற்றி பெறுவது அசாத்தியம் அல்ல!

முற்றிற்று.

சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளியநடையில் வெளியிட எழுந்தனவாகும்.

"ஏ! இந்திய வாலிபனே! பயத்தை விட்டுவிடு. பிறர் நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிறார்கள். உன்னை மன்றாடுகிறேன்: அனல் கக்கும் எரிமலையின் மீது உன் நகரங்களை நிர்மாணி. உறுதியாய் நில். வானத்தை முட்டும்படி தலை நிமிர்ந்து நில். யுத்தத்தால் தளர்ந்து போன உலகத்துக்கு இந்தியாவே வழிகாட்டப் போகிறது. இந்தியா ஒருநாளும் இறவாது; நீ அதைக் காப்பாற்றுவாய்."

சக்தி காரியாலயம்

காரைக்குடி — மதுரை